ஏப்ரல் 2017

ඔලිඅරසි

OLIARAZI

மாதாந்த குடும்ப சஞ்சிகை

# ஒளி அரசி


ஒளி 04 இதழ் 04

ரூபா 75

மங்கையரின் தோழி

பக்கங்கள் : 104 (72 + XII + 12 + VIII)





பல்துறை கலைஞர்



உரமாகும் கல்வி



மேலிருந்து ஒரு மடல்



நாவல் நாயகி

## மூளைச்சலவைக்கடன் - வேலையற்ற பட்டதாரிகள் சாத்தியமான தீர்வுகள்

பெண்மையும் உண்மையும் Free உயிர்வரை இனித்தாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவியரங்கு கையேடு, தரம் 5 மொழிபெயர்ப்பு வினாத்தாள், போட்டிப்பரீட்சை வழிகாட்டி





# தனியார் துறையில் சாதனை

## வியாபார துறையில் மிளிரும் ஜி.எச்.ஏ.டி. சில்வா அன் கோ

வவுனியாவிலுள்ள பிரபல்யமான நிறுவனமான ஜி.எச்.ஏ. டி. சில்வா அன் கோ நிறுவனத்தில் தொடர்ந்து 50வருடங்களுக்குமேல் (1966 முதல் 2016வரை) சேவையாற்றிக் கொண்டிருக்கும் திரு. சுப்பிரமணியம் நித்தியானந்தன் அவர்களின் சேவை நலனைப் பாராட்டி கௌரவிக்கும் வகையில் ஜி. எச். ஏ. டி. சில்வா அன் கோ நிறுவனமும் வவுனியா வர்த்தகர் சங்கமும் இணைந்து நடாத்திய பொன் விழா நிகழ்வு நிறுவனத்தின் உரிமையாளர் திரு. சி. ஞான சம்மந்தன் அவர்களின் தலைமையில் ஓவியா விருந்தினர் விடுதியில் அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின்போது திரு. திருமதி நித்தியானந்தன் தம்பதியினருக்கு மாலை அணிவித்து வரவேற்கப்பட்டு வவுனியா வர்த்தகர் சங்கத் தலைவர் திரு. ரி. கே. இராஜலிங்கம் அவர்களால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது. ஜி. எச். ஏ. டி. சில்வா அன் கோ நிறுவனத்தின் உரிமையாளர் திரு. சி.ஞானசம்மந்தன் அவர்கள் நினைவுச் சின்னம் வழங்கி வைத்தார். பிரபல தொழிலதிபரும் சைவ நெறிப்புலவருமான திரு. எஸ். இராமசாமி அவர்கள் வாழ்த்து மடல் வழங்கியதுடன் நிறுவனத்தின் பணியாளர்கள் அனைவரும் வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரைக் கீற்றுக்கள்

பருவவெளியீட்டுப்பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

திட்டமிடல்
சிறப்புக் கவிகள்
மேலிருந்து ஒரு மடல்
உண்மை சம்பவம்
நட்சத்திர இல்லத்தரசி
நீங்கள் நலமா?
வரலாற்று ஆளுமை
இலக்கிய முத்து
கலை வளர்ப்போம்
சம்பாஷணை
அதிசய உண்மை
கழுகுப் பார்வை
மாமியார் - மருமகன்
நட்சத்திர ஜோக்



## சித்திரை புது வருட வாழ்த்துக்கள்

அரசியின் உதவிக்கரம்
இல்லறம் இனித்திட
ஆசையிருந்தால் நீந்தி வா
குட்டீஸ் மூலையும் மூளையும்
பார்ப்போம் பழகுவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சித்திரை புது வருட
வாழ்த்துக்கள்

திட்டமிடல்

# வெற்றிகரமான தொழில் திட்டமிடல் படிமுறைகள்



ஆர்.ஜனதன் BBA

வாருங்கள், மறவாமல் குறிப்போம்

**1** உங்களை பற்றி அறியுங்கள்

**2** உங்களுக்கு ஏற்ற வாய்ப்புக்களை ஆய்வு செய்யுங்கள்

**3** ஆய்வில் சிறந்ததற்கு இலக்கு வையுங்கள்

**4** இலக்கை அடைய திட்டம் ஒன்றை வரையுங்கள்



1 — 2 — 3 — 4 — 5 — 6 — 7

## முதலாம் வாரம்

1 உதாரணம்: மூத்த மகனின் கிளினிக் 10.00 am

01 - உலக முட்டாள் தினம்
07 - உலக சுகாதார தினம்

ஏப்ரல்

8 — 9 — 10 — 11 — 12 — 13 — 14

## இரண்டாம் வாரம்

15 — 16 — 17 — 18 — 19 — 20 — 21 — 22

## மூன்றாம் வாரம்

22 - புவி தினம்

ஏப்ரல்

23 — 24 — 25 — 26 — 27 — 28 — 29 — 30

## நான்காம் வாரம்

23 - உலக புத்தக தினம்
29 - சர்வதேச நடன தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதம ஆசிரியரின் பேனா முனையிலிருந்து

# நிரந்தர வெற்றி

## மனங்களை வெல்வோருக்கு மட்டுமே



சித்திரை புது வருட
வாழ்த்துக்கள்





அன்பான வாசகர்கள்
அனைவருக்கும்
இனிய புதுவருட
வாழ்த்துக்களைத்
தெரிவிப்பதில்
மகிழ்வடைகின்றோம்.

**ந**கர்கின்ற காலஓட்டத்தில் நகர்ந்து மறைகின்ற சில விடயங்கள் பற்றி பதிவிடுவதன் அவசியத்தில் இப்பதிவினைத் தருகின்றோம். இன்றைய காலத்தில் நாட்கள் ஒவ்வொன்றும் இயந்திரமயமானதாய் மாறிக்கொண்டிருக்கின்றது. அடுத்தவரின் எண்ணங்களையோ மனதையோ பற்றிச் சிந்திக்காமல் தான், தன் சொந்தம், தன் உறவுகள், என்று என்று வாழும் ஒரு நிலையே உள்ளது. அதிலும் சுய நலம் என்பது அதிகமாய் ஆட்டிப்படைக்கின்றது என்றால் யார்தான் மறுக்கமுடியும்?

பிறப்புக்கும், இறப்புக்கும் இடையே, நாம் வாழும் வாழ்வு அர்த்தமானதாக இருக்க வேண்டும். வாழ்ந்தோம் எனும் சொல்லுக்கும், வாழ்வு எனும் சொல்லுக்கும் ஒரு சிறப்பான அர்த்தம் இருக்கிறது. ஏதோ வாழ்ந்தோம் என்றில்லாமல், பலருக்கும் அர்த்தமாக, உதாரணமாக வாழ்ந்தோம் என்று, வாழ்வு இருக்க வேண்டும்.

நம் வாழ்க்கை அர்த்தமானதாக அமைய வேண்டுமெனின் நாம் சமூகத்தோடு இணைந்தவர்களாக பயணிக்கவேண்டும். அதாவது முதலில் எம்மைச்சுற்றியுள்ளவர்களின் மனங்களை வெல்லத்தெரிந்தவர்களாக இருக்க வேண்டும். குடும்பம், வீடு, அலுவலகம் என அனைத்திற்குமே இது பொருத்தமானதாக அமையும். மனங்களை இணைப்பதும் பிரிப்பதும் நாம் பேசுகின்ற வார்த்தைகளே ஆகும். வார்த்தைகளை வடிகட்டி வழங்குவதன் மூலம் பரஸ்பரம் உறவுகளை சிதைக்காது பாதுகாக்கமுடியும். உன்னதமான தருணங்களை அனுபவிக்கமுடியும். வாழும் காலத்தில் மட்டுமன்றி காலங்கள் கடந்தும் காவியமாக வாழ்ந்துகொண்டிருக்கமுடியும்.

அன்பினால் உலகை ஆண்ட பெருந்தகையே அன்னை தெரசா. இவரது வாழ்வில் நடந்த ஒரு சம்பவத்தை நோக்கும் போது அன்பின் தன்மை எத்தகையது என்பதையும் வார்த்தையின் மகத்துவத்தையும் அனைவராலும் புரிந்துகொள்ளமுடியும். ஒரு சமயம் அன்னை தெரசா அவர்கள் தனது இல்லத்து குழந்தைகளுக்கான உணவிற்காக நிதி சேகரிக்கும் பொருட்டு பல தனவான்களைச் சந்திக்கச் சென்றாராம். அதில் ஒருவர், விடயத்தைக் கேட்டதும் அன்னையை கோபமாகப் பார்த்து இந்தா எனக்கூறி அன்னையின் கோர்த்திருந்த கைகளில் துப்பிவிட்டாராம், அவ்வேளையிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறாத புன்னகையுடன் நின்றிருந்த அவர், வறி, எனக்கானதை தந்துவிட்டீர்கள், இனி குழந்தைகளுக்கான நிதியைத்தாருங்கள் என்றாராம்.

விறைத்துப்போன அம்மனிதர் பெருந்தொகை ஒன்றைக் கொடுத்து அவரிடம் மன்னிப்புக்கேட்டுச் சென்றதுடன் அதன் பின்னான காலங்களில் சமூகசேவைக்காக தனது நிதியில் பெருமளவான தொகையைச் செலவு செய்தார் எனவும் கூறப்படுகின்றது. அச்சந்தர்ப்பத்தில் அன்னை தெரசா அவர்களின் வாயில் இருந்து வந்த வார்த்தையானது எத்தகைய ஒரு அன்பின் வெளிப்பாடு என்பதை எம்மால் உணரமுடிகிறது அல்லவா?

அவர் தனக்காக அவ்வாறு நடக்கவில்லை, தான் அளவு கடந்து நேசித்த சேரி மக்களுக்காகவும் ஏழைக் குழந்தைகளுக்காகவுமே அவ்வாறு நடந்து கொண்டார்.

இவரின் மனதை வெல்லும் கலையே இவர் நோபல் பரிசு பெறவும் காரணமாக இருந்தது. வெற்றியை பூரணமாகவும், நிரந்தரமாகவும் அனுபவிக்க மனதை வெல்லும் கலை என்பது எவ்வளவு அவசியம் என்பதை இதன்மூலம்அறியலாம்.

பல அரச திணைக்களங்களினதும், தனியார் நிறுவனங்களினதும் தோல்விகளுக்கும் மனதை வெல்லும் கலையை தலைமை அதிகாரிகள் சரிவர அறிந்திருக்காமையே காரணம் எனவும் கூறலாம். குறிப்பாக அரச சொத்தே எனும் பொறுப்பற்ற மனநிலையால் சில அரசியல்வாதிகளின் அசமந்த போக்கால் அரச திணைக்களங்களில் உள்ள ஊழியர்கள் சரியாக கையாளப்படாமை, தனியார் துறைகளில் வியாபாரம் தொடர்பான போதிய அறிவின்மை (வியாபார இலக்கையும், ஊழியர் மனநிலையையையும் சமனிலைப்படுத்துதல்) முதலீட்டாளர்கள் ஊழியர்கள் மனதை வெல்லும் பணியில் கோட்டை விடுதல் என்பவற்றால் இத்தவறு நடக்கிறது.

அரச அதிகாரியோ, தனியார் நிறுவன முகாமையாளரோ ஊழியர்களின் மனதை சரிவர வெல்லாவிடின் வீணடிக்கப்படுவது அரச சொத்தோ அல்லது முதலீட்டாளர்கள் சொத்தோ என்பதை என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

அரச சொத்து ஒன்று அழிந்துபோக அரச அதிகாரி உடந்தையாக முடியாது. எனவே அரச அதிகாரிகளோ/ தனியார் நிறுவன முகாமையாளர்களோ ஊழியர்களின் மனதை வென்று தமது அதிகாரத்தையும் சமநிலைப்படுத்தி கலந்து நடைமுறைப்படுத்தினால் வெற்றிகள் உறுதியாகவும், நிரந்தரமானதாகவும் இருக்கும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. எனவே சித்திரைப் புதுவருடத்திலிருந்து மற்றவர்களின் மனதை வென்று உங்கள் வெற்றியை உறுதிப்படுத்த முயல்வீர்களாக.

பிரதம ஆசிரியர்
யசோதை சரவணபவன்

உதவி (3)

## அரசியின் 'உதவும் கரம்' செயற்றிட்ட வரிசையில்




ஒளிஅரசியின் மார்ச் மாத உதவிச்செயற்றிட்டத்தின் மூலம் மீசாலையைச் சேர்ந்த தரம் 4 மாணவியான **விக்னராசா கனிநிலாவுக்கான** உதவித்தொகையானது யா/ நெல்லியடி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை **அதிபர் திரு. தேவராஜா** அவர்களால் நெல்லியடி ஒளியரசி அலுவலகத்தில் வைத்து மாணவியிடம் கையளிக்கப்பட்டது. இம்மாணவிக்கான உதவியை வழங்கிய **திரு.திருமதி சர்வானந்தன் (லண்டன்)** குடும்பத்தினருக்கு ஒளிஅரசி குழுமத்தின் சார்பில் நன்றியைத்தெரிவித்துக்கொள்கின்றோம். மேற்படி மாணவியின் தந்தையார் கடந்த யுத்தத்தின் போது காணாமல் போனோர் பட்டியலில் இருந்தும் இம் மாணவி கஷ்டத்தின் மத்தியிலும் தாயாரின் உதவியுடன் திறமைசாலியாக கற்று வருகின்றார்.

**தொடர்புகளுக்கு :**

E-mail : oliarazi33@gmail.com, 0114320695 - 0714 273035



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவேரத் சுந்தரி

ஆசைக்கொரு ஆதாம்கள்
மாறிக்கொண்டிருக்க - நான்
மட்டும் அதே ஏவாளாய்
ஒவ்வொரு இரவும்
முதலிரவுதான்- எனக்கு

லிப்டிக்ஸ் அடிக்கவுமில்லை
பவுடரு போடவுமில்லை
பார்வைக்கு அழகுமில்லை
கடிகாரம் கட்டவுமில்லை
காற்செருப்பை கண்டது கூடயில்லை
ஜாதிமல்லி சூடவுமில்லை
ஜாதகங்கள் பார்ப்பதுமில்லை
கெட்ட சகுணமென
கெடுதல்கள் ஏதுமில்லை
மணங்கள் வீசுவதில்லை
அம்மணங்களே சாட்சியாய்
அரங்கேறுகிறது முதலிரவு
சத்தங்கள் சலனங்களின்றி
அமைதியாய் அரங்கேறுகிறது முதலிரவு

அறியா பலரும்
அனுபவிக்கும் அதிஷ்டசாளி- ஆம்
அறியாதார் யாருமில்லை
திருமலையில்-என்னை

கட்டி அணைப்பவனை
உடும்பாய் ஒட்டிக்கொள்ளும்
கள்ளழகி நான்
கஞ்சியில்லா கந்தனுக்கும்
அரும்பு மீசை அசித்தவுக்கும்
முதிர்கொம்பு முஹம்மதுக்கும்
சற்றும் அருவருத்ததில்லை
சடைப்பிடித்த என்னுருவம்
சளைத்தவர்களில்லை அவர்கள்
ஆளுக்காள் சளைத்தவர்களில்லை

சாமத்தில் அவசரத்தில் செல்லும்
சாரதி அண்ணனுக்கும் - வீடு
செல்லும் வழியில் எட்டிப்பார்க்கும்
புட்சிடியாய் நான்

இரவில் என்னை
இதமாய் இசைத்திடும் இராணுவ ஐயாவின்
பார்வைக்கு பகலெல்லாம்
பைத்தியகாரி நான்

நிமிடத்துக்கொரு முறை பேச்சை மாற்றும்
அரசியல்வாதி ஏனோ
என்னை மட்டும் மாற்றுவதேயில்லை
ஆளும் வர்க்கமல்லவா-அவர்கள்
அதிகாரம் படைத்த ஆளும் வர்க்கமல்லவா

காக்கிச்சட்டையிட்ட காவல்நாய்களின்
கழுகு பார்வைக்கு மட்டும்
தப்பவா முடியும்?..- என்னை
துரத்தி பிடிக்கிறார்கள்-இவர்கள் தான்
ஊரைக் காக்கும் உன்னத பணியாளர்கள்

வட்டியுமில்லை வாடகையுமில்லை
வயிற்றை நிரப்ப வயிற்றில் வாங்கும்
வாயில்லா பலியாடு
முட்கள் மோதி மோதி
கிழிந்து போன சேலையாய்
-இப்மீபுடதெல்லாம்
வரும் முன்னே வாசல் திறக்கும்
வள்ளலாகிவிட்டேன் - நான்

உள்ளத்தை கல்லாக்கி உறுதியாய் தேடுகிறார்
உகந்த வழி எனக்கு - உளவளத்துணையாளர்
அரச சார்பற்ற அத்தனை அமைப்புக்களும்
அம்போவென கைவிட
ம்..ம்
அவர்களுக்கு மட்டுமே தெரியும் -என்னை
அடைத்துவைக்க முடியாதென்று -நான்
கூண்டுக்கிளியல்ல சுதந்திரக்கிளி

அள்ளிச் சென்றது அரச வைத்தியசாலை
கையெழுத்து பெறவுமில்லை
உரிமைக்கோர.ஒரு
ஆதாம் கூட வரவுமில்லை
அகற்றப்பட்டது அவசரமாய்
அசந்து போன என் கர்ப்பப்பை
ஆஅசந்து போனதா?...
ம்.. அத்தனை.சாதனை!!!
ஈரைந்தே ஆண்டுகளில் ஐவர்
(ஆங்காங்கே அநாதை இல்லங்களில்)
ஏழு அபோசன்கள்

கர்ப்பப்பை இல்லை தான்.
மார்தட்டி சொல்கிறேன்
உறக்கச் சொல்கிறேன்.
இங்கே.
ஜாதி வெறி பார்ப்பதில்லை
மதப்பிரிவு ஏதுமில்லை
ஏழை பணக்கார பிளவுமில்லை
சம உரிமையுண்டு -என்னிடத்தில் வரும்
ஈர(ன)மில்லா ஈழத்து புத்திரர்க்கு
சம உரிமையுண்டு
நடப்பது நல்லாட்சியல்லவா?....
இங்கே நடப்பது நல்லாட்சியல்லவா?....

காத்திருக்கிறேன் அதே கடற்கரையில்
கட்டுக்கடங்கா காளைகளுக்காய்
புத்தி ஏனோ எத்தனிக்கிறது
தாளத்தை மாற்ற
மனம் ஏனோ பழகிவிட்டது
பழைய அதே ராகத்திற்கு






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை சம்பவம்

# விழிப்புள்ள பெண்ணாய் மாறுங்கள்



விரைவான உலகிலே வேகமாக செயற்பட்டுக்கொண்டிருக்கின்ற மனிதனுக்கு பல தேவைப்பாடுகள் இருக்கின்றன. சில மனிதனுக்கு அவனது தேவைப்பாடுகள் உரிய வேளையில் நிறைவேறி விடுகின்றது. இன்னும் சிலருக்கு அது கிடைப்பதற்கு தாமதமாகலாம். சிலருக்கோ அவர்களது தேவைகள் எப்போது நிறைவேறுமென எதிர்பார்த்தே காலங்கள் கழிந்துவிடுகின்றன. அப்படியான நிலையில் உள்ளவர்கள் தங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்காதா என எதிர்பார்த்த வண்ணமே இருக்கின்றனர். இந்நிலையில் ஏதாவதொரு வாய்ப்பு வருவதாக அறிந்தால் அதனைத் தவறவிடக்கூடாது என்ற எண்ணத்தில் எதையுமே சிந்திக்காது அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்கிறான்.

அண்மையிலே குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தில் குடும்பப் பிரச்சினை ஒன்று தீர்த்து வைக்கப்பட்டது. அதாவது அயலவர்களின் தகவலின் அடிப்படையிலேயே இப்பிரச்சினை வெளிக்கொணரப்பட்டதனால் இப்படிப்பட்ட அயலவர்களாக நாமும் இருக்க வேண்டும் என்பதற்காக இச்சம்பவத்தை தருகிறேன். 42 வயதையுடைய 3 பிள்ளைகளின் தாய் ஒருவர் வேலைவாய்ப்புக்காக வெளிநாடு சென்றிருக்கிறார். இவரது கணவன் கூலி வேலை செய்பவர். குடும்பக் கஸ்டம் பொறுக்க இயலாமல் தனது மூன்று பெண் பிள்ளைகளையும் விட்டுவிட்டு வெளிநாடு செல்லத்துணிந்த இப்பெண் வெளிநாடு சென்று இரண்டு வருடங்கள் ஆகின்றன. சென்ற இடத்தில் எந்தப்பிரச்சினையும் இல்லை. உரிய நேரத்திற்கு சம்பளம் கிடைக்கின்றது. பிள்ளைகள் படிக்கிறார்கள். தொலைபேசியில் தினமும் முகம் பார்த்து கதைக்கிறார்கள். இவ்வாறு எல்லாமே சந்தோசமாக நடைபெறுகின்றது.

பிரச்சினை என்னவென்றால் மூன்று பிள்ளைகளும் பெண் பிள்ளைகள். முறையே 21, 16, 10 வயதுடையவர்கள். வீட்டிலே தந்தையுடன் தனியாகத்தான் இருக்கிறார்கள். வெளிப்படையாக பிள்ளைகளுக்கு எந்தப்பிரச்சினையும் இல்லை. இருந்தாலும் தந்தை மது அருந்தும் பழக்கம் உள்ளவர் என்பதால் அயலவர்களுக்கு இப்பெண்பிள்ளைகளை நினைத்து சற்றுக் கவலை. இவ்விடயத்தை பிள்ளைகளின் அம்மம்மாவிடம் எத்திவைக்க அவரும் பிள்ளைகளின் தந்தையிடம் பண்பாக வயது வந்த பெண் பிள்ளைகள் இவ்வாறு தனியாக இங்கு இருப்பது சரியில்லை அவர்களை எனது வீட்டில் வைத்துக்கொள்கிறேன் அல்லது நான் இங்கு வந்து இவர்களுடன் இருக்கிறேன் என பல தடவைகள் கூறியிருக்கிறார் ஆனால் தந்தைக்கோ அதில் சிறிதளவும் விருப்பமில்லை. பல தடவைகளும் அதனை அவர் மறுத்திருக்கிறார். குடும்பத்தவர்கள் வந்து பேச்சுவார்த்தை நடத்தியும் அவர் சம்மதிக்கவில்லை.

நாட்கள் நகர்கையில் வழமைபோல் இவர் குடித்துவிட்டு வந்து வீட்டிலே போடுகிற சத்தத்தை பயன்படுத்திய அயலவர்கள் பிள்ளைகளின் நலன் கருதி பொலிஸாருக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயத்தை அறிவித்து விட்டனர். சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் அவரைக்கைது செய்யும்போது அயலவர்கள் பிள்ளைகளின் பாதுகாப்பு விடயத்தையும் எத்திவைத்தனர். இரண்டுநாட்களின் பின்னர் இணக்கசபைக்கு சிபாரிசு செய்யப்பட்டு பிள்ளைகள் அம்மம்மாவின் பராமரிப்பிலே இருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. என்னவோ தெரியவில்லை அது பிள்ளைகளுக்கு பாரிய மகிழ்ச்சியைக் கொடுத்திருந்தது.

இச்சம்பவத்தில் பிள்ளைகளுக்கு வெளிப்படையாக எந்தவொரு பிரச்சினையோ துன்புறுத்தலோ நடக்கவில்லை. ஆனால் பிள்ளைகளை அம்மம்மாவின் பராமரிப்பில் விட தந்தை ஏன் விடவில்லை என்பதும் பிள்ளைகள் அம்மம்மாவிடம் சென்றதும் மகிழ்ச்சியடைத்ததும் சற்று சிந்திக்க வைக்கிறது. அது இறைவன் அறிந்த விடயம். ஆனால் குடும்பக்கஸ்டம் என்பதற்காக பிள்ளைகளின் நிலையினைச் சற்றும் சிந்திக்காது எதுவித பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யாது இப்படி வெளிநாடு சென்றுவிடுகிற பெண்களுக்கு தீர்வுதான் என்ன? இது போல எத்தனை பிரச்சினைகள் வெளியே வராமல் முடங்கிக் கிடக்கின்றன. பொருளாதரப்பிரச்சினைக்காக அதைவிடப்பெரிய பிரச்சனைகள் உருவாவதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்து விட்டு வீதிகளிலே நின்று உரிமை வேண்டிப் போராட்டம் நடத்துவதிலே என்ன பலன் இருக்கிறது.

இதில் குறிப்பிட்டுக் கூறவேண்டிய மிக முக்கியமான விடயம்தான் குறிப்பட்ட அயலில் இருபவர்கள் கரிசனை. அயலில் இருப்பவல்கள் யாரென்ரே தெரியாமல் வாழ்பவர்களுக்கு மத்தியில் பிள்ளைகள் மீது கரிசனை கொண்டு இவ்விடயத்தை பொலிஸார் வரையும் தைரியமாக கொண்டு சென்ற அயலவர்கள் கண்டிப்பாக பாராட்டப்பட வேண்டியவர்களே. எமது குடும்பத்திலே இவ்வாறான சந்தர்பங்கள் ஏற்படுகிறபோது கண்டிப்பாக பெண்கள் இச்சம்பவத்தை நினைவில் கொண்டு செயற்படுவதோடு எம் சமூகத்தில் இப்படியானவற்றைக் கண்டால் அக்கறையோடு அதனை உரிய இடத்திற்கு முறையிடும் வழிப்புள்ள பெண்ணாக ஒவ்வொருவரும் மாற வேண்டும். மேடைப்பேச்சுக்களிலோ வீதி ஊர்வலங்களிலோ நிச்சயமாக எதுவுமே நடக்கப்போவதில்லை என்பதை கட்டாயம் நினைவில் கொள்ளுங்கள். ஒவ்வொரு பெண்ணும் விழிப்புள்ள பெண்ணாய் தனக்கு நடப்பவற்றையும் தன்னைச்சுற்றி நடப்பவற்றையும் தைரியமாய் தட்டிக்கேட்பவளாய் மாறுங்கள் வன்முறைகள் தானாகவே மறைந்துவிடும்.

ஸஹீட். எச். சப்றீன்,
சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தர்,
மருதமுனை.



## ஒன்றும் ஒன்றும் ஒன்று
## மொழிப் புலமைப்புதிர்

இது வித்தியசாமான புதிர் நிகழ்ச்சி, தமிழ் ஆர்வம் மிக்கவர்களின் தமிழறிவை மேம்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டது தரப்படும் இரண்டு சொற்களின் (கருத்து மாறா) வேறு வடிவங் களை ஒன்றினைப்பதன் மூலம் ஒரு சொல்லை உருவாக்குவதே இதில் உள்ள சவாலாகும்.

**உதாரணம்**

விருட்சம் + அஸ்வம்
- மரக்குதிரை

நெருப்பு + வளி
- அனல் காற்று

எங்கே குறிப்புக்களை வைத்து கீழ் வரும் சொற்களை ஆக்கிப் பாருங்கள்.

1. இராகம் + சங்கீதம்
------------------------------
2. பாறை + சிற்பம்
------------------------------
3. புத்தகம் + ஞானம்
------------------------------
4. இனிமை + பாடல்
------------------------------
5. காலை + நட்சத்திரம்
------------------------------

விடைகள் 63

எஸ். அருளானந்தம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சித்திரை புது வருட வாழ்த்துக்கள்

ஆசையிருந்தால் நீந்தி வா

உலகின் மிக உன்னதமான விஷயம் என்று எதை சொல்வீர்கள். இந்தக் கேள்வியைக் கேட்டால், ஒவவொரு வரும் ஒவ்வொரு விதமான பதிலைச் சொல்லலாம்



# வாழ்வின் உன்னதமான உண்மை

சிலர் அன்பு என்பார்கள். சிலர் அம்மா என்று சொல்வார்கள். தந்தைக்கு நிகரானவர் எவருமில்லை என்றும், நன்றி செலுத்துவதே உயர்ந்த விஷயம் என்றும் கொண்டாடுவார் கள்.

திருவள்ளுவர் எனும் தீர்க்கதரிசி, உயர்ந்த விஷயமாகச் சொல்வது மரணத்தை. அதாவது, இன்று இருப்பார் நாளை இல்லை என்பதை.

இந்த வாழ்க்கையையும் அதன் உன் னதத்தையும் உணர்ந்து தெளிந்து வாழச் சொல்லி, நம் முன்னோர்களும் மூத்தோர் களும் சொல்லிவிட்டுச் சென்றிருந்தாலும் நாம் புரிந்துகொண்டிருக்கிறோமா என்பது தான் இங்கே கேள்வி.

என் ஊருக்குச் செல்லும்போது பஸ் ஸ்டாண்டில் இருந்து வீட்டுக்குப் போகும் வழியெல்லாம் சுவரெங்கும் சினிமா போஸ் டர்களும், கோயில் திருவிழா போஸ்ட்டர் களும், கடை திறப்புவிழா போஸ்டர்களும் ஒட்டப்பட்டிருக்கும். அந்தக் கலர் போஸ் டர்களையும் தாண்டி, கறுப்பு வெள்ளையில் ஏழெட்டு கண்ணீர் அஞ்சலி போஸ்டர்கள் தான் என் கவனத்தை ஈர்க்கும்.

''ஐயோ....இவர் பம்பரக் கம் பெனி வச்சிருந்தவர், எங்க ஏரியாவுல, கடை களில பம்பரம் வித்தாலும் நாங்க நேரா பம் பரக் கம்பெனிக்கே போய் காசு கொடுத்து பம்பரம் வாங்கி விளையாடுவோம். கறாரா பம்பரம் இவ்ளோனு சொல்லமாட்டார். இருக்கிற காசைக் கொடுப்போம். கொடுக் கிற காசை வாங்கிக்குவார். பம்பரம் தருவார் நல்ல மனுஷன்'' என்று அந்தக் கண்ணீர் அஞ் சலி போஸ்டரில் சிரித்தபடி இருக்கும் பெரி யவரைப் பார்த்ததும் பிளாஷ்பேக் ஓடும்.

ஒருமுறை ஊருக்குச் சென்று அந்தப் பகு தியை அடைந்தபோது சரோஜினி அம்மா ளின் மறைவுக்கு அஞ்சலி போஸ்டர் ஒட் டப்பட்டிருந்தது. அவரை எனக்கு நன்றாகத் தெரியும். தவிர, சிறுவயதில் அவர் வீட்டுக்கு அடிக்கடி செல்வேன். அவரை அத்தை என்று கூப்பிடுவதும், அவர் வாடா மருமகனே என்று அழைப்பதும் நினைவுக்கு வந்தன.

சரோஜினி அத்தை வீடு எங்கள் வீட் டுக்கு எதிர்வரிசையில் இருந்தது. அவருக்கு இரண்டு மகன்கள். ஒரு மகள். அக்கா என் றும் அண்ணன் என்றும் அழைப்பேன். இன் னொரு மகன் என்னைவிடச் சிறியவன். என்னை அண்ணன் என்பான். ஆனாலும் அந்த வீடு எனக்கு சிநேகிதம். காரணம், அவர்கள் வீட்டில் உள்ள ஊஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





புது வருடத்துக்காவது அப்பா வருவாரா?

கூட்டுக்குடும்பம் என்பது இன்றைக்குக் குலைந்துபோய் தனிக்குடித்தனமாக, கணவன், மனைவி, குழந்தை என்று சுருங்கி விட்டது போலவே ஊஞ்சலும் இன்று சுருங்கிவிட்டது. மூன்று அல்லது நான்குபேர் உட்காரக்கூடிய ஊஞ்சல், இன்றைக்கு ஒரே யொருவர் மட்டும் அமரக்கூடிய மூங்கில் கூடைகளாகச் சுருங்கிவிட்டது. அதேபோல், வீட்டில் இருந்த ஊஞ்சலும் பால்கனிக்கு வந்துவிட்டது.

ஆனால், சரோஜினி அத்தை வீட்டு ஊஞ்சல் அப்படியில்லை. தேக்கு மரத்தால் செய்யப் பட்டு கனமான நான்கு சங்கிலிகளால் கட்டி தொங்கவிடப்பட்ட அழகான ஊஞ்சல் அது. அந்த ஊஞ்சலில் ஆடுவதற்காகவே அடிக்கடி செல்வேன். ''மருமகனே வாடா வாடா. இன்னும் காணோமே இன்னும் காணோமே'' என்று ஊஞ்சலே உனக்காக ஏங்கிக்கிட்டிருந்துச்சுடா'' என்று வாஞ்சையாக அழைக்கும் விதம் என் அம்மாவுக்கு நிகரானது.

சரோஜினி அத்தையின் அண்ணன் பெங்களூரில் இருந்தார். அண்ணனும் தங்கையும் பாசமலர் சிவாஜி சாவித்திரி. அப்படியொரு இணைப்பு, பிரியம், பிணைப்பு. அந்த பெங்களூர் அண்ணன் சீரியஸ் என்று செய்தி வர சரோஜினி அத்தை குடும்பத்துடன் பெங்களூர் சென்றார். நான்காம் நாள் அண்ணன் இறந்து விட காரியங்கள் நடந்தன. அடுத்தநாளே அண்ணன் இறந்த துக்கத்தில் திக்பிரமையுடன் இருந்த சரோஜினி அத்தை மாரடைப்பால் இறந்தார் என்றார்கள். அதிர்ந்து போய்விட்டோம் நாங்கள். அந்தப் பாசத்தின் அடர்த்தி கண்டு நெகிழ்ந்துபோனோம்.

இப்படித்தான் மரணங்கள் நமக்கெல்லாம் எதையோ உணர்த்திக்கொண்டே இருக்கும். வாய் கட்டப்பட்ட அந்தப் பிரேதங்கள், நமக்கு வாழ்வியலை உணர்த்திக்கொண்டே இருக்கும். அந்த மௌன உரைகள் நம் செவிகளுக்குள் விழுந்து உள்ளே பிறப்பின் நோக்கத்தை பறைசாற்றிக்கொண்டே இருக்கும்.

பாவம்யா. நல்லாத்தான் இருந்தாரு. திடீர்னு நெஞ்சுவலின்னாரு. ஆஸ்பத்திரிக்குக் கூட்டிக்கிட்டுப் போகும்போதே செத்துட்டார்.

என்ன பண்றதுய்யா. அவங்க பசங்களும் மருமகளும் கூட நல்லாத்தான் பாத்துக்கிட்டாங்க. லட்சம் லட்சமா செலவு பண்ணினாங்க. மருந்து மாத்திரை ஓபரேஷன் ட்ரீட்மென்ட்னு கவனிச்சிக்கிட்டாங்க. என்ன பண்ணி என்ன. எல்லாருக்கும் ஒருநாள் சாவு வரத்தானே செய்யும். வாழ்ந்து பார்த்திட்டாரு. நல்லபடியா போய்ச் சேர்ந்திட்டாரு.

ஒரு காலத்துல கஷ்டப்பட்ட குடும்பம். இப்பப்பாரு. பையன் படிப்படியா வளர்ந்து காசு சேர்த்து சொந்தமா வீடு கட்டியிருக்கான். ஆனா இதையெல்லாம் பாக்காம அவங்க அப்பாவும் அம்மாவும் பல வருஷங்களுக்கு முன்னாடியே இறந்துட்டாங்க. எல்லாத்துக்கும் கொடுத்துவைச்சிருக்கணும்பா.

இப்படியாக மரணம் குறித்து தொடர்ந்து பேசி வருபவர்கள்தான் நாம். அவர்களின் கவலையை நம் கவலைபோலவும், அவர்கள் வீட்டுத் துக்கத்தை நமக்கு நேர்ந்த துக்கமாகவும் அந்தத் துயரத்தை நெடுங்காலமாக நம் துக்கம் போலவும் வைத்து வருத்தப்படுகிறோம். புலம்புகிறோம். ஆனால் ஒரு மரணம் என்பதும் அந்த உயிரிழப்பு என்பதுமான அடர்த்தியான பாடங்கள்தான் வாழ்க்கைக்கான வேதங்கள் என்பதை ஏனோ நாம் உணருவதேயில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசையிருந்தால் நீந்தி வா



**சித்திரை புது வருட வாழ்த்துக்கள்**

இதுமட்டுமா?

வறட்டுப் பிடிவாதமும் தேவையற்ற ஈகோவும் ஆவேசமான கோபமும் மனிதத் தொடர்பைத் துண்டிக்கும் விஷக்கிருமிகள். சாவு வீட்டில் கிடத்தப்பட்டிருக்கும் பிணத்துக்கு நடுவே, அந்த உறவுக்கு மத்தியில் அழுகையும் ஒப்பாரியும் கேட்கும். பேரமைதியுடன் இடிந்துபோய் உட்கார்ந்திருப்பார்கள். யார்யாரோ யாரிடமோ, இறந்தவர் வீடு, இறந்தவரின் குணநலன்கள், இறந்தவரின் அருமைபெருமைகள், அவர்கள் ஜெயித்த சந்தோஷ சரிதம், தோற்றுப்போன வலி வேதனை எனப் பொருமி, புலம்பி, நொந்து பேசிக்கொண்டிருப்பார்கள். முக்கியமாக வாழும்போது பிரிந்த சொந்தம் அங்கே இறந்தவரிடம் சொந்தம் கொண்டாடும். நெஞ்சில் அடித்துக்கொண்டு கதறியழும்.

இன்னும் சில கொடுமையும் அப்போது நடைபெறும். பேச்சுகளே இல்லாதிருந்த சொத்து, பெண் தரவில்லை, மரியாதை செய்யப்படவில்லை என பல காரணங்களுக்காகப் பிரிந்தவர்கள், இறந்தவரின் முகம் பார்க்க அவரின் சடங்கு சாங்கிய இறுதியில் பங்கெடுக்க நின்றுகொண்டிருப்பார்கள். அவர்களைப் பிணம் பார்க்க விடாமல் உறவுகள் எட்டித்தள்ளும். தள்ளியே நின்றவர்களைத் காறித்துப்பித் துரத்தும். அங்கே இருப்பவர்கள் இறந்தவருக்காக துக்கப்படுவார்கள். தள்ளிநிற்பவர்களுக்காக வருத்தம் கொள்வார்கள்.

என்னங்கய்யா இது. வாழ்றதும் சாகிறதும் ஒரு தடவைதான். அன்னிக்கி ஏதேதோ நடந்துபோச்சு. பிரிஞ்சாச்சு. இப்ப எல்லாத்தையும் உணர்ந்தோ உணராமலோ செத்தவரோட முகத்தைப் பார்க்க வந்திருக்காங்க. விடுங்கப்பா. இல்லேன்னா பாக்கலியே பாக்கலியேனு சாகிறவரைக்கும் மனவலியோடயே அவங்க இருக்கணும். பார்க்க விட்டிருக்கலாமே. தப்புப்பண்ணிட்டோமேன்னு நாமளும் சாகிறவரைக்கும் புலம்பிக்கிட்டே இருப்போம். என்னத்த வாரி எடுத்துகிட்டுப் போறோம். இந்தப் பாழாப்போற ஈகோவையெல்லாம் தூக்கி எறிஞ்சிட்டு அனுமதிங்கய்யா, புண்ணியமாப் போகும், என வாழ்க்கையை ருசித்து அதன் சுவையை உணர்ந்து மனிதர்களைப் பிரிந்ததன் வலியை உணர்ந்தவர்கள், மனிதர்களை நேசிப்பவர்கள் சொல்லலாம் சொல்வார்கள்.

மரணம் இப்படித்தான், வாழ்வதற்கான சூத்திரத்தை சொல்லிக்கொண்டே இருக்கும். இருக்கிறது.

நம்பிக்கைத் துரோகத்தாலும், நம்ப வைத்து கழுத்தறுப்பதாலும், முதுகில் குத்தி, கால் இடறச் செய்து காயப்படுத்துவதாலும், முட்டுக்கட்டை போட்டு முடங்கச் செய்வதாலும், வளர்ச்சியில் பொறாமை கொண்டு அவச்சொல் பேசி அல்லல்படுத்துவதாலும் பல உறவுகள், தோழமைகள் இங்கே பிரிந்து எதிரும் புதிருமாகின்றன.

'நீ யாரோ நான் யாரோ' என்று கிழக்கு மேற்காக முகம் திருப்பிக்கொள்கின்றன. மனமது செம்மையானால் வாழ்க்கையும் செம்மையாகும்.

கோபத்திலும் ஆவேசத்திலுமாக அந்தச் சண்டையில் செத்தாலும் என் மூஞ்சில முழிக்காதே எனும் கடுஞ்சொல் வீசப்படும். இந்த உலகின் மிகக் கொடூரமான சொல்லாக இதைத்தான் உணர்கிறேன்.

கூடியிருப்பதில்தான் குதூகலமே நிறைந்திருக்கிறது. கூடுமானவரை உலகக் கூட்டில் கூடியிருந்து இந்த வாழ்க்கையை செவ்வனே கழித்து செத்துப்போவோமே... காசா பணமா?

— வி.ராம்ஜி

## உங்கள் புத்தி கூர்மையானதா?

நீங்கள் ஒரு பஸ் சாரதி. இந்த பஸ் ஆமெர் வீதியில் இருந்து புறப்படுகிறது. அடுத்த பஸ் நிலையம் மருதானையில் 10 பயணிகள் ஏறினார்கள். 5 பயணிகள் இறங்கினார்கள். பொரளையில் 8 பயணிகள் இறங்கினார்கள். பஸ் இறுதி அடைவிடமான நாராயன்பிட்டியை அடைந்தபோது 23 பயணிகள் இறங்கினார்கள். பஸ்சில் பயணம் செய்த பயணிகள் மொத்தம் எத்தனை? பஸ் சாரதியின் பெயர் என்ன ?

→ பக்கம் 63



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மரணப்பொறியில் குடும்ப பெண்கள்!


## அவதானம் ... அவதானம் ...

# மூளைச் சலவைக் கடன்கள்!

கடந்த மாதம் இப்பகுதியில் பணம் அதிகமாக இருப்பவர்கள் எவ்வாறான முதலீடுகளில் அவதானமாக இருக்க வேண்டும் என்பது தொடர்பாக ஒரு விழிப்புணர்வை வழங்கி இருந்தோம். இம் மாதம் எமது சமுதாயத்தில் வறுமையின் விளிம்பில் உள்ள குடும்பங்கள் எவ்வாறான நிறுவனங்களில் கடன் பெறவேண்டும் என்பது தொடர்பாகவும் இந்த பிரச்சனையின் கோரம் தொடர்பாகவும் இப்பகுதியில் விழிக்கின்றோம்.

ஈழப்போர் சின்னாபின்னமாக்கப்பட்ட போது பல குடும்பங்களில் ஆண் சகோதரர்களும் கணவன்மாரும் காணாம லாக்கப்பட்டும், அங்கவீனர்களாக்கப்பட்டும், கொல்லப்பட்டும் போக எஞ்சிய உறுப்பினர்கள் சொத்துக்களையும் இழந்து முகாம் வாழ்க்கையின் பின்பு எதற்கும் நாதியற்றவர்களாக பேரினவாத குகைக்குள் அடங்கி வாழவேண்டிய நிர்பந்தத்தின் கீழ் கொடிய வறுமையின் மத்தியில் பலர் பெண்தலைமைத்துவ குடும்பங்களாக வாழ்க்கையினை ஓட்டி வரும் இக்காலத்தில் தனியார் நிதி நிறுவனங்களின் போட்டி இவர்களையும் விட்டு வைக்கவில்லை போன்றே நடக்கின்ற சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றனர்.

குறிப்பாக தனியார் நிதி லீசிங் நிறுவனங்கள் இவ்வாறான பெண்களின் மூளைகளை சலவை செய்து உயர்ந்த வட்டி வீதத்தில் கடனையோ அல்லது பொருட்களையோ வழங்கி (குறிப்பாக வியாபார போட்டியின் காரணமாக உண்மையான தொழில் முயற்சி எதுவும் இன்றி, மீள செலுத்தும் இயலுமையினை உறுதிப்படுத்தாது குடும்ப பெண்களுக்கு ஆசை காட்டி) குடும்பத்தையே கடனில் மூழ்கச் செய்கிறார்கள். கடனையோ அல்லது பொருளையோ பெற்று திட்டமிடல் எதுவும் இன்றி, வருமானம் தேடும் வழிகளில் முதலிடாது செலவுசெய்து முடித்து விட்டு மீள செலுத்தும் தவணைகளில் கடனைக்கட்ட முடியாது அந்த கடனைக்கட்ட இன்னும் பலரிடம் கடன் வாங்கி, பின்பு



மட்டுவிலூர் ஜனதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கியவர்களின் பாலியல் தொந்தரவுக்கும் உள்ளாகி இறுதியில் கடன் தொல்லையின் மன அழுத்ததால் தற்கொலை செய்யும் அவல நிலையும் எம்மண்ணில் தான் நிகழ்ந்துள்ளது. வவுனியாவில் பன்றிக்கெய்த குளத்தில் ஏழு கடன் நிறுவனங்களில் கடன் பெற்று 47000 ரூபா கடன் செலுத்த வேண்டிய ஒரு நிர்பந்தத்தில் பிள்ளையுடன் கிணற்றில் குதித்து தற்கொலை செய்து கொண்ட துன்பியல் நிகழ்வு அரங்கேறியுள்ளது, இது இன்று வடக்கு கிழக்கு பெண்களை படர்ந்து பிடித்திருக்கும் ஒரு கொடிய பிரச்சனையாகும். (கடந்த டிசம்பர் மாதம் ஓமந்தை புதிய வேளாண் சின்ன குளம் பகுதியில் கிணற்றில் குதித்து தற்கொலை செய்து கொண்ட தாய் மற்றும் மூன்று வயது மகனின் சடலங்களையே இங்கே காண்கிறீர்கள் )

குறிப்பாக லீசிங் என்ற மாயையில் சிக்கி அரைப்பகுதி பணம் கட்டிய பின்பு மிகுதி பணம் கட்ட முடியாது போக குறித்த வாகனத்தையும் லீசிங் நிறுவனம் பறித்து செல்ல பாதிப் பணத்தையும் முழுச் சொத்தையும் இழந்து துர்ப்பாக்கிய நிலையில் பல குடும்பங்கள் உள்ளன. எனவே இல்லத்தரசிகளே அவதானம் அவசியம். இந்த வறிய பெண்களின் பிரச்சினைக்கு தீர்வு தான் என்ன? என்பது தொடர்பான தேடலின் போது நிபுணர்கள் தெரிவித்த ஆலோசனைகள் இங்கே உங்களுக்காக ....

1. திரும்பச் செலுத்தும் வழி நிலையை உறுதிப்படுத்தியே மக்கள் கடனை பெற வேண்டும்.

2. வறிய மக்களின் வறுமையை தணிக்க என மத்திய வங்கியால் மிகக் குறைந்த வட்டியில் கடன் வழங்கும் திட்டங்கள் மக்கள் வங்கி, இலங்கை வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கிகள் ஊடாக செயற்படுத்தப்படுகிறது. இதனை பெற மக்கள் முனைய வேண்டும். ஆவண பிரச்சினை என்பது ஒரு பொய்யான கதை. உண்மையான காரணத்துக்காக கடன் பெறுவோர் ஏன் ஆவண பிரச்சனை என கூறவேண்டும்.வங்கிக்கு போனால் அவர்கள் வழிகாட்டுவார்கள்

3. பெண்கள் பேராசையை விடுத்து இயன்ற வரை செலவை குறைத்து நடக்க வேண்டும்

4. அரசோ அல்லது புலம்பெயர் தமிழர்களோ ஒன்றிணைந்து வட்டியில்லா கடன் திட்டம் ஒன்றை இறுக்கமான மேற் பார்வையில் வங்கிகடன் திட்டம் ஊடாக வழங்க முன்வரவேண்டும்.

5. அரசாங்கம் வேலைவாய்ப்பின் போது வறிய மக்களின் பிள்ளைகளுக்கு என ஒரு சதவீத ஒதுக்குகை ஒன்றை மேற்கொள்ளவேண்டும்

6. அரசு, தனியார் துறை முதலீட்டை ஊக்குவித்து வேலைவாய்ப்பை பெருக்க வேண்டும்

7. வலிய வந்து யாராவது கடன் தருவதாக கூறினால் அங்கே ஒரு கழுகு பார்வை அவசியம் .

எனவே, பெண்களே, அரசே, மாகாண சபைகளே, தனியார் துறை நிறுவனங்களே, புலம்பெயர் அமைப்புக்களே.


**சிந்தியுங்கள்... செயற்படுங்கள்....**
**வறுமையை ஒழியுங்கள்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உணவே மருந்து என்பதுதான் நம் முன்னோர்கள் வகுத்துத் தந்த வாழ்க்கை முறை. நோய் வராமல் காத்துக் கொள்ளவும், வந்த நோயை வழி அனுப்பி வைக்கவும், உணவையே மருந்தாக உண்டு வந்த காலம் போய், இன்று மாத்திரை, மருந்துகளையே உணவாகச் சாப்பிடும் அளவுக்கு ஒரு சிலரின் நிலை மாறிவிட்டது. மறந்துபோன அந்த மருத்துவ உணவுகளை மறுபடியும் பழக்கத்துக்குக் கொண்டு வரலாமே...'' என வரவேற்கிறார் சித்த உணவியல் நிபுணர் அருண் சின்னையா. இவர் வழங்கும் இந்த உணவுகள் சுவையானவை... சத்தானவை!



## பிரண்டைச் சத்துமாவு

**தேவையானவை:** நார் நீக்கிய பிரண்டைத் தண்டுகள் அரை கிலோ, புளித்த மோர் ஒரு லிட்டர், கோதுமை ஒரு கிலோ, கறுப்பு எள், கறுப்பு உளுந்து தலா 100 கிராம்.

**செய்முறை:** பிரண்டை பச்சையாக இருக்கும்போதே ஒரு லிட்டர் புளித்த மோரில் இரண்டு நாட்கள் ஊறவிடவும். பின்னர் அந்தப் பிரண்டைகளை வெளியே எடுத்து நன்றாகக் காய வைத்து, அதனுடன் மேலே சொன்ன பொருட்களையும் சேர்த்து மிதமாக வறுத்தெடுக்கவும். இப்போது இந்தக் கலவையை எடுத்து மாவாக அரைத்துக் கொண்டால், கஞ்சி அல்லது களி செய்து சாப்பிடலாம்.


**மருத்துவப் பயன்:** உடல் வலி, மூல நோய், ஆசனவாயில் ஏற்படும் எரிச்சல், நமைச்சல் போன்ற தொல்லைகள் நீங்கும்.

## அஷ்ட வர்க்க உணவுப்பொடி

**தேவையானவை:** சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், சீரகம், சோம்பு, இந்துப்பு, பெருங்காயம் தலா 50 கிராம்.

**செய்முறை:** இந்துப்பு, பெருங்காயம் நீங்கலாக மற்ற எல்லாவற்றையும் மிதமாக வறுத்துப் பொடிக்கவும். இந்துப்பு, பெருங்காயத்தைத் தனியாகப் பொடித்து எல்லாவற்றையும் ஒன்றாகக் கலக்கினால், அஷ்ட வர்க்க உணவுப் பொடி ரெடி!

**மருத்துவப் பயன்:** இந்தப் பொடியில் சிறிது நல்லெண்ணெய் சேர்த்து சாதத்தில் கலந்து சாப்பிட, நன்றாகப் பசியைத் தூண்டும். குடல் புண், வாய்வுக் கோளாறுகள், பசியின்மை, செரியாமை இவற்றிற்கு எல்லாம் இந்தப் பொடி சிறந்த மருந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புது வருடத்துக்காவது அப்பா வருவாரா?

## நீங்கள் நலமா? வாசகர் ஆலோசனைகள்



பெற்றோரால் பார்த்து நிச்சயிக்கப்பட்டதே எனது திருமணம். கணவருக்கு நல்ல வேலையில்லை என்றாலும், அக்கவுண்டண்ட் டாக வேலை பார்க்கும் எனக்கு கைநிறைய சம்பளம் கிடைப்பதால் திருமணத்துக்கு சம்மதித்தேன். என் வேலை கருதி என் பெற்றோர் வீட்டிலேயே நாங்கள் வசித்தோம்.

நான் பிறந்து வளர்ந்தது நகர்ப்புறம் என்பதால் எந்தவித பேதமுமின்றி எல்லோரிடமும் இயல்பாகப் பழகக்கூடியவள். அவர் கிராமப்புறம் என்றாலும் புத்தகங்கள் எழுதுவது, பொது அறிவு பற்றிப் பேசுவது என நல்ல ஓர் அறிவாளியே. ஆனாலும் எப்போதும் என்னை

# ஏன் இந்தக் குழி

அவரது கண்காணிப்பிலேயே வைத்திருப்பார். முதலில் என் நலனில் அவர் கொண்டிருக்கும் அக்கறை என்று நினைத்தேன். ஆனால், நாளடைவில் அது என் மீதான ஈகோ என்பது தெரிந்து அதிர்ந்தேன். மேலும் என் கணவரை விட நான் நிறம், அழகில் ஒருபடி மேல் என்பதை அவரால் ஏற்க முடியவில்லை. நான் மச்சிங்கா ரெஸ் அணிந்தால், ''இதெல்லாம் எதற்கு? நம்ம நிலைமைக்கு ஏத்தமாதிரி நடந்துக்கணும்.... நாம ரெஸ் பண்றத வெச்சு நம்மகிட்ட நிறைய காசு,பணம் இருக்கும்னு நினைப்பாங்க'' என்று அட்வைஸ் செய்வார். இதற்கிடையே குழந்தை பிறக்க, அது கறுப்பு நிறம் என்பதால் அது எனக்குப் பிறக்கவில்லை என்று கத்திக் கூப்பாடு போட்டார். தினம் தினம் குடித்துவிட்டு வந்து வாசலில் நின்றபடி கூச்சலிடுவார். குடிக்கு ஏன் அடிமையானார் என்று அவரைப்பற்றி விசாரித்தபோது, ஏற்கனவே போதைப்பழக்கம், குடிப்பழக்கத்துக்கு அடிமையாகி அதற்காக சிகிச்சை பெற்றவர் என்பது தெரிந்து அதிர்ந்தேன்.

குழந்தைக்கு ஒரு வயது ஆனபோது, என்னை வேலைக்குப் போகக் கூடாது என்று தகராறு செய்தவரை என்னையும் மீறித் திட்டிவிட்டேன். அதைச் சாக்காக வைத்துக்கொண்டு ஊருக்குச் சென்றவர் இன்றுவரை என்னை வந்து பார்க்கவில்லை. அவருடைய பெற்றோர் என்னிடம் சமாதானம் பேச வந்தபோது, ''என்மீது எந்தத் தவறும் இல்லை, அவரைச் சமாதானம் செய்து அனுப்புங்கள்''- என்று சொன்னேன். ஆனால், அவர் என் நடத்தை குறித்துக் கேவலமாகப் பேசியதோடு குழந்தை விடயத்தில் மிகவும் கேவலமாகப் பேசியதால் இனி அவரோடு சேர்ந்து வாழ்வதில்லை என்று முடிவெடுத்தேன். இப்போது என் பெற்றோர் இறந்துவிட்ட நிலையில் பருவ வயதில் இருக்கும் என் மகளோடு தனிமரமாக வாழ்கிறேன். கைநிறைய சம்பாதித்தாலும் ஆண் துணை இல்லாமல் ஊராரின் அவதூறுகளை என்னால் பொறுக்கமுடியவில்லை. இந்நிலையில் என் கணவர் திருந்தி என்னோடு வாழ்வதாகக் கூறுகிறார். என்ன செய்வது?

**பெயர் வெளியிட விரும்பாத வாசகி**

**சிறந்த ஆலோசனைகளை வழங்கும் முதல் 5 பேருக்கு 100 ரூபாய் ரீலோட் வழங்கப்படும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்கள் நலமா? வாசகர் ஆலோசனைகள்



# நிம்மதியின்றித் தவிக்கிறேன்

"என் மகளுக்கு ஐந்து வயதானபோது என்னுடன் கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்தார் என் கணவர். குழந்தையோடு என் அம்மா வீட்டில் அடைக்கலமானேன். அதன்பிறகு எங்களை சேர்த்துவைக்க நடந்த பஞ்சாயத்துகள் தோல்வியிலேயே முடிந்தன. இருந்தாலும் குழந்தையின் பராமரிப்பு முதல் படிப்பு வரை கணவர் அனுப்பிய பணத்தினாலேயே கழிந்தது. இதற்கிடையே அம்மா வீட்டில் இருந்தபோது அருகே குடியிருந்த ஒருவன் என்னைத்தினமும் நோட்டமிட்டிருக்கிறான். வீட்டில் ஆள் இல்லாத வேளையில் என்னிடம் தவறாக நடக்க முயன்றான். சில நிமிட போராட்டத்துக்குப் பிறகு என்னை நானே காப்பாற்றிக்கொண்டேன். அவனோ, ''நீ வீட்டுல தனியா இருந்தப்ப உன்னை செல்போன்ல படமெடுத்து வைச்சிருக்கேன். உன் கணவருக்கு அனுப்பவா?'' என்று பிளக்மெயில் செய்கிறான். இதற்குப் பயந்தே என் 40 பவுன் நகைகளை அடகு வைத்து கேட்கும்போதெல்லாம் அவனுக்குப் பணம் கொடுத்தேன். இதனால் இன்னமும் நகைகள் அடகில்தான் இருக்கின்றன. மீட்கவும் வழி தெரியவில்லை.

20 வருடங்கள் கழித்து இப்போதான் என் கணவருடன் இணைந்து வாழ ஆரம்பித்திருக்கிறேன். ''என்றாவது ஒருநாள் என் கணவரோ, மகளோ என் நகைகளைப்பற்றி தற்செயலாகக் கேட்டால் என்ன சொல்வது? எப்படி சமாளிப்பது? நடந்ததைச் சொன்னால் என் கணவரும் மகளும் நம்புவார்களா?'' என்கிற பயத்தால் நிம்மதியின்றித் தவிக்கிறேன். என் குழப்பம் தீர வழி சொல்லுங்கள்.

பெயர் வெளியிட விரும்பாத வாசகி

**சிறந்த ஆலோசனைகளை வழங்கும் முதல் 5 பேருக்கு 100 ரூபாய் ரீலோட் வழங்கப்படும்.**

கையேட்டில் உள்ள கூப்பனை பயன் படுத்துவோர் மட்டுமே

viber +94718628369

## வகவத் துளிகள்



**நிரப்பப்படாத**
**வெற்றிடம்**
**ஏழைகளின் வயிறு**

(வெலிமடை ஜஹாங்கீர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவ மன்னிப்பு

கதையொன்று கேளாயோ
என் கண்ணான கண்மணியே
பிரியங்கள் எடுத்துரைக்க
போதுமிந்த காலமென்பேன்
நிலையற்ற வாழ்வில்
நிஜமாக தோன்றியவளே,

தோழமையையும், அன்பையும்
ஒன்றாய் தந்து - நான்
மண்டியிட்டு மன்றாடவேண்டிய
புனிதப் பூ நீதான் என்பதை
மனது மறக்காது கண்மணியே !

அழகான என் வாழ்வை
வர்ணங்களால் வசந்தமாக்க
என்னுள்ளே வந்த முதல் குருவி
மரம்விட்டு மரம்தாவிப் பறந்ததால்
என்மனம் சிதறி
மதியிழந்து போனதை
மனது மறக்காது கண்மணியே !

மறக்க நானும் முயற்சித்து
பல கூட்டில்வாழும்
குயில் ஜாதி ஆனேனே,
அவ்வேளை எனக்குள்ளே
மலை முகட்டில் சறுக்காது
ஜதி சொல்லும் அருவியாய்
அன்பான வரமாக நீ வந்தாய்
மனது மறக்காது கண்மணியே,

மௌனத்தில் கதை சொல்லி
நாணத்தில் முகம் சிவந்து
வார்த்தை தொட்டு உன்னோடு
விளையாடிய காலமதில்
இரவைப் பகலாக்கி
விடியவிடிய கதை பேசி
உனக்குள்ளே என் மனதை
உட்கார வைத்ததை
மனது மறக்காது கண்மணியே

சேமித்த ஆசையெல்லாம் ஒன்றாக்கி
குரலால் மோகம் நான் வளர்க்க
உன்வார்த்தை நாணக்கதிரையிட்டு
இடைவெளி கொண்டதை
மனது மறக்காது கண்மணியே

என் வரவின் பின்னாக
உன் வாழ்வின் மணித்துளிகளை
எனக்காக மட்டும்
செலவு செய்தாயே,
என்குரல் கேட்டால்,
காடென்ன மலையென்ன
கடந்துதான் வந்தாயே,
மனது மறக்காது கண்மணியே,


என்னில் மடைதிறந்த
என்னுயிர் பிரியும்
குரல்போல ஒன்று
என்னில் ஓலமிட
உன் உணர்வுகளை
உடைத்தெறிந்து
உன் பிரியங்களுக்கு
விடை கொடுத்தேனே, அதையும்
மனது மறக்காது கண்மணியே !

ஊசலாடும் மனதோடு
தவறிப்போன வழிப்போக்கன் நான்.
எப்படி என்னோடு கூட
உனை அழைப்பேன்
என்னோடு கூடிவந்தால் நீ
உருக்குலைவாய் என்பதை
உணராயோ கண்மணியே !

அபர்ணா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


புது வருடத்துக்காவது அப்பா வருவாரா?

உமா ஆரம்பத்திலே சொன்னாள்.

''அம்மாவுக்கு இங்கே கிராமத்து வீட்டிலே இருக்கிறது எந்தப் பிரச்சினையும் இருக்காது. அக் கம் பக்கத்துல நிறைய உறவினர்கள் இருக்கி றார்கள். எந்த நேரமும் திண்ணையில் ஆட்கள் இருந் துகிட்டு இருப்பாங்க. பேசி க்கிட்டும், தாயக்



# மாமியார்

கட்டையை உருட்டிக்கிட் டும் நல்ல விதமாக பொழுதுபோகும் அவங்களுக்கு. சென்னையில் இருக்கிற நம்ம அப்பார்ட்மெண் டுல கொண்டுபோய் வச்சுக்க வேண்டிய அவசியம் - அவசரம் இப்போதைக்கு இல்லை. அவங்களும் அதை விரும்பலை'' என்றாள்.

அம்மாவும், ''உமா சொல்றது சரி தான் மாப்பிள்ளை. எனக்கு இங்கு இருக்கிற மாதிரி அங்கே வந்து இருக்க முடியாது. அங்கே நாலு சுவத்துக்குள்ள அடைஞ்சு இருக்க முடியல. மாப்பிள்ளை நீங்க ஊருக்கு போங்க. அதுதான் அடிக்கடி வந்து பார்த்துக்கிட்டு போறீங் களே. அது போதும்'' என் றார்.

கோபிக்குத்தான் மனம் கேட்கவில்லை .

''உமா நேத்துவரைக்கும் உங்க அப்பா இருந் தார் பிரச்சினை இல்லை. ஆனால் இன் னைக்கு அவர் இல்லை. மகனோ வெளிநாட்டில் இருக்கார். இந்த நிலையில் இங்கே நூறு சொந்தங்கள் இருந்தாலும், மகனி டமோ, மகளிடமோ இருந்தால் அவங்களுக்கு ஆதரவாக இருக் கும் இல் லையா? அப்பா இறந் ததும் அம்மாவை யாரும் கண்டுக்கலைன்னு நாலு பேர் நாலு விதமா பேசு வாங்க'' என்றான்.

''அதுக்காக பொண்ணு வீட்ல வந்து இருக்க முடியுமா மாப்ள. ஒவ்வொருத்தரும் ஒண்ணொன்னு சொல்லுவாங்க'' என்றார்.

''யார்என்ன சொன்னாலும் உங்களுக் கென்ன? உங்க பொண்ணு சம்பா திக்கிறாள். அந்த சௌகரியத்தை அனுபவிக்கிற உரிமை உங்களுக்கு உண்டு. நாங்களே கூப்பி டும்போது யார் தடுக்க முடியும்'' என்று சொல்லி மருமகன் வற்புறுத்தியதன் பேரில், ''இவ்ளோ சொல்றீங்க. உங்க வார்த்தை யையும் தட்ட முடியலை. ஆனால், நான் அங்கு வந்துட்டால் இங்க வீடு பாழப்போகுன்னு கவலையா இருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாப்ள'' என்று தயங்க,

''கவலையை விடுங்க. அதுக்கு ஆள் போட்டுபார்த்துக்கச் சொல்லலாம். புறப்ப டுங்க அத்தை'' என்றான் கோபி.

அவங்களை இவ்வளவு வற்புறுத்தி ஊருக்கு அழைச்சுட்டுப்போனா அவங்க அங்க நிம்மதியா இருப்பாங்களா?'' - என்றாள் உமா.

''உமா உனக்குத் தெரியாது. ஒருத்தர் - அதாவது ஆணா இருந்தாலும், பெண்ணா இருந்தாலும் ஒண்டிக்கட்டையா இருக்கக் கூடாதுன்னு சொல்லுவாங்க. துணைக்கு ஆளில்லாமல் தனிமையில்இருந்தால் ரொம்ப கஷ்டம். தேவையில்லாத சிந்தனை, குழப்பம், கலக்கம்னு வந்து, கடைசியில் மனநோய் வரைக்கும் கொண்டுபோயிடும்.

இப்ப எல்லாம் அப்படி ஒரு ஃபீல் இருக்கு. வேலை பார்த்துகிட்டிருந்த கம்பெனியை இழுத்து மூடி வீட்டுக்கு அனுப்பிட்டாங்க. வேலையும் எனக்கு கிடைக்கலை. ஆறு மாசம் ஆகுது. மறுபடி வேலை கிடைக்க எத்தனை மாசம் ஆகுமோ ?

நீ குறை தெரியாமதான் என்னைப் பார்துக்கற. டி.வி, பேப்பர், கம்யூட்டர், லேப் டோப், எவ்.எம். நிறைய பொழுதுபோக்கு அம்சங்கள் இருக்கு. இருந்தாலும், காலைல நீ ஆபீஸ் போய்ட்டு சாயங்காலம் திரும்பி வருர வரைக்கும் நான் தனியா இருக்கும்போது ஏற்படுற வெற்றிடம் இருக்கே... அது கொடுமை. ஒவ்ப்கோர்ஸ் ஆபீஸ் போனாலும் அங்கிருந்து அடிக்கடி போன் பண்ற. இருந் தாலும் தனிமை தனிமைதானே'' என்றான்.

''என்ன சொல்ல வாரீங்க'' என்றாள் உமா.

''அக்கம் பக்கத்தில் பலர் இருந் தாலும், வீட்டைப் பொறுத்தவரை உங்க அம்மாவுக்கு தனிமை தானே.

அதிலும் உங்க அப்பா இறந்த சோகம் வேற. அவங்களுக்கு மகன்கிட்டையோ, மகள் கிட்டையோ இருக்கணும்னு கண்டிப்பா ஒரு தவிப்பு இருக்கும். அதை அவங்க வாய்விட்டு சொல்லுவாங்களா? அதிலும் உங்க அம்மா படிக்காதவங்க. விவரம் தெரியாதவங்க. தெரு முனை வரைக்கும் கூட தனியா போக யோசி க்கிறவங்க. கூச்ச சுபாவம் அதிகம். நாமதான் புரிஞ்சு நடக்கணும்'' என்றான்.

''அதுதான் அவ்வளவு சொல்றாரேம்மா. புறப்படுங்க'' என்றாள் உமா.

மறுக்க முடியாமல் தனக்கு வேண்டிய பொருட்களை எடுத்துக்கொண்டு, அக்கம், பக்கத்தில் உள்ளவர்களிடம் சொல்லிக் கொண்டு புறப்பட்டார் மல்லிகா.

சென்னைக்கு வந்து ஒரு வாரமாகிய நிலை யில் ....

மருமகன் கோபிக்கு சிரிப்பும், பரி தாபமும் ஏற்பட்டது அத்தையைப் பார்க்க. வீட்டிற்கு வந்ததிலிருந்து அவர் சுவரை ஒட்டி கூனிக்குறுகி உட்கார்ந்திருந்தார். சாப்பிடுவதானாலும் ரி.வி. பார்ப்பதானாலும் சரி அதே இடத்தில்தான்.

மழையில் நனைந்த குருவி சுவரோரம் ஒண்டிக்கொள்ளுமே அதுபோல். அந்தப் பக்கம் அவன் தலை தெரிந்தால், சட்டென்று எழுந்து இழுத்துப் போர்த்திக் கொண்டு, ''சொல்லுங்க மாப்ள'' என்பார்.

ஊரில் எல்லா மகன்களையும் விட மரு மகனுக்கு கூடுதல் மதிப்பும், மரியாதையும். இன்றுவரை அதை எந்தப் பெண்மணியும் மாற்றிக்கொண்டதில்லை. அதிலும் அத்தை ரொம்ப கட்டுப்பெட்டித்தனம்.

பொறுத்துப்பார்த்த கோபி ஒருநாள்,

''அத்தை ரிலாஸ்சா இருங்க. மரியாதை மனதில் இருந்தால் போதும். வீட்டுக்குள் நான் ஒரு நாளைக்கு பலமுறை குறுக்கும் நெடுக்கும் நடப்பேன். அத்தனை முறையும் எழுந்து உட்காருவீங்க....

இங்கே செயார், சோபா எல்லாம் இருக்கு. சோபாவில உட்காருங்க அத்தை'' என்றான்.

''அது மரியாதையாக இருக்காது மாப் பிளை'' என்றார் மல்லிகா.

''நான் தானே சொல்றன். என்னை மகனா நினைச்சுக்குங்க. இயல்பா இருங்க'' என்றான் கோபி.

''அவங்களை ஏன் கட்டாயப்படுத்திறீங்க. சோபாவில உட்கார கூச்சப்படுறாங்க. இத் தனை வருசத்தில அவங்க என்னைக்கு இங்க வரும் போது சோபாவுல உட்காந்திருக்காங்க'' என் றாள் உமா.

''அப்ப வந்து போய்கிட்டிருந்தாங்க. இனி நிரந்திரமா இங்க இருக்கப் போறாங்க. இங் குள்ள நடைமுறையை பழகிக்க வேணாமா? இங்கல்லாம் வீட்டு வேலை செய்றவங்க கூட அவங்க வீட்ல எங்க கீழே உட்கார்ராங்க. செயார் கட்டில்ல உட்கார்ந்தில்ல ரெஸ்ட் எடுக்கறாங்க.

அடிமை மாதிரி கூனிக்குறுகி உட்கார்வது ஒரு மாதிரியாய் இருக்கு. ஏதோ நான் அவங் களை கொடுமைப் படுத்தறது போல இருக்கு''


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றான் கோபி.

''அவர் தான் அவ்வளவு சொல்றாரே... இனி நீ சோபாவுல உட்காரும்மா'' என்றாள் உமா.

''சரிம்மா...'' என்ற மல்லிகா சோபா நுனியில் விழுந்து விடுவது போல் அமர்ந்தார். நன்றாக உட்கார ஒரு வாரம் பிடித்தது. என்னைக் கண்டால் எழுந்து கொள்பவர் இப்போது அப்படிச் செய்வதில்லை. அதே முறையில் டைனிங் டேபிளில் உட்கார்ந்து சாப்பிட, தானே டி.வி போட்டு வேண்டிய சனலை தேர்ந்தெடுத்துபார்ப்பது, விரும்பிய சமையலைச் செய்து சாப்பிடுவது என்று ஓரிரு மாதங்களில் அவரை சிட்டி மாமியார் ஆக்கி விவரமானவராகவும் மாற்றி விட்டேன்.

''பார்த்தியா அம்மாவை. இப்ப மார்கெட் டுக்கெல்லாம் போக ஆரம்பிசுட் டாங்க. செல்போன் பயன்படுத்த கத்துக்கிட்டாங்க. எல்லோரிடமும் டீசன்டா பேசறாங்க. மற்ற ப்ளாட் பெண்களுடன் நல்லாபழகி, அவங்க தேடிவரும் அளவுக்கு பிரபலமாயிடாங்க. உனக்கு மகிழ்ச்சிதானே'' - என்றான் கோபி.

''பரவாயில்லை. மருமகனுக்கு மாமியார் மேல் அப்படியொரு பாசம். நல்லா ட்ரெய்ன் பண்ணிட்டீங்க. உங்களைப்போல் ஒரு மாப்பிளை கிடைக்க எங்க அம்மா ரொம்ப கொடுத்து வைச்சிருக்காங்க'' என்ற உமா கணவனைப் பரிவோடு பார்த்தாள்.

'' எல்லோரிடமும் திறமை இருக்கு. அதை வெளிக்கொண்டு வர ஒரு வாய்ப்பை உருவாக்கிக் கொடுக்கணும்.அவ்வளவு தான்'' - என்றான் கோபி.

''உங்களை மாதிரி வருமா மாப்ள... வாத்தியார் குழந்தைகளுக்கு கத்துக் கொடுகிற மாதிரி எல்லாம் கத்துக்கொடுத்திட்டீங்க. தாங்ஸ்'' என்று அத்தை சொல்லவும்,

''ஆஹா... இங்கிலீஷ் இங்கிலீஷ்...''- என்று கோபி துள்ள, அத்தை வெட்கத்தோடு ''ரொம்ப பாராட்டாதீங்க மாப்ள'' என்றவர் மகளிடம், ''உமா... இப்பதான் எனக்கு இங்க எல்லா விஷயமும் அத்துப்படி ஆயிடுச்சே. நான் இனிமே இங்க எல்லாம் பார்த்துக் கறேன்... மாப்பிள்ளை வேலை இல்லாம சும்மாதானே இருக்கார். எப்போ வேலை கிடைக்குமோ அதுவரைக்கும் அவரை கிராமத்துக்கு அனுப்பிவைக்கலாமே. அங்கே ஆள் இல்லாம வீடு பாழாகுதுல்ல'' - என்று சொல்ல, உமா கோபியைப் பார்க்க கோபி தலைச்சுற்றி கீழே விழுந்தான்.

நன்றி சென்னை சுகுமாரன்



# மதுபாலாவின் மனசுக்குள்



மதூ--- மதூ--- என்ற குரல் மனதுக்குள் மட்டுமல்ல, ஜன்னலிடை வந்த காற்றின் வழியேயும் கேட்கத்தான் செய்தது. நித்தி ரையில் இருந்து எழுந்துசென்று வெளியே பார்த்தாள். எதுவும் புலப்படவில்லை. இது அவனது குரல் தான் என்று மட்டும் அவளது உள்மனம் சொல்லியது.

ஒரு வாரத்திற்கு முன் ஆகாஷ், மது இரு வரும் மோட்டார் சைக்கிளில் வரும் போது ஏற்பட்ட வாகன விபத்தில் அவனுக்கு பயங்கரமாக அடிபட்டு மருத்துவமனை யில் சேர்த்திருந்தனர். இதனால் அவர்களின் காதல் விபரம் வீட்டிற்குத் தெரியவந்ததால் ஆகாஷை பார்க்கப்போகக்கூடாது என தடுத்துவைத்திருந்தனர்.

அவனது நிலையைப் பற்றி தெரி யாமலும் என்ன செய்வதெனப் புரியாமலும் தவித்துக்கொண்டிருந்தாள். எப்போதும் அவனது சிந்தனையாகவே இருப்பதாலும் ஒவ்வொரு நிமிடமும் அவன் அழைப் பது போல தோன்றியதாலும் குழப்பத்தில் ஆழ்ந்திருந்தவள் அவனும் இதே எண்ணத் தில் தான் தவித்துக்கொண்டிருப்பான் என் பதில் சந்தேகமில்லை என நினைத்தாள்.

எண்ணங்கள் வளர்ந்துகொண்டிருக்க கண்களில் துளிர்த்தது கண்ணீர். சில நிமி டங்களில் அவளது தொலைபேசி ரீங்கார மிட எடுத்துப்பார்த்தாள். இதழ்களில் புன் னகை விரிந்தது. அவளின் அன்பானவனின் அழைப்பு தான் அது.

அனுப்பிரியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லற வாழ்க்கை என்பது அன்பினால் கட்டப்படவேண்டிய ஒன்றாகும். அதில் தோற்பவர்களே வெற்றி பெறுகின்றார்கள். கணவனோ மனைவியோ தமது துணையின் வார்த்தைகளை மதித்து நடக்கும் போதும் தனது துணைக்கான மதிப்பையும் மரியாதையையும் வழங்கும் போதும் தம்மை தாம் நேசிப்பது போல தனது துணையையும் நேசிக்கும் போதும் அழகான இல்லறம் உதயமாகிறது.

கணவனை மனைவியும் மனைவியை கணவனும் தெள்ளத்தெளிவாக புரிந்துகொண்டால் அவர்களுக்கிடையில் கருத்து வேறுபாடுகளோ, முரண்பாடுகளோ தோன்ற வழியிருக்காது. சில சந்தர்ப்பங்களில் கருத்து வேறுபாடுகள் தோன்றினாலும் சூரியன் தோன்றி மறைவதற்குள் அவர்களின் கோபம் மறைந்துவிடும். புரிந்துணர்வுள்ள கணவன் மனைவியாய் வாழ்வதென்பது இறைவன் கொடுக்கும் வரமல்ல, அவரவர் வகுத்துக்கொள்ளும் இன்பமே ஆகும்.

# விடியலின் பூபாளங்கள்




சியாம், சுரேக்கா இருவரும் புரிதலுடனான இல்லறத்தில் வெற்றி கண்டவர்கள் தான். சியாம் ஒரு பாடகன். அவனுக்கு ஏராள மான இரசிகர்கள் இருந்தனர். ஆனால் அவன் ஒரே ஒருத்திக்கு மட்டுமே இரசிகனாக இருந்தான்.

ஆம்! அவன் எப்போதும் நேசித்தது சுரேக்காவை மட்டும் தான். கல்லூரி முடித்து பட்டப்படிப்பு படித்த காலத்திலேயே இருவருக்கும் பழக்கம் உண்டானது. சுரேக்காவும் அவனது பாடலுக்கு அடிமையாகி அவனை நேசித்தவள் தான். படிப்பு முடிந்ததும் இருவருமே தொழில் பார்க்கத்தொடங்கிவிட்டதால் எந்தச் சிக்கலும் இன்றி அவர்களின் திருமணம் இனிதே நடந்தேறியது. சுரேக்கா வீட்டிற்கு ஒரே பெண் என்பதால் வீட்டில் எப்போதும் அவளுக்கு செல்லம் தான். அதனால் தானோ என்னவோ சியாமை பற்றி அவள் சொன்னதுமே மறுபேச்சின்றி திருமணத்திற்கு சம்மதித்து விட்டனர் அவளது பெற்றோர்.

திருமணத்தின் பின்னர் சியாமோடு கணவன் வீட்டிற்கு வந்தவள், அந்த வீட்டில் ஏற்பட்ட அத்தனை பிரச்சினைகளிலும் அவர்களோடு துணைநின்று நல்லதொரு மருமகளாய் சிறந்த மனைவியாய் வாழ்ந்து காட்டினாள். சொந்தமாக நிறுவனம் ஒன்றை நடாத்திய சியாம் பகுதி நேர பாடகனாகவும் இயங்கிக்கொண்டிருந்தான். தான் ஒரே பிள்ளையாய் செல்ல மகளாய் வளர்ந்தேன் என்பதை அவள் ஒரு நாளும் நினைத்ததே இல்லை. சியாமின் குடும்பமோ மிகப்பெரி

→ பக்கம் 25



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய முத்து

கவிஞர் புத்தூர் வே. இளையகுட்டி

# புத்தூர் பெற்ற பல்துறை கலைஞர்

இலங்கையில் புகழ் பூத்த மூத்த இலக்கியவாதிகளை இன்றைய இளைய பரம்பரையினருக்கு ஒளி அரசியினூடாக அறிமுகம் செய்து ஆவணப்படுத்துகின்றோம். அந்த வகையில் கடந்த மாதம் இறைவனடி சேர்ந்த அமரர் கவிஞர் புத்தூர் வே. இளையகுட்டி அவர்களை இம் மாத இலக்கிய முத்துக்கள் பகுதியில் பிரசுரித்து வாசகர்களுடன் பகிர்ந்து கௌரவப்படுத்துவதில் ஒளிஅரசி அகமகிழ்கின்றது.



கவிதைகள் என்பவை வாசிப்பவனுக்கு சுகஅனுபவத்தையும் உள்ளத்துள் ஓர் உணர்ச்சிக்குவியலையும் ஏற்படுத்துவது என்றால் மிகையாகாது. அந்த வகையில் தன் கவிதைகளால் உள்ளங்களை கொள்ளை கொண்ட ஒரு கவிஞனாக விளங்கியவர் தான் புத்தூர் வே. இளையகுட்டி என்னும் பெயரில் இயங்கிய இளையகுட்டி ஆசிரியர்.

யாழ்ப்பாணம் என்னும் தீபகற்பத்தில் வலி கிழக்கில் புகழ்பூத்த, மருதமும் நெய்தலும் கைகோர்த்த இடமான புத்தூர் மணற்கேணியில் உதித்த கவிஞர் இவர். அழகிய இயற்கையின் பிரசவமாய் அறிவார்ந்த ஆளுமைகள் பிறப்பெடுப்பர் என்பதனை சான்றாக்க ஒரு விவசாயக் குடும்பத்தின் மூன்றாவது மகனாக உதித்து வறுமை, வளர்ச்சிகு தடையல்ல என்பதை தமது வாழ்க்கைப்பாடத்தின் மூலம் அனைவருக்கும் உணர்த்தி நின்றார். ஆவரங்கால் மெதடிஸ்ற்மிஷன் பாடசாலையில் கல்வி கற்று விஷ்ணு வித்தியாலயம், சோமஸ்கந்தா கல்லூரி என்பவற்றில் ஆசிரியப்பணியாற்றி பாரதியின் மிடுக்கோடும் கம்பனின் கவிநயத்தோடும் பல கல்வியாளர்களை உருவாக்கியவர்.

தமிழ்ப்பாட ஆசிரியரான இவர் ஆசிரியப்பணியின் அர்த்தம்தனை உணர்ந்து அவ்வழியே வாழ்ந்துகாட்டியவர். அன்பும் பண்பும் கலந்த சொல்நயத்தினால் மாணவர் மனங்களை எல்லாம் கட்டி ஆண்டவர். சிறந்த தமிழ் ஆசானாக விளங்கி குறுகிய காலத்திலேயே ஆற்றல் மிக்கதொரு கவிஞனாக பெயர்பெற்ற இவர் சிறந்த விளையாட்டு வீரனாகவும் நாட்டார் கலைகளின் மீது அதீத ஆர்வம் கொண்டவராகவும் விளங்கினார். அதுமட்டுமன்றி நல்லதொரு குடும்பத்தலைவனாகவும் ஆன்மீகப் பற்றாளனாகவும் சமூகப்பற்றாளனாகவும் விளங்கிய அன்னார் தற்போது எம் மத்தியில் இல்லை எனினும் இவரது கவிதைகள் இன்றும் என்றும் எம்மோடு பேசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மோடு பேசிக்கொண்டிருக்கப்போகின்றன. மரபுக்கவிதையாய் தனக்கென ஒரு பாணியை வைத்து சமூகச்சிந்தனையை பாடுபொருளாகக்கொண்டு எள்ளல் கலந்த நகைச்சுவையோடு சமூகத்தை உற்றுநோக்கி கவிதைகளால் சுட்டிக்காட்டியவர் இவர். இவரது கவித்துவத்தின் மிகப்பெரும் சான்றாக அமைவது தான் ஆவரங்கால் ஸ்ரீ புவனேசுவரி அம்பாள் இசைப்பாமாலை I, II ஆகும். பக்தி இலக்கியத்தின் தனித்துவமே இவ் இசைப் பாமாலை. சமகாலத்தில் இவரது கவிதைகள் பல்வேறுபட்ட பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

ரா.பி. சேதுப்பிள்ளை எழுதிய வீரமா நகர் என்ற நூலே தன்னை கவிதையில் நாட்டம்கொள்ள வைத்ததாகவும் அதன் சொற்செறிவும் இரசனையுமே தன்னை எழுதத்தூண்டியதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

கவிஞர் முருகையனே தனது மாசீக குரு எனக்குறிப்பட்டுள்ள இவர் ஆண்பாவம் என்னும் கவிதைத் தொகுப்பையும் தனது பவள விழா மலரில் சமூகக்கவிக்கடமை என்னும் கவிதைகளையும் எமக்கீந்துள்ளார்.

ஆண்பாவம் என்னும் தொகுப்பில் உள்ள ஆண்பாவம் என்னும் கவிதையே தன்னை அதிகம் கவர்ந்த கவிதை எனக்கூறியுள்ளார். முதிர்கன்னிகளின் வலிகளை கவிதையாக்கி சீதனத்தை குழிதோண்டிப்புதைப்பது போல பொறுப்புகள் பல கொண்ட ஒரு ஆணின் வலிகளை ஆண்பாவமாய் அவர் விளக்கியுள்ள விதம் பாராட்டிற்குரியதே.

வலி கிழக்கு பிரதேச செயலக கலாசார கலைக்குரிசில் விருது, கலாபூசணம் விருது, ஆளுநர் விருது என்னும் விருதுகளை தன தாக்கிக்கொண்ட இவர் சிறுவர் கவிதைத் தொகுப்பு ஒன்றை யாத்திருந்தபோதும் அது அச்சேறு முன்னரே அவரது உயிர் பூமிவிட்டேகி விட்டது. மாகாணசபைக்கான கீதத்தினையும் இவர் வடிவமைத்துள்ள போதும் அது தபாலில் சேர்க்கப்படவில்லை.

பிறப்பும் இறப்பும் வாழ்வின் நியதியே எனினும் பிறந்தவர்கள் வாழ்நாளில் தம் பெயரை நிலைநாட்டிச் செல்வதே வாழ்வின் அர்த்தமாய் அமையும். அந்த வகையில் இளையகுட்டி ஆசிரியர் பூரணத்துவம் மிக்க மனிதனாய் காலச்சக்கரத்தில் தன்னைப்பொறித்துள்ளார் என்பதை பவளவிழா மலரில் அவரிடம் கற்ற மாணவர்கள் தம் எண்ணங்களை பதிவுசெய்தமையும் குடும்பத்தின் நன்மதிப்பும் பறைசாற்றி நிற்கின்றது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் முதுகலை மாணவியான திருமதி விஜயலக்ஸ்மி பகீரதனால் முதுகலைமாணி ஆய்விற்காக இவரது கவிதைகள் ஆய்வு செய்யப்பட்டுவருகின்றது என்பது அனைவருக்கும் உவகை அளிக்கும் விடயமாகும்.



இவரது கலைப்பணியைப் பாராட்டி சமூக ஆர்வலர்களால் நடத்தப்பட்ட பாராட்டு விழாவில் தனது மனைவி, பிள்ளைகளுடன் அகமகிழ்வான தருணத்தில்...

— கோபிகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22 ஆம் பக்க தொடர்ச்சி

யது. சியாமிற்கு இரண்டு தங்கைகளும் இரண்டு தம்பிமாரும் இருந்தனர். வீட்டின் மூத்த பிள்ளை என்பதால் அத்தனை பொறுப்புகளும் அவனுக்கானதாகவே இருந்தது.

அவளை இழக்கவேண்டி ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சம் சியாமின் மனதில் இருப்பதை தெரிந்த பின்னர் அவனே தனக்கான பொறுப்புகளைப்பற்றி கூறிய பின்னரும் கேளாது தன் எண்ணப்படியே சியாமைத்திருமணம் செய்துகொண்டாள். அவள் புகுந்த வீட்டில் நுழைந்ததுமே அவளுக்கான பொறுப்புகளை எடுத்துரைத்த மாமியார் உன் ஆசைகள், சந்தோசங்களை எங்களுக்காக விட்டுத்தரவேண்டும் எனக்கேட்ட போது புன்னகையோடு சம்மதித்தாள்.

கணவனிடம் புரியும் படியாக கூறிய நொடியிலிருந்து அந்தக் குடும்பத்தின் சுகதுக்கங்களை தனதாக்கிகொண்டவள் தனக்கென தன் பெற்றோர் தந்த அத்தனை சொத்துக்களையும் தன் மைத்துனன்மாரின் படிப்புச்செலவிற்கும் மைத்துனியரின் திருமணத்திற்குமாகவே ஒதுக்கிவைத்தாள். அந்த குடும்பத்தின் முதல் மருமகளாகி எல்லாச் சுமைகளையும் சுமந்துகொண்ட போதும் ஒரு நாள் எனினும் அவள் அதற்காக வருத்தப்பட்டதோ சினந்துகொண்டதோ கிடையாது.

அவளது நிலையைக் கண்ட அவளது பெற்றோர் கூட ஓரிரு தடவை இது பற்றிய பேச்சை எடுக்க அது தனக்கும் கணவனுக்குமான உடன்பாடு என்றும் அதில் யாரும் தலையிடுவதை தான் விரும்பவில்லை எனவும் தந்தையிடம் தெளிவாகக் கூறிவிட்டாள். அவள் சியாமின் குடும்பத்தில் காட்டிய அளவில்லாத பாசத்தினால் தானோ என்னவோ அந்தக் குடும்பத்திலுள்ள அனைவரும் சியாமைவிட சுரேக்கா என்றால் ஒருபடி உயர்வாகவே மதித்தனர்.

ஒரு நாள் மனைவிக்கென அழகான சுரிதார் ஒன்றை வாங்கி வந்த சியாம் அதனை தங்கை கேட்டபோது கொடுக்கமறுத்துவிட அதனை தானே எடுத்துச்சென்று மைத்துனியிடம் கொடுத்துவிட்டு வந்தாள் சுரேக்கா. இதனை அறிந்த சியாம் இரண்டு நாட்களாக மனைவியோடு பேசாமல் இருந்துவிட்டான். கணவனின் அன்பின் ஆழம் புரிந்த போதும் மாமியார் மற்றும் மைத்துனியரின் அன்பை எதற்காகவுமே அவள் இழக்கவிரும்பியதில்லை. கணவனின் கோபத்தை தணிக்கும் வழி அறியாதவளாய் அவள் தவித்து நின்ற வேளையில் மைத்துனி வைசாலி தானாகவே அதனை கொண்டுவந்து கொடுத்து ''அண்ணி, இது அண்ணா உங்களுக்காக வாங்கினது, அதை நான் எடுத்துக்கொள்றது சரியே இல்லை, இதை நீங்களே போடுங்க, எனக்கு இதே டிசைன்ல வேற ஒண்டு வாங்கித்தாங்க,'' என்ற போது வார்த்தைகள் வராது மைத்துனியை இறுக்கிஅணைத்துவிட்டு நிமிர்ந்த போது தான் எதிரில் மாமியார் நிற்பதும் இது அவரது ஏற்பாடுதான் என்பதும் அவளுக்குப் புரிந்தது. அருகில் வந்து அவளது தலையைத்தடவிய மாமியார் நீயும் எனக்கு மகள் தானே என்றார் அன்பாய்.

மாலையில் அனைவரும் தியேட்டருக்கு புறப்பட்ட போது, தான் மனைவிக்காய் பார்த்துப்பார்த்து வாங்கிய அதே சுரிதாரில் அவளைப் பார்த்ததும் அசந்து நின்ற கணவனிடம் நடந்ததைக் கூறி மன்னிப்பும் கேட்டுக்கொண்டாள். என்னுடைய குடும்பம் முழுமையும் என்னை விட உன்னை நேசிக்க என்ன மந்திரம் போட்டாய்? என்றான்.

ரொம்ப சிம்பிள், என்னைவிட அதிகமா உங்க குடும்பத்தை நேசிக்கிறேன், அதனால அவங்களும் அதே டெக்னிக்கை என்னிடம் போலோ பண்றாங்க, என்றாள்.

அழகான ஒரு புன்னகையால் மனைவியை ரசித்தவன், உன்னை மாதிரி எல்லாப் பெண்களும் நினைச்சா உலகத்தில மாமியார்- மருமகள் சண்டையே வாராது என்றான்.

அப்போது அங்கே வந்த அவனது தாயார், ''நீ ஒரு பெண்ணை என்மருமகளா கூட்டிட்டு வரலடா, ஒரு தேவதையை கூட்டி வந்திருக்கிறாய்,'' என்றார்.

வருடங்கள் பல ஓடிவிட்டபோதும் சுரேக்காவின் மீது சியாம் கொண்டிருக்கும் அளவில்லாத நேசத்திற்கு அவள் காட்டிய அபரிதமான அன்பே காரணம் என்றால் அது மிகையான வார்த்தையே அல்ல. **உறவுகளே, அன்பு காட்டுவதற்கு காசா, பணமா, எதுவுமே இல்லை, உள்ளம் திறந்து அன்பை காட்டுங்கள், உலகமே உங்களுக்கு வசப்பட்டுவிடும்.**

**கருகருகண்களால்**
**கயல்விழி கொல்கிறாள்**
**வலித்தாலும் ஏதோ சுகம்**
**குழிவிழும் கன்னத்தில்**
**குடியிரு என்கிறாள்**
**விலையல்ல,**
**ஆயுள்வரம்.**

**நடந்தாலும் முன்னே**
**கடந்தாலும் பின்னே**
**மனம் எங்கும் அவள் ஞாபகம்.**
**சுகமாய் புரளும்**
**பேர் என் வாழ்நாளில்**
**சுரேக்கா...**

**திருமதி சந்தியா சந்தோஷ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1997** ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 14ஆம் திகதி லண்டனிலுள்ள கில்டுஹ சலில் அறிஞர்கள், கற்றறிந்தவர்கள் என்று பல ரும் குழுமியிருக்க, இந்தியப் பெண்மணியான அருந்ததிராய், 'சிறியது, அழகானது மட்டுமல்ல, பெருமைமிக்கது கம்பீரமானது. ஆனாலும் அது றது. ஆனாலும் எழுதிக்கொண் டிருக்கும்போதே 5 இலட்சம் ஸ்டேர்லிங் பவுண்ஸை அட் வான்ஸாக பெற்றுக்கொண்ட பெண்ணும் அருந்ததிராய்தான். இந்தியத் தொடர்புடையவர் களான சல்மான் ருஷ்டி, ருத்பிர



கவிஞர் எம்.பிரேம்ராஜ்



## அருந்ததிராய்

# 'ஒன்றையேனும் உருப்படியாய் செய் வென்றுவிட்டால் உலகமே நீட்டும் கை'

தான் பெரியது ஆயுள் கொண்டது. அதன் மணம் காலங்கள் கடந்தும் காணாமல் போகாது. யுகங் களாக வாழக்கூடியது. தேசங்கள் கடந்தும் வாசம் கொண்டது. சிறியவைதான் பெரிய மனங்க ளையும் வெற்றிகொள்ளும் சக்தி கொண்டவை' என்று கூறியபோது கரகோஷம் காற்றைக் கிழித் தது.

தனது 'தி கோட் ஒவ் ஸ்மோல் திங்ஸ்' (THE GOD OF SMALL THINGS) என்ற நாவ லுக்கு இலக்கியத்தின் மிகப் பெரிய பரிசான புக் கர் (Booker) விருதை வாங்கியபோது அவருக்கு வயது 34. தன் முதல் நூலுக்கே - அறிமுக நாவ லுக்கு புக்கர் பரிசு வென்ற உலகின் முதல் பெண் அருந்ததிராய்தான். இந்த கௌரவம் பெற்ற முதல் இந்தியரும் அவரே.

1992இல் எழுதத் தொடங்கிய அந்த நாவல் 1996இல்தான் முழுமைப் பெற் வர் ஜப்வாலா, நைபால் ஆகியோர் ஏற்கனவே புக்கர் விருதைப் பெற்றிருந்தாலும் அருந்ததி அவர்களிடமிருந்து முழுவதும் வித்தியாசப்படு கிறார். புக்கர் விருதை வென்ற முழுமையான இந்திய எழுத்தாளர் என்பதுதான் அது.

விருது பெற்ற மற்றையவர்களைப்போல் அவர் வெளிநாட்டில் வாழ்ந்தவரும் அல்ல. வெளிநாட்டில் படித்தவரும் அல்ல. இந்தி யாவிலேயே பிறந்து வளர்ந்து கல்வி கற்றவர். எழுத்தும் பாணியும் இந்தியச் சூழலை சுற்றிவந் தது. 1997ஆம் ஆண்டு மே மாதம் வெளியான THE GOD OF SMALL THI-NGS ஜூன் மாதம் முடிவதற்குள் 18 நாடுகளில் விற்பனையாகியது.

இந்தியாவில் தற்போது மேகாலயா என்று அழைக்கப்படும் அஸாம் மாநிலத்தின் தலை நகர் சில்லாங்கில் 1961ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24ஆம் திகதி வங்காள இந்து மதத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைச் சேர்ந்தவரும், தேயிலை பிளான்டேசன் மனேஜராகக் கடமையாற்றியவருமான ராஜீப் ராய் மற்றும் கேரளாவைச் சேர்ந்த கிறிஸ்தவ மதத்தவரான மேரி தம்பதியினருக்கு மகளாகப் பிறந்தார் அருந்ததிராய். கேரளாவிலுள்ள கோட்டயத்திலும் தமிழ்நாட்டிலுள்ள நீலகிரியிலும் தன் பள்ளிப்படிப்பை முடித்தவர் பின்பு டில்லியிலுள்ள பல்கலைக்கழகத்தில் கட்டடக் கலை பயின்றார். கட்டடக் கலைஞரான ஜெராட்டா கன்ஹா என்பவரைக் காதலித்து மணந்துகொண்டார். நான்கு ஆண்டுகளில் கருத்து முரண்பாடு காரணமாக அவரைப் பிரிந்தார்.

1984இல் ப்ரதீப் கிரிஷன் என்ற திரைப்பட இயக்குநரை திருமணம் செய்தவர் கணவரோடு சேர்ந்து ரெலிவிஷன் தொடர் ஒன்றை இயக்கினார். தன் கணவரோடு சேர்ந்து இயக்கிய இன் விச் அன்னி கிவ்ஸ் இட தோஸ் வன்ஸ் (In which Anne gives it those ones) என்ற திரைப்படத்துக்கு தன் இளமைக்கால நினைவுகளையும், பாடசாலை அனுபவங்களையும் திரைக்கதை வசனமாக எழுதினார். 1989ஆம் ஆண்டின் சிறந்த திரைப்பட வசனகர்த்தா என்ற தேசிய திரைப்பட விருதை அந்தத் திரைப்படம் மூலம் பெற்றுக் கொண்டார். மீண்டும் கணவருடன் இணைந்து 1992இல் இலக்ரிக் மூன் (Electric Moon) என்ற திரைப்படத்தை இயக்கினார்.

ப்ரதீப் திரிஷனுடனும் கருத்து விரோதம் ஏற்படவே மணவாழ்க்கை முறிவடைந்தது. பின்னர் பல்வேறு வேலைகளைச் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படவே கூச்சப்படாமல் பொருளாதார நெருக்கடி காரணமாக அத்தனையும் செய்தார். இசைக்கேற்ப நடனமாடி துள்ளிக் குதிக்கும் உடற்பயிற்சி வகுப்புகளையும் நடத்தினார் அருந்ததி. THE GOD OF SMALL THINGS புத்தகம் வெளியிடப்பட்டு பல நாடுகளிலும் பரபரப்பாக விற்கப்பட்டதான் பின்னரே பொருளாதார கஷ்டங்களிலிருந்து மீண்டெழுந்தார்.

இந்தப் புத்தகத்தைப் பார்த்த நிவ்யோர்க் ரைம்ஸ் இதழ், 'அசாதாரணமான துன்பமும், கணிசமான திகைப்பூட்டும் நிறைந்த முதல் புத்தகம்' என்று விமர்சனம் எழுதியது. 1997 ஆம் ஆண்டு அனைவரையும் திரும்பிப் பார்க்க வைத்த நூல் என்றும் குறிப்பிட்டது. கனடாவின் டொரன்டோ ஸ்டார் சஞ்சிகை, 'மந்திரத்தமான பசுமை நூல்' என்று வியாக்கியானம் சொன்னது. ரைம்ஸ், தி கண்டியன் போன்றவைகளும் பெரிய பாராட்டுப் பத்திரங்களை வழங்கின.

தன் எழுத்துகள் மக்களை வெகுவாகக் கவர்வதையும், வெகு சீக்கிரமே மக்களிடம் சென்றடைவதையும் உணர்ந்தவர் அரசியல் கட்டுரைகள், விமர்சனங்கள் என்று ஏராளமாக எழுதத் தொடங்கினார். சமுதாயத்திலுள்ள பெண் அடிமைத்தனம், குழந்தைத் தொழிலாளர் கொடுமை, அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கை, இந்தியாவின் அணு ஆயுதப் பரிசோதனை, குணோபலேசன், பிரிவினை கோரும் காஷ்மீரியர்களுக்கு ஆதரவுப் பிரசாரம், நர்மதா அணைத் திட்டத்துக்கு எதிர்ப்பு, இஸ்ரேல் பயங்கரவாதம், 2011 இந்திய நாடாளுமன்றத் தாக்குதல், 2008 மும்பைத் தாக்குதல், தமிழ் மக்கள் மீது இலங்கை இராணுவத்தின் அடாவடித்தனம் என்று அருந்ததி தொடாத சங்கதிகள் எதுவுமில்லை.

இந்தியாவில் தேங்கிக் கிடக்கும் வழக்குகளையும் சட்டத்தின் அலட்சியப் போக்கையும் விமர்சித்த குற்றத்துக்காக 2500 ரூபா தண்டமும் ஒருநாள் சிறை வாசத்தையும் அனுபவித்தார். இவரது படைப்புகளின் தன்மை பலநேரம் எதனையும் கறுப்பு வெள்ளையென்று பிரித்து அடையாளம் காட்டாது. மனிதர்கள், நாடுகள், கொள்கைகள் என்ற அனைத்திலும் உள்ள தீமை மற்றும் நன்மைகளை உணர்ச்சி நிலையிலிருந்து விலகி படைப்பதால் இவரது ஆக்கங்கள் உலகின் பல பத்திரிகைகளிலும் இடம்பெற்று வருகின்றன. மேதா பட்கர் தொடங்கிய 'நர்மதா பச்சாவோ அந்தோலேன்' (NARMADA BACHAO ANDOLAN) என்ற அமைப்பில் தீவிரமாகப் பங்காற்றி சேவை செய்வதோடு, புக்கர் விருதுப் பணமான 30,000 அமெரிக்க டொலர்களையும் அந்த அமைப்புக்கே கையளித்தார்.

2004 ஆம் ஆண்டு சிட்னி அமைதி விருதை வென்றவருக்கு 2006 ஜனவரியில் வழங்க விருந்த சாகித்ய அகடமி விருதை இந்திய அரசின் அமெரிக்கசார் கொள்கைகளையும், தொழிற்சாலை ஊழியர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளையும் காரணம் காட்டி வாங்க மறுத்துவிட்டார். 2011 நவம்பர் மாதம் இரண்டு பொருட்களுக்கிடையில் உள்ள வேறுபாட்டை பிரித்தறிந்து காட்டும் திறமை மிகு எழுத்துகளுக்காக நோர்மன் மெய்லர் விருது (NORMAN MAILER PRIZE) வழங்கி பாராட்டப்பட்டார்.

ரைம்ஸ் இதழ் 2014இன் செல்வாக்குமிக்க 100 பெண்களில் ஒருவராக அருந்ததியைப் பெயரிட்டிருந்தது. 2015இல் சமயங்கள் மூலம் உருவாகும் சண்டைகளுக்கெதிரான போராட்டங்களுக்குத் துணை நின்றதால், தேசிய விருதையும், அதே ஆண்டு அம்பேத்கார் சுடர் விருதையும் தனதாக்கினார். இங்கிலாந்தின் ஹமிஸ் ஹெமில்டன் நிறுவனம் அருந்ததியின் இரண்டாவது நாவலான தி மினிஸ்ரி ஒவ் அட்மோஸ்ட் (THE MINISTRY OF UTMOST) 2017 ஜூன் மாதம் வெளிவரும் என்று அறிவித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சித்திரை புது வருட வாழ்த்துக்கள்



தன்னுடைய பழமையான அடையாளங்களையும், பொக்கிஷங்களையும் போற்றி பாதுகாப்பதில் இந்தியாவில் இருக்கும் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் ராஜஸ்தான் ஒருபடி மேலே இருக்கிறது என்று தான் சொல்ல வேண்டும். இம்மாநிலத்தின் பெரும்பகுதி பாலைவன பிரதேசமாக இருந்தாலும் ராஜாக்கள் காலத்தில் மிகவும் செல்வசெழிப்பு மிக்க இடமாக ராஜஸ்தான் இருந்திருக்கிறது.

அந்த செல்வம் தான் வரலாற்று காலம் நெடுகவும் ராஜஸ்தான் ஏராளமான படையெடுப்புகளுக்கு ஆளாகவும் காரணமாக அமைந்திருக்கிறது. வீரம் பொருந்திய ரஜபுத்திர வீரர்களாலும், மார்வார் வீரர்களாலும் ஆட்சி செய்யப்பட்ட ராஜஸ்தானில் வாழ்ந்த மக்கள் எக்காரணம் கொண்டும் போரில் எதிரிகளின் கைகளில் சிக்கி மானமிழக்க கூடாது என்பதை கொள்கையாக கொண்டிருந்திருக்கின்றனர்.

இவ்வளவு வீரம் கொண்ட அந்த ஊர் மக்கள் தற்கொலை செய்து கொள்ள என்ன காரணம். அப்படி 24000 பேரும் ஒரே நேரத்தில் தற்கொலை செய்துகொள்ள என்ன கொடுமை நடந்திருக்கும்? அந்த கொடூர சம்பவம் நிகழ்ந்த இடத்தை பற்றி தெரிந்து கொள்வோம்.

தகிக்கும் 'தார்' பாலைவனத்தின் நடுவே கம்பீரமாக அமைந்திருக்கிறது ஜைசால்மர் கோட்டை. உலகின் மிகப்பெரிய கோட்டை வளாகமான இது 2013ஆம் ஆண்டு யுனெஸ்கோ அமைப்பினால் உலக புராதன சின்னங்களில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டு மத்திய அரசினால் பரமாரிக்கப்படுகிறது. கிட்டத்தட்ட 900 வருடங்கள் பழமையான இக்கோட்டையின் மதில்களுக்கு பின்னால் எண்ணற்ற வரலாற்று சம்பவங்கள் புதைந்திருக்கின்றன.

ரஜபுத்திர அரசர் ராவல் ஜைசால் என்பவரால் 1156ஆம் ஆண்டு இக்கோட்டை கட்டப்பட்டிருக்கிறது. அதனாலேயே இது ஜைசால்மர் கோட்டை என்று விளக்கப்படுகிறது. பெரும் படையெடுப்புகளையும் எதிர்கொள்ளும் வகையில் மூன்றடுக்கு சுவர்களால் இக்கோட்டை கட்டப்பட்டிருக்கிறது.


ஜெய்சால்மர் நகரின் இதய பகுதியில் அமைந்திருக்கும் இக்கோட்டையானது வரலாற்று காலம் நெடுகிலும் எண்ணற்ற போர்களையும், முற்றுகைகளையும் சந்தித்திருக்கிறது. அதிலும் 1294ஆம் ஆண்டு துருக்கியை சேர்ந்த கில்ஜி வம்சத்தின் இரண்டாவது அரசனான அலாவுதீன் கில்ஜியால் மேற்கொள்ளப்பட்ட முற்றுகை தாக்குதலின் முடிவு நம்

**இருபத்திநாலாயிரம் பெண்கள் ஒன்றாக உயிரை மாய்த்தனர்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நெஞ்சை பதற வைக்கும்.

கில்ஜியின் சொந்த நாடான துருக்கியில் இருந்து ராஜஸ்தான் வழியாக 3000க்கும் மேற்பட்ட குதிரைகளில் டெல்லிக்கு கொண்டு செல்லப்பட்ட பொருட்களை ஜைசால்மர் ராஜ்யத்தை சேர்ந்த பட்டி இனத்தவர்கள் கொள்ளையடித்துவிடுகின்றனர் . இதனை கேள்வியுற்று வெகுண்டெழுந்த அலாவுதீன் கில்ஜி ஜைசால்மர் நகரின் மீது படையெடுத்து செல்கிறார்.

அலாவுதீன் கில்ஜியின் படைகள் இந்த ஜைசால்மர் கோட்டையை கிட்டத்தட்ட 8 ஆண்டுகள் முற்றுகையிட்டு போர் புரிகின்றன. இந்த எட்டு வருடங்களும் போருக்கு காரணமாக அமைந்த பட்டி வம்சத்தினரே கில்ஜியின் படைகளுக்கு எதிராக வீரம் செரிக்க போர் புரிந்திருக்கின்றனர். பின்னர் ஒருகட்டத்தில் கோட்டையினுள் சேமிக்கப்பட்டிருந்த உணவு தீர்ந்துபோகிறது.

அதே காலகட்டத்தில் ஜைசால்மரின் அரசர் ஜெத்சியும் மரணமடைகிறார். இதனை வாய்ப்பாக பயன்படுத்திக்கொண்ட கிஜ்லி தனது படை வீரர்களின் எண்ணிக்கையை அதிகரித்ததோடு மட்டுமில்லாமல் வெளியிலிருந்து கோட்டைக்கு உணவு கொண்டு செல்லப்படும் எல்லா பாதைகளையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருகிறார்.

உணவு பற்றாக்குறை, அரசரின் இழப்பு ஆகிய காரணங்களினால் ஒரு கட்டத்தில் தோல்வி உறுதி என்பதை உணர்ந்த கோட்டையினுள் இருந்த பட்டி வம்ச பெண்கள் 'ஜௌஹர்' என்ற சடங்கை மேற்கொள்ள துணிகின்றனர்.

போரில் தோல்வி உறுதியாக கில்ஜி படைவீரர்கள் கோட்டையை கைப்பற்றிவிடுவார்கள் என்ற நிலை வந்ததும் அக்கோட்டையினுள் இருந்த 24,000 ரஜபுத்திர பெண்களும் தங்களை தாங்களே தீயிட்டு மாய்த்துக் கொள்கின்றனர். தீக்குளிக்க விரும்பாதவர்கள் தங்கள் கணவனின் கைகளால் சிரங்களை கொய்து கொண்டனர்.

இது நடந்தவுடன் கோட்டையை பாது காத்து வந்த 3800 பட்டி வீரர்களும் கோட்டையின் கதவுகளை திறந்து எதிரியுடன் நேருக்கு நேராக சமர் செய்து தங்கள் உயிரை மாய்த்துக் கொண்டனர். சில வருடங்கள் கழித்து மீண்டும் இக்கோட்டையை பட்டி வம்சத்தினர் கைப்பற்றியிருக்கின்றனர்.

அன்றிலிருந்து இன்றுவரை இக்கோட்டையினுள் பட்டி வம்சத்தினர் பரம்பரை பரம்பரையாக ஏராளமான அளவில் வசித்து வருகின்றனர். இன்று ராஜஸ்தானின் மிகமுக்கியமான சுற்றுலா ஈர்ப்புகளில் ஒன்றாக இந்த ஜைசால்மர் கோட்டை திகழ்கிறது. மஞ்சள் நிறமுள்ள மணல் கற்களை கொண்டு கட்டப்பட்டிருக்கும் இந்த கோட்டை சூரிய அஸ்தமனத்தின் போது தங்க நிறத்தில் ஒளிர்வதால் 'தங்க கோட்டை' என்றும் அழைக்கப்படுகிறது.

இந்த கோட்டையினுள்ளே ஜைசால்மர் அரச பரம்பரையினர் வாழும் 'ராயல் பெலஸ், லக்ஷ்மிநாதர் ஆலயம், அக்காலத்தில் வணிகர்கள் தங்குவதற்காக கட்டப்பட்ட ஹவேலிக்கள் போன்றவை இருக்கின்றன.

இன்று ஒவ்வொருநாளும் ஆயிரக்கணக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் இக்கோட்டையை சுற்றிப் பார்க்க வருகை தருகின்றனர். இந்த கோட்டையினுள்ளே இருக்கும் உணவகங்களில் அதி சுவையான பாரம்பரிய ராஜஸ்தானிய உணவுகள் கிடைக்கின்றன.

நன்றி இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








# இனிப்பில் ஒரு கசப்பு

தேன்மொழியும் ஆரணியும் சித்ராங்கியும் ஒரே குடியிருப்பில் வசிப்பவர்கள். புதுவருடத்திற்கு உடுப்புகள் எடுப்பதற்காக தயாரான தேன்மொழியும் ஆரணியும் கதைத்தபடியே சித்ராங்கியின் வீட்டை நோக்கி நடந்தனர். இவர்கள் இருவரது வீடுகளும் மிக அருகிலும் சித்ராங்கியின் வீடு சற்று தொலைவிலும் இருந்தது.

கேற் திறபடும் சத்தம் கேட்டு எட்டிப்பார்த்தபடி வெளியே வந்தாள் சித்ராங்கி.

சித்ராங்கி - அடடா -----வாங்கோ-----வாங்கோ . என்ன விசயம், ரெண்டு பேரும் ஒண்டா வந்திருக்கிறீங்கள்?

ஆரணி - நல்லா கேட்டாய் போ, நீதானே, புதுவருசத்துக்கு உடுப்பு எடுக்கப்போகேக்க நானும் வாறன் எண்டு சொன்னனி?

தேன்மொழி - பாத்தியே, வரச்சொல்லிப்போட்டு ஏன் வந்தனியள் எண்டு கேக்கிறதை?

சித்ராங்கி - ஐயோ நான் அப்பிடி நினைச்சுக்கேக்கயில்ல, குறை நினைச்சுப்போடாதேங்கோ அக்கா, சும்மா தமாஸா சொன்னன்.

ஆரணி - சரி, சரி அப்ப கெதியா வா போவம்.

சித்ராங்கி - அக்கா ஒரு வண் அவரில போவமே,

தேன்மொழி - வண் அவரோ, ஏன் அவளவு நேரம் என்ன செய்யப்போறாய்?

சித்ராங்கி - தங்கமான புருசனைப் பாத்திட்டுப் போவம் அக்கா.

ஆரணி - ஏன் உன்ர மனுசன் இண்டைக்கு அரை நேரத்தோட வாறன் எண்டவரோ?

சித்ராங்கி - போங்கோ அக்கா, உங்களுக்கு எப்பவும் பகிடி தான்,

தேன்மொழி - என்ன சொல்லுறாய், உன்ர மனுசன் தங்கமான புருசன் எண்டுறது பகிடியே,

சித்ராங்கி - அவர் தங்கமான புருசன் எண்டிறது நிஜம் தான், ஆனால் நான் சொன்னது தங்கமான புருசன் சீரியலை, நேற்று நல்ல கட்டத்தில நிப்பாட்டிப் போட்டாங்கள், பாக்காட்டி தலைவெடிச்சுப்போடும்.

ஆரணி - பாத்தியே, தலைவெடிச்சுப்போடுமாம், உந்த சிரியலால எவ்வளவு கெடுதி எண்டு விளங்குதே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தே - உண்மை தான், வீட்டில இருக்கிற பொம் பிளையள் மட்டு மில்லை, வேலைக்குப்போறவையும் வேலை முடிஞ்சு வந்தா உதே பைத்தியம் தான்.

ஆ - சீரியல் மோகம் கொஞ்சமாவே ஆட்டிப்படைக்குது, உதால எவ் வளவு நேரவிரயம் தெரியுமே,

தே - அந்தக்காலத்தில் எங்கட சனம் எவ்வளவு புத்தகங்களை வாசிச்ச வை, இப்ப விடிஞ்சா பொழுதானா சீரியல் ----சீரியல் எண்டே காலத்தை கடத்துதுகள், அதுக்குள்ள தேவையில்லாத மன உழைச்சலும் வந்திடுது.

சி - நீங்கள் ரெண்டு பேரும் சொல்லுறது ஓரளவுக்கு சரிதான் எண்டாலும் சீரியலால நன்மை இல்லாமலும் இல்லை.

ஆ - சொல்லன், என்ன நன்மையைக் கண்டிட்டாய்?

சி - ரைம் பங்சுவாலிற்றி எண்டிறது சீரியலால வருகுது எண்டால் இல்லை எண்டு சொல்லுவியளே,

தே - ரைம் பங்சுவாலிற்றியோ?

சி - ஓமக்கா, நாடகம் பாக்கிறதுக்காகவே திட்டமிட்டு குறைஞ்ச நேரத்தில குயிக்கா சமைச்சு முடிக்கிறம் எல்லே,

ஆ - கதையைப்பாரன், உனக்கு சீரியல் தான் நேரத்தை முகாமை செய்ய சொல்லித்தருதே,

தே - எங்கட எதிர்வீட்டில இருக்கிற காமாட்சி மாமி சீரியல் பாக்கிற அவசரத்தில கறி வேப்பிலைக்குப் பதிலா வேப்பிலயப் போட்டு அரைச்சுப்போட்டாவாம்.

சி - நல்ல பகிடிதான்,

ஆ - அந்த அளவுக்கு சீரியலின்ர ஆதிக்கம் இருக்கெண்டு சொல்லுங்கோ

தே - அது மட்டுமே, நாடகத்தில கணவன் மனைவி பிரிஞ்சிட்டினம் எண்டாலோ ஹீரோயினி தோற்றுப்போய் நிண்டாலோ அண்டைக்கு முழுக்க வீடு ரெண்டு பட் டுப்போயிடுது சிலபேருக்கு,

சி - ஆனால் அக்கா நாடகம் பாக்கிறதால மனசுக்கு ஒரு றிலாக்ஸ் தானே,

ஆ - அப்பிடி ஒரு மாயை ஐ எல்லாரின்ர மனசிலயும் சீரியல்கள் தந்திருக்கு எண்டது நிஜம் தான். ஆனால் ஒரு விசயம் சொல்லட்டே, நாடகங்கள் பொழுதுபோக்குக்கு மட்டும் தான் எண்டதை மனசில பதிக்கவேணும், அம்மாமாரோடை சேந்து பொம் பிளைப் பிள்ளையளும் நாடகம் பாக்கிறதால இப்ப பள்ளிக்கூடங்களில ஆம்பிளைப் பிள்ளையளை விட பொம்பிளைப்பிள்ளையள் தான் மோசமாம்.


தே - நாடகம் பாக்கிற நேரத்தில பாதியையாவது நல்ல புத்தகங்களை வாசிக்க ஒதுக்கி னால் பிள்ளையளுக்கு இன்னும் அதிகமா நல்ல விசயங்களை சொல்லிக்குடுக்கலாம் எண்டது நிஜம்.

சி - ஓமக்கா, நீங்கள் சொல்லுறது விளங்கிது, இனிமேல் நானும் நாடகம் பாக்கிறதை குறைக்கவேணும்.

ஆ - சரி, சரி வெளிக்கிடு நேரம் போகுது.

(மூவரும் ஒன்றாய் நடக்கின்றனர் புதுவருட ஆடை வேட்டைக்காய்)

ஜனநாயகி



புது வருடத்துக்காவது அப்பா வருவாரா?

வடிவமைப்பு : எஸ்.மகாவிஷ்ணு, எம்.ஜீவநீதன், ப.ரகுப்பிரியன்

ஆசிரிய பீடம் : தொலைபேசி : 0114320695, துரித அழைப்பு : 0718628369,

தொலைநகல் : 0114322614, E-mail : oliarazi33@gmail.com, Viber - 0779046836

கடித தொடர்புகளுக்கு :

ஆசிரியர், 'ஒளிஅரசி' இல. 85, ஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை, கொழும்பு - 14.
அல்லது இல. 55, பருத்தித்துறை வீதி, நெல்லியடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண் யார் அவள்..?

பெண்மையின் புனிதம் தெரியா புண்ணியவான்களே! இனியாவது பெண் அவளும் ஓர் புண்ணியவதி என்றாவது புரிந்துகொள்ளுங்கள்.

இங்கு நான் பெண்ணின் பெருமை பேசவரவில்லை. ஆனால் அவளுக்கும் ஓர் உரிமை உண்டு என பேசுகிறேன். பெண்ணியம் பேச வருகின்றேன், ஆனால் பெண்மையை மறந்து அவள் மதி இழந்து போகும் பெண்மைக்காய் அல்ல!

மேற்கத்திய பெண்கள் கேட்கும் பெண் உரிமை எமக்கு வேண்டாம்... மாறாக எம்

ஸஹாபிய பெண்மணிகள் கேட்ட பெண் உரிமையே வேண்டும்! எம் உம்மத்தே உம்மிடம்தான் கேட்கிறோம் தரமுடியுமா...???

மங்கை அவளுக்கும் மார்க்கத்தில் கல்வி கற்றிட அனுமதி இருப்பதை மன்னவன் நீர் அறிவாயோ...? இருந்தும்...அறிந்தும்..... நீர்

அனுமதி மறுப்பது ஏனோ???

உன் வீட்டு மங்கைக்குதான் உன் அதிகாரம் போனால் போகட்டும் என்றால்... அடுதவன் வீட்டு மங்கையர் மேல் உனக்கென்ன அதிகாரம் உண்டு மனிதா...? அவள் உரிமையிலும் உன் கைவைக்க??

அந்நியவள் அவள் ஆதரவுக்கு யாருமின்றி அடக்கம் ஒடுக்கமாய் அவள் தேவைக்கு வெளிச்சென்று வருகின்றாள்...! ஆனால்

அந்நியவன் நீயோ அவதூறு பல சொல்கின்றாய் அவளைப்பார்த்து. இது உனக்கே நியாயமா...?

நாம் வாழ்வதோ அந்நிய நாடு, இருந்தும் உன் வீரப்பேச்செல்லாம் அரபு நாட்டின் வாழ்க்கை போல் அல்லவா காணப்படுகின்றது.

மணவாளனே உன் மணமகள் மகர் கொடைதனை மனமுவந்து கொடுக்க சம்மதிப்பீரோ....

மறுபடியும் உன்னவளிடம் மறுகை நீட்டி கேட்டிடாமல்..?

மார்க்கம் கற்ற மாமேதை சொற்பொழிவு கேட்டேன் அன்று. மேதை அவன் போதையிலா பேசுகிறான் பேதை அவள் பற்றி...??? புரியவில்லை எனக்கும்.

பல்கலை சென்றவள் எல்லாம் பண்பிழந்தவள், கற்பிழந்தவள் என்று அவன் இஷ்டத்திற்கு பேசுகிறான். அறிவுலக மேதையே அறிந்தாயோ நீயும் கற்பிழந்தவள் யாரென்று...??? உண்மை யாதென்று அறிந்து உரியவர்க்கு உபதேசம் உரைத்திடு.

உன் வாய் வந்தபடி திட்ட நாமென்ன உன் பேசுபொருளா...???

உன் மேடைப்பேச்சில் வீராப்பு போட்டு பேசு ஆனால் பெண்கள் எம்மை வீண்பழி சுமத்தி இழிவுபடுத்தாதே...!!!

கயவனே! பெண்கள் எம்மை வீட்டில் முடங்கி இருக்க சொல்கிறாயே... எம் தூதர் என்ன பெண்களை ஏதுமறியா பேதைகளாக முடக்கியா வைத்தார்?

தனிமையில் பெண் வெளிச்செல்வது தவறுதான்! ஆனால் அதையே காரணமாக வைத்து பெண்கள் கூட்டமாக பாதுகாப்பிற்கு உத்தரவாதம் இருக்கும் பட்சத்தில் வெளிச்சென்று வந்தாலும் சீர்கெட்டவள் என்று கூறுகின்றாயே உன் குணம்தான் சீர்கெட்டு விட்டதோ...???

பெண் பல்கலை செல்வது சீர்கேடு என்று கூறுகிறாயே, அறிந்தாயோ நீயும் உம் போன்ற கயவர்கள்தான் ஒரு சில சீர்கேட்டையும் ஊருக்கு பறைசாற்றி சீரழிப்பதென்றும்...!

நடப்பது எதுவோ நடந்ததாக கூறுவது எதுவோ?

இவ்வாறு கூறும் உனக்கு வெட்கமில்லையோ?? வாய்திறந்து பெண் வைத்தியர் வேண்டும் எனக் கூறுகின்றாயே.

ஒரு பெண் தவறிழைத்தால் ஒட்டு மொத்த பெண் சமூகத்தையும் குறைகூறுவதுதான் நீர் எமக்கு தந்த பெண் உரிமையா???

பெண் உரிமை எனும் பேரில் பெண்களை கொச்சைப்படுத்தும் நீயும் எமக்கு ஓர் எதிரியே.!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்கம் எனும் பேரில் உம் இஷ்டத்துக்கு பெண்ணுரிமை பேசி பெண்கள் எம்மை அவமானப் படுத்தாதீர்!

பூரண சுதந்திரம் தந்த எம் புனித இஸ்லாம் மார்க்கம் எமக்கு எவ்வாறு நடந்து கொள்வது என்று அழகிய வழிகாட்டல்களையும் வழங்காமலில்லை!

போலிப் பெண்ணுரிமை பேசி பெண்களை அடிமைத்தனம் செய்ய நினைக்கும் பொய்யர்களே! நாங்கள் ஒன்றும் அறியா மடந்தைகள் அல்ல என்பதை நீ முதலில் அறிந்து கொள்!

நாம் உம்மிடம் புதிதாக பெண்ணுரிமை கேட்க வரவில்லை! எம் ஸஹாபிய பெண்மணிகள் பெற்றுத் தந்த பெண் உரிமையை நீர் தந்தாலே எமக்குப் போதும்...!

எம் அன்னையர் அழகிய வழியில் நாமும் நலமாய் வாழ்திட...!

இறுதியாய் இனியும் எம் உரிமை உனக்கு தர இஷ்டமில்லை எனின்.... ஒதுங்கி விடு உன் பாட்டிற்கு. மீண்டும் வராதே எம் உரிமையில் கைவைக்க!!!

(பெண்களை கண்டபடி விமர்சனம் செய்யும் கயவர்களுக்கு சமர்ப்பணம் )

ஷிபா இப்ராஹிம், மருதமுனை




# ௯0 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

வத்தளையைச் சேர்ந்த திருமதி சரஸ்வதி லெட்சுமணன் அவர்கள் தனது 90 வது பிறந்தநாளை தனது குடும்பத்துடன் கொண்டாடினார். இவரை மகன்களான ,மாதவன், ஜெயபாலன், சிவபாலன், நவநீதன், மகள்கள், கிருஸ்ணவேணி, சாந்தி, லலிதா, மருமகன்கள், கமலநாதன், திருமேனி, அசோகன், மருமகள்கள், தேவநாயகி, ரூத், வசந்தி, உமா, பேரப்பிள்ளைகள் வலித்தானந், கேஷினி, சரவணகுமார், நிரோசா,தேவப்பிரியன், சாரு, டில்ஷான், பிரியா, திலக்தனுஜா, நிரோசன், துஷாந்தன், ஆனந், ஜனு, வித்தியானந், லக்ஷாயினி, அசோக், அபிராமி, நிஷாந்தன், பவித்ரா, ஆர்த்திகா, லக்ஷன், பூட்டப்பிள்ளைகள், தன்யஸ்ரீ, கிருத்திகா, அனிஷா, அனிருத், மிதுசன், ஷெரோனி, மற்றும் உறவுகளும் சுற்றமும், நலனும், வளமும் பெற்று வாழ வாழ்த்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வாருங்கள் பேசலாம்

# பொழுது போக்கு

'வாருங்கள் பேசலாம் வாழ்க்கை பற்றி' எனும் தொடரின் ஊடாக உங்களைச் சந்திப்பதில் உண்டாகின்ற சந்தோஷத்தைத் தெரியப்படுத்திக்கொள்கின்றேன். இந்தத் தடவை நான் உங்களுக்கு 'பொழுதுபோக்கு' என்கின்ற தலைப்பில் சில விடயங்களை முன்வைக்கலாம் என நினைக்கின்றேன்.

இந்த மனித வாழ்க்கை எமக்குக் கிடைப் பதற்கு நாம் பெரும் புண்ணியம் செய் திருத்தல்வேண்டும். மிகவும் இரம்மிய மான இன்பமும், துன்பமும் கலந்த இந்த வாழ்க்கை எமக்குக் கிடைத்தது வெறுமனே நாம் வாழ்ந்துவிட்டுப் போவதற்கு அல்ல. எமது அறிவையும், ஆற்றலையும் விருத்தி செய்து, கல்வி அறிவைப் பெற்று சரித்திரப் பொன்னேட்டில் எம் பெயர்களைப் பதித்து விட்டு செல்வதே எமது நோக்கமாக இருக்க வேண்டும். எமது கல்விச் செயற்பாடுகள் மற் றும் தொழில் நிலைமைகள் ஆகியவற்றுக்கு மேலதிகமாக எம் பிற திறன்களையும் விருத் திசெய்துகொள்ள முயல்வதே மிகச் சிறந்தது.

எங்களுக்குக் கிடைக்கின்ற மேலதிக நேரத் தில்தான் - அதாவது, ஓய்வுநேரத்தில்தான் இப்படியான மேலதிகச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான வாய்ப்பு எமக்குக் கிடைக்கின்றது. ஆனாலும் இந்த ஓய்வு நேரத்தை நம்மில் எத்தனை பேர்தான் சிறப் பாக மேம்படுத்துகின்றார்கள் என்று பார்த் தோமேயானால், நிச்சயமாக அவர்களை விரல்விட்டு எண்ணக்கூடியதாக இருக்கும் என்பதுதான் உண்மை. இன்றைய காலப்பகு தியில் ஓய்வுநேரத்தில் கைத்தொலைபேசியில் விடியோ கேம் முதலானவற்றை விளையா டிக்கொண்டிருப்பதிலேயே நம்மில் பெரும் பாலானவர்களுக்குப் பொழுதுபோகின்றது.

உண்மையிலேயே பொழுதுபோக்கு என் பது ஓய்வுநேரத்தில் கிடைக்கின்ற நேரத்தை நன்றாகவும், சிறந்த வகையிலும் பயன்ப டுத்தலே ஆகும். உதாரணமாக, ஒருவர் பொழுதுபோக்கில் ஈடுபடுகின்றார் என்றாள் அதன்மூலம் அவரது ஏதோ ஓர் திறமை விருத் திசெய்யப்பட்டிருத்தல்வேண்டும். தவிர, பய னற்ற செயற்பாடுகளில் ஈடுபடுவது தவிர்க் கப்படவேண்டும். சிலர் ஓய்வுநேரங்களில் மற்றவர்களுடன் பேசிச் சிரித்துக்கொண்டே இருப்பார்கள். இவர்கள் ஓய்வுநேரத்தைப் பயனுள்ள முறையில் கழிக்கின்றோம் என்று மற்றவர்களுக்குச் சொல்லிக்கொண்டிருந் தாலும் உண்மையில் அவர்கள் நேரத்தை வீணாக்கிக்கொண்டிருக்கின்றார்கள் என்பதை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். ஓய்வுநேரத் தில் கதைத்துக்கொண்டிருப்பது தவறல்ல. ஆனால், பயனற்ற விடயங்களை பேசிச் சிரித்துக்கொண்டிருப்பதுதான் தவறானதாகக் கருதப்படுகின்றது.

சரி! இவ்வாறான பொழுதுபோக்கு விட யத்தைப் பற்றி நாம் ஏன் சிந்திக்கவேண்டும், அந்த அளவுக்குப் பொழுதுபோக்கிலுள்ள முக்கியத்துவம்தான் என்ன என்பதைப் பற்றி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலாஜினி - பளை

வாழ்வியல்

# வாழ்க்கை பற்றி!

அத்தியாயம் 4



சிறிது அலசிப் பார்க்கலாம் என நினைக்கின்றேன். இந்தப் பொழுதுபோக்கானது எமக்குக் கிடைக்கின்ற ஓய்வுநேரத்தில் மேற்கொள்ளப் படுவதே. மற்றைய நேரங்களில் எல்லாம் எமக்குரிய ஏதோ ஒரு வேலை அல்லது செயற்பாடுகளைத் தொடர்ச்சியாகச் செய்த படி இருக்கின்ற நாம் இந்த நேரத்தில்தான் சிறிது ஆசுவாசப்படுத்தப்படுகின்றோம். மற்றைய நேரங்களில் எமது மனதும், மூளையும் வேலை செய்தபடி இருக்கும். எனவே, எமக்குக் கிடைக்கின்ற ஓய்வுநேரங்களில் எம் மனதையும், மூளையையும் நல்லபடி பார்த்துக்கொள்வது மிக அவசியமாகும்.

ஓய்வுநேரத்தில் மனதுக்கும், மூளைக்கும் நல் அமைதியையும், இனிமையையும் பெற்றுக்கொடுத்தல் வேண்டும். எனவே, ஓய்வுநேரங்களில் கடினமான மற்றும் துன்பம் தரக்கூடிய விடயங்களை நினைத்துப் பார்ப்பதைத் தவிர்த்து நல் விடயங்களைச் சிந்திக்கவேண்டும். மனதினதும், மூளையினதும் செயற்பாட்டை ஊக்குவிக்கக்கூடிய செயற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும்.

மூளையும், மனதும் ஒன்று என்று சொன்னாலும்கூட - அதாவது, மூளையில்தான் மனது உண்டு என்று குறிப்பிட்டாலும்கூட அன்றாட செயற்பாடுகள் மற்றும் கருத்துகளின்போது மூளையும், மனதும் வெவ்வேறானதாகவே நோக்கப்படுகின்றது. எனவே, ஓய்வுநேரத்தை அனுபவிப்பதன் மூலம் மூளைக்கும் மனதுக்கும் நல்ல உத்வேகமும், உற்சாகமும் வழங்கப்படுகின்றது என்பது இதன் மூலம் புலனாகின்றது.

இன்று பொழுதுபோக்குச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும் அது சரியான முறையில் கொள்ளப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். பொழுதுபோக்கு என்ற கருத்தில் சமூக கலாசாரங்களை பின்தள்ளிக்கொண்டு செல்லக்கூடிய கேளிக்கைகளும், கோலாகலங்களும் நடைபெற்று வருகின்றன. அதிலும் இன்றைய இளைஞர்களின் பொழுதுபோக்கு அம்சத்தில் முக்கியமாக உள்ளடங்கியிருப்பது என்னவென்றால், மதுப்பழக்கம் மற்றும் வேறு போதைப் பாவனைகள்தான். இப்படியாக எங்களுடைய செயற்பாடுகளின் ஊடாக பொழுதுபோக்கு என்ற கருத்தை நாம் தவறான ஒரு நிலைப்பாட்டுக்கு உட்படுத்திவருகின்றோம்.

எனவே, இவ்வாறான செயற்பாடுகளைத் தவிர்த்து சிறப்பான செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலமே நம் வாழ்வின் ஓர் அங்கமாக விளங்குகின்ற பொழுதுபோக்குச் செயற்பாடுகளின் ஊடாக எம் திறமைகளை வளர்த்து எம்மை எதிர்கால வாழ்வுக்கு ஏற்ப செப்பனிட்டுக்கொள்ளலாம். 'வாருங்கள் பேசலாம் வாழ்க்கைப் பற்றி' எனும் தொடரின் ஊடாக நான் உங்களுடன் பொழுதுபோக்கு அம்சங்களைப் பற்றி பேசுவதன் முக்கிய காரணமே வாழ்வில் முக்கிய அம்சமாக அது காணப்படுவதனால்தான்.

எனவே, ஓய்வுநேரங்களைப் பயனாக்கிக் கொள்வதற்காக எவ்வாறான பொழுதுபோக்குச் செயற்பாடுகளில் ஈடுபடலாம் என நோக்குவோம்.

1) புத்தகங்கள் படிக்கலாம்.
2) பத்திரிகை வாசிக்கலாம்.
3) தோட்டம் உருவாக்குதல்.
4) அலங்கார வேலைகளில் ஈடுபடல்.'
5) பாடல் கேட்டல்.
6) சுற்றுலா செல்லுதல்.

இவ்வாறாக பொதுவான சில பொழுதுபோக்குச் செயற்பாடுகளை மேற்கொள்வது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



த்திரை புது வருட வாழ்த்துக்கள்

சிறந்தது. சிலர் ஓய்வுநேரங்களில் தங்களுக்குத் தெரிந்த வேறு வேறான உணவுப் பண்டங்களை சமைத்துப் பழகுவார்கள். அவ்வாறு தாம் சமைத்தவற்றை மற்றவர்களுக்குப் பரிமாறி மகிழ்ந்தும்கொள்வார்கள். இது பெண்களுக்கு மட்டும்தான் பொருத்தமானது ஆண்களுக்குப் பொருத்தமற்றது என எவரும் எண்ணிவிடாதீர்கள். ஏனெனில், இன்றைய காலப்பகுதியில் பெரிய பெரிய விடுதிகள், சுற்றுலாத்தலங்கள், தங்குமிடங்கள் என எல்லா இடங்களிலும் சமையல் பணிசெய்வது பெரும்பாலும் ஆண்கள்தான் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

இன்னும் சிலர் ஓய்வுநேரங்களில்தான் தூரத்திலுள்ள தம் உறவினர் மற்றும் நண்பர்களின் வீடுகளுக்குச் சென்று வருவார்கள். இது மிகவும் சிறந்ததொரு பொழுதுபோக்கு. அதுவும் இன்றைய காலப்பகுதியில் தேவையான ஒன்றும்கூட. நாகரிக கட்டமைப்பில் நலிவுண்டு போயிருக்கின்ற உறவுகளை மீளக் கட்டியெழுப்பவேண்டியது காலத்தின் கட்டாயமும் கூட.

எனவே, ஓய்வுநேரங்களில் கணினி, தொலைபேசி போன்ற இயந்திர சாதனங்களை அணைத்தபடி அதில் மூழ்கியிருக்காது கொஞ்சமாவது வெளியில் வந்து இயற்கைச் சூழலுடன் கலந்துகொள்ளுங்கள். அழகழகான பறவைகளையும், மலர்களையும் இரசியுங்கள்.

அழகு வேண்டுமே என்று எத்தனையோ இரசாயனங்களை அள்ளித் தடவுகின்றார்களே. அவை எல்லாவற்றையும் விட்டுவிட்டு உங்களுக்குக் கிடைக்கும் ஓய்வுநேரத்தில் இயற்கையுடன் ஒன்றியிருங்கள். அழகு தானாகவே கிடைக்கும்.

**''இயற்கை என்னும் இளைய கன்னி**
**ஏங்குகிறாள் துணையை எண்ணி''**

**தொடரும்**

---

## அரசியின் உதவிக்கரம் :-

**உதவி (4)**

### கல்விக்கும் அறிவியலுக்கும் கரம் கொடுப்போம்




அரசியின்ஏப்ரல்மாதஉதவிச்செயற்றிட்டத்தில் உதவிபெறுபவர் கிளிநொச்சி செந்திரேசா மகளிர் கல்லூரி மாணவியான **க.டிலக்ஷிகா.** கடந்த உயர்தரப்பரீட்சையில் கிளிநொச்சி மாவட்டத்தில் வணிகப்பிரிவில் முதலிடம் பெற்றமையை பாராட்டும் முகமாகவும் அவரது கல்வி வளர்ச்சிக்கு துணைபுரியும் வகையிலும் இவ் உதவித்தொகையினை பிரான்சில் வசிக்கும் சாவகச்சேரி மட்டுவிலைச் சேர்ந்த **வீரசிங்கம் விஜய்** என்பவரும் கொழும்பைச்சேர்ந்த Eutech cybermet ics lanka (pvt) Ltd இல் பணியாற்றும் **செல்வி இலக்கியா தவராஜா** என்பவரும் வழங்கவுள்ளனர். தாயக உறவுகள் மீது தாம் கொண்டுள்ள தீராத நேசத்தை இவ்வாறான உதவி வழங்கல் மூலம் வெளிப்படுத்தும் எமது புலம்பெயர் உறவுகளுக்கும் எம்தேச உறவுகளுக்கும் எமது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு : E-mail : oliarazi33@gmail.com, 0114320695 - 0714 273035

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் கதை

# காதல் முதல் கல்லறை வரை.

பாகம் 2

கயல் எங்கு போயிருப்பாள்!!! நீண்ட நேர குழப்பத்தின் பின் ஒரு முடிவெடுத்தான். அகிலா சொன்னது உண்மையா, இல்லையா என பார்க்க பாடசாலைகுள்ளே செல்ல எண்ணினான். யாரும் பார்க்காத நேரம் சுவர்களில் ஏறி உள் நுழைந்தான். பள்ளியில் ஆள் நடமாட்டம் மிக குறைவாகவே இருந்தது. மறைந்து மறைந்து தேடலானான், இறுதியாக ''கணித செயற்பாட்டு அறை'' என பெயர் பொறிக்கப்பட்ட அறையை அடைந்தான். யன்னல் வழியே மெல்லிய அழுகுரல், காதை கூர்மையாக்கிக் கொண்டான்.

''இங்கபாரு நானும் என் விருப்பத்த மறைமுகமா நிறைய வாட்டி சொல்லிட்டன், நீ கண்டுக்கவே இல்ல, இப்போ எனக்கு வன்னிக்கு ரான்ஸ்வர் உம் வந்திட்டுது, உன்ன விடவே மனமில்ல செல்லம். இது நம்மள தவிர யாருக்கும் தெரியபோறது இல்லை, வாட்ச்மேன் உம் நம்ம ஆள்தான், நீயா வந்தா ரண்டு பேருக்கும் சுகம் வா வா ''

அழுகுரல் அதிகமாகியது.

சேர் ப்ளீஸ் சேர் ''அம்மா தேடுவாங்க என்ன விடுங்க ...''

இதற்கு மேலும் பொறுமை அற்றவனாய் யன்னல் வாழியே பார்த்தான், அங்கே வேலி ஒன்று பயிரை மேய முயன்று கொண்டிருந்தது. ''ஐயோ அவள் என் கயல்'' இவனது நெஞ்சு பதைத்தது. தவளையை கண்ட பாம்பு போல சீறிக்கொண்டு உள் நுளைந்தான். அவனை கண்டதும் கயல் கண்ணில் கண்ணீர் மேலும் பெருகியது.

''ச்சீ தூ மனுசனாடா நீ'' என்று பாய்ந்து வந்தவனை பார்த்து அதிர்ந்த அந்த ஆசிரியர் அவன் கை ஓங்குவதற்குள் அங்கிருந்து ஓடிச் சென்றான்.

பயத்தால் நடுங்கி நின்ற கயலை நோக்கி ''நீ பயப்படாத கயல், அவன என்ன செய்யிறன் எண்டுபார்'' என்று கத்தினான். இடைமறித்த கயல், ''வேண்டாம் இந்த விசயம் வெளில தெரிஞ்சா என் மானம் போறது மட்டுமில்ல, என் படிப்பும் போயிடும், விடுங்க ப்ளீஸ் நல்லகாலம் நீங்க வந்திங்க, ரொம்ப தாங்ஸ்.'' என விம்மி விம்மி கூறினாள்.

''என்ன கயல் நீ!'' இப்படியான காரணத்தால் நீங்க எல்லாம் அடங்கி போறதாலதான் இவங்க ஆடுறாங்க என்றவனை நிமிர்ந்து பார்த்த கயல்'' பெண்ணுங்க வாழ்க்கையில் இவன மாதிரியான சிலர் விளையாடுறாங்க, அப்படி இல்லனா சிலர் காதல் என்ற பேர் ல பெண்ணுங்களை ஒரு வட்டத்துக்க அடக்கிடுறாங்க, இதாலதான் பல பெண்களால சாதிக்க முடியல'' என்றாள். அவளது இந்த பதிலில் பல அர்த்தம் உள்ளது புரிந்தது.

''சரி சரி முதல்ல வா, இங்கிருந்து கிளம்புவம்'' என்றவன், அவள் புத்தக பையை குனிந்து எடுக்கவும் பள்ளி அதிபர் உள் நுளையவும் சரியாக இருந்தது.

''கயல் எத்தன நாளா நடக்குது இந்த கேவலம், இதுக்கு உனக்கு இந்த ஸ்கூல் தான் கிடைச்சுதா, முதல்ல இங்க இருந்து வெளிய போ, நாளைக்கு நீ வர தேவையில்லை உன் அப்பா அம்மாவ மட்டும் அனுப்பி வை'' பெரிந்து தள்ளினார் அதிபர்.

''சேர் சேர் கயல்ல ஒரு பிழையும் இல்ல அந்த..'' என்றவனை இடைமறித்து

''நீ யார்டா பொறுக்கி முதல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சித்திரை புது வருட வாழ்த்துக்கள்

## தொடர் கதை

வெளியில போ இல்ல போலிஸ கூப்பிடுவன்.''

வேண்டாங்க நீங்க போங்க நாளைக்கு என் அப்பா வந்து கதைப்பார் என்றவள் சற்றும் நில்லாமல் அழுது கொண்டே நகர்ந்தாள், அவனும் நடந் தான். இந்த நிலையில் அவளிடம் எதுவும் கேட்க மனம் இடம்தரவில்லை. நன்றி கலந்த பார்வையை உதிர்த்தவள் அங்கிருந்து வீட்டை நோக்கி நடந் தாள். மனதுள் ஆயிரம் கேள்விகள், இந்த விடயத்தை எப்படி அம்மாட்ட சொல்றது சொன்னா என்ன நினைப்பா அண்ணா கோபப்படுவானே கோபத்தில அந்தாள்ட்ட சண்டைக்கு போவானே கடவுளே என்ன எல்லாம் நடக்கபோகுதோ மன குழப்பத்துடனே வீட்டை அடைந்தாள். அங்கு அவளிற்கு மிகப்பெரிய அதிர்ச்சி காத்தி ருப்பதை அவள் மனம் உணர்ந்திருக்கவில்லை. வீடு பூட்டி இருந்தது அம்மா கடைக்கு இந்த நேரத்தில போமாட்டாவே சரி பாப்பம் என்று படிக்கட்டில் அமரும்போது பக்கத்து வீட்டு அக்கா பதற்றத்துடன் வந்தாள்.



வந்திட்டியா கயல், நீ வந்தா துணைக்கு இருக்க சொல்லிட்டு உன் அப்பா போனார்மா பரபரப்பு குறையாமல் சொலலா என்ன அக்கா சொல்றிங்க இந்த நேரம் அப்பா வேலைய விட்டிட்டு ஏன் வந்தார்? அம்மா எங்க குழப்பத்துடன் கேட்டாள்.

அது வந்து கயல் உன் அண்ணாக்கு...

அக்கா இழுக்காம சொல்லுங்க அண்ணாக்கு என்னாச்சு????

அண்ணாக்கு என்னாச்சு அக்கா சொல்லுங்க, பதற்றமும் பரித விப்பும் ஆட்கொண்டது அவளை.

உன் அண்ணாக்கு கல்யாண ஆசை வந்திடிச்சு, கடிதம் எழுதி வைச்சிட்டு யாரோ ஒரு பொண்ணு கூட ஓடிட்டானாம். அதான் அப் பாவும் அம்மாவும் தேடிப் போயிருக்காங்க..

ச்சா ச்சா அண்ணா அப்படிலாம் பண்ணாதே எதா இருந்தாலும் கயல் கயல்னு என்கிட்டதானே சொல்லுவான்! அம்மா எப்படி தாங்க போறாவோ கடவுளே இது என்ன சோதனை குழப்பமும் வேத னையும் நேரம் போக போக கூடியது கயலிற்கு. அப்போது மேசை மீதிருந்த கடிதம் கண்ணில் பட்டது...


அன்புள்ள அம்மாவிற்கு!

இதுவரை காலமும் என்னுடைய உலகம் நீங்க தான் அது போல என் உலகத்துக்குள்ள புதுசா வந்த தேவதைதான் அகிலா. இன்னைக்கு school முடிஞ்சதும் அவளுக்கும் வெளிநாட்டு மாப் பிள்ளைகும் நிச்சயம் பண்ண போறாங்க. வாற மாசம் அவளுக்கு 18 வயசு தொடங்கினதும் கல்யாணமாம் என்னால அவ இல்லாம வாழ முடியாது. நீங்களும் அப்பாவும் என்ன மன்னிக்கனும். கயல் நீயும் என்ன மன்னிசிருடி செல்லம் எனக்கு வேற வழி தெரியல. யாரும் எங்களை தேட வேண்டாம்.''

கடிதம் நனைந்தது கயலின் கண்ணீர் துளிகளால். அடிப் பாவி அகிலா நீயா! இன்னைக்கு கூட நீ ஒரு வார்த்தை கூட சொல்லலயே பாவி உங்களுக்கு உள்ள நட்புத்தான் இருக்கும் எண்டு கண்டுக்காம விட்டது என் தப்புத்தான் அதுதான் இன்னைக்கு பதற்றமா இருந்ததோட சீக்கிரமே என்ன தனியாக விட்டு ஓடினியா!! குளமான கண்களுடன் தாய்க் காக காத்திருந்தாள். இராப் பொழுதே இருவரும் வீடு வந்தனர். அப்பாவின் முகத்தில் அதிர்வே இல்லை அம் மாவோ பித்துப் பிடித்தவள் போல புலம்பிக் கெண்டே இருந்தாள். எங்கு தேடியும் இருவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புது வருடத்துக்காவது அப்பா வருவாரா?

சிக்கவே இல்லை. உறவினர்களின் ஆறுதல் நகைப்பு என்பவற்றுடன் நாட்கள் ஓடின. கயல் ஒரு வாரமாக பள்ளிக்கும் செல்லவில்லை பாவம் இந்த நிலையில் தன் நிலைமையை எப்படி வீட்டில் சொல்வாள். இப்படி இருக்கையில் கயலின் வகுப்பு நண்பியிடமிருந்து ஓர் அழைப்பு

''கயல் அதிபர் உன்ன நாளைக்கு school க்கு வரச் சொன்னார். நாளைக்கு வாடி'' அழைப்பு துண்டிக்கப்பட்டது.

அதிபர் அப்பாவதானே வர சொன்னார் இப்போ என்ன கூப்பிடுறாரே! சரி நாளைக்கு தைரியமா நடந்த உண்மையை சொல்லணும் என முடிவு செய்தாள். பொழுது புலர்ந்தது. கயல் பள்ளிக்கு கிளம்பினாள் வழியில் அவன்.


அப்பாடி கயல் இன்னைக்காச்சும் வெளிய வந்தியே. நடந்தத கேள்விப்பட்டன்.. என்றவனை இடை மறித்து ''ப்ளிஸ் ஏற்கனவே நிறையப் பேர் ஆறுதல் சொல்லிட்டாங்க விடுங்கபா.''

''சரிமா மன்னிச்சிரு இந்த நிலையில் நான் உன்ன தொல்ல பண்ணல, நீ போ அதே நேரம் அன்னைக்கு நான் கேட்ட விசயத்தையும் மறந்திடாதமா நல்லா யோசிச்சு சொல்லு'' என்றவனிற்கு புன்னகையை பதிலாய் தந்து கடந்து சென்றாள். அவளின் புன்னகையின் அர்த்தம் விளங்கவில்லை ஆயினும் அதை ரசித்த படி நின்றான்.

அதுவரை தைரியமாக வந்த கயலிற்கு பள்ளியை அடைந்ததும் பதற்றம் தொற்றிக் கொண்டது. அதிபர் நடந்தவைகளை தவறாக புரிந்திருந்தார். எல்லோர் முன்னும் அவமானப்படுத்தினால் என்ன செய்வது. பதற்றத்தை ஒழித்து போலி தைரியத்துடன் அதிபர் அறையை அடைந்தாள்.

**நினைவுகள் நீளும்.**

தருவது சுகன்ராஜ்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரை புது வருட
வாழ்த்துக்கள்

## மருத்துவம்

**கேள்வி எனது வயது 62 ஆகும். எனக்கு கடந்த 16 வருடங்களாக நீரிழிவு நோய் உள்ளது. எனது நீரிழிவு நோய்க்கு மெற்போமின், கிளிக்கிளசயிட் மற்றும் சிற்றகிளிப்ரின் ஆகிய மருந்துகளைப் பயன்படுத்தி வருகின்றேன். எனது குளுக்கோஸின் அளவு குருதியில் அதிகமாக இருப்பதாக குடும்ப வைத்தியர் கூறியிருந்தார். இதனைக் கட்டுப்படுத்துவதற்கு இன்சுலினை ஆரம்பிப்பதே சிறந்தது என அவர் கூறுகின்றார். இது பற்றி விளக்கிக் கூறவும்?**





**பதில் :** நீரிழிவு (சலரோக) நோயைக் கட்டுப்பாட்டினுள் வைத்திருப்பதற்கு சிறந்த உணவுக் கட்டுப்பாடும் மருந்துகளைக் கிரமமான முறையில் உள்ளெடுத்தலும் அவசியமாகும். உங் களைப் போன்ற நீண்டகாலமாக நீரிழிவுநோயுள்ளவர்களுக்கு காலப் போக்கில் குளிசை மருந்துகள் செயற்படாத நிலை (Oral Hypogly caemic drugs failure) ஏற்பட நேரிடுகின்றது. எனவே அவ்வாறான சந்தர்ப்பத்தில் இன்சுலின் மருந்தையே பயன்படுத்த வேண்டியேற்படுகின்றது. எனவே உங்களின் குடும்ப வைத்தியரின் ஆலோசனைப் படி இன்சு லின் மருந்தை ஆரம்பிப்பதே சிறந்ததாகும். இவ் வாறு இன்சுலின் மருந்தை ஆரம்பிக்கும்போது நாளொன்றுக்கு ஒருமுறை அல்லது இரு முறை பயன் படுத்துகின்ற இன்சுலினனை உங்கள் வைத்தியரின் ஆலோசனைப்படி பயன்படுத்த முடியும். இது தொடர்பான மேலதிக விளக்கங்களையும் அறிவுரைகளையும் உங்கள் வைத்தியரிடமிருந்து பெற்றுக் கொள்ளமுடியும்.

**எனக்கு 21 வயது ஆகின்றது. நான் கர்ப்பமாக இருக்கின்றேன். எனக்கு மலச்சிக்கல் ஏற்படுகின்றது. அதற்கான தீர்வு என்ன??**

கர்ப்ப காலத்தில் ஏற்படும் பொதுவாக பிரச்சினைகளில் ஒன்று மலச்சிக்கல் இதற்கு ஓமோன் களில் ஏற்படும் மாற்றங்களினால் குடற்றொழிற்பாட்டில் ஏற்படும் மாற்றம், கர்ப்பப்பையின் அளவு, திணிவு அதிகரித்தல், இக்காலத்தில் பாவிக்கப்படும் இரும்புச்சத்துக் குளிசைகள், உணவுப் பழக்க வழக்கங்களில் ஏற்படும் மாற்றங்கள் (நார்ச்சத்துக் குறைவான உணவுகளை உட்கொள்ளல், நீர் அருந்துதல் போதாமை) ஒழுங்கற்ற முறையில் மலங்கழிக்கச் செல்லுதல், போதியளவு உடற்பயிற்சியின்மை என்பன காரணமாக அமைகின்றன. சில அரிதான சந்தர்ப் பங்களிலேயே மருத்துவக் காரணங்களினால் இது ஏற்படலாம்


எனவே நீங்கள் இதை எண்ணிக் கவலைப்படத் தேவையில்லை. தகுந்த முறையில் உங் கள் வாழ்க்கை முறைகளைமாற்றி அமைப்பதன் மூலம் இதன் பாதிப்பைக் குறைத்துக் கொள்ளலாம்.



இதற்காக தேவையான அளவில் நீரை நாளந்தம் எடுத்துக்கொள்ளல், நார்ச்சத்து அதிகம் உள்ள உணவுப் பொருட்களை (பழங்கள், மரக்க றிகள்) அதிக அளவில் உட்கொள்ளல், ஒழுங்கான முறையில் உடற் பயிற்சி, நடைப்பயிற்சி மேற்கொள்ளல், தினமும் குறித்த ஒரே நேரத்தில் மலங்கழிக்கப் பழக்கிக் கொள்ளல் போன்றவற்றை மேற்கொள்ளவேண்டும்.

இதற்காக மருந்துகளைப் பாவிப்பது தவிர்க்கப்பட வேண்டும். ஆனா லும் இவற்றிற்கு உங்கள் மலச்சிக்கல் குறையவில்லை எனின் தகுந்த முறையில் வைத்தியரை அணுகி சிகிச்சை பெறு வது சிறந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


புது வருடத்துக்காவது
அப்பா வருவாரா?

# தையற்கலை

சென்ற மாத
தொடர்ச்சி

அடிப்படை தையல்களின் தொடர்ச்சி

## தலையணை, தலையணை உறை

திருமதி சுமித்ரமலர் ராகவன்
(0212261145)

நாம் இதமாக உறங்குவதற்கும், நாற்காலி போன்ற இருக்கைகளை மேலும் மெருகூட்டுவதற்கும், சொகுசுத் தன்மையைப் பெற்றுக் கொள்வதற்கும் தலையணையைப் பயன்படுத்துகிறோம்.

அந்தத் தலையணையையும் அதற்கான உறையையும் சுலபமாகவும் அழகாகவும் தயாரிப்பது பற்றி இங்கே நோக்குவோம்


தலையணை

சாதாரண அளவு 17" x 22" அளவுடைய இரண்டு செவ்வகத் துணிகளை எடுத்து துணியின் வெளிபுறம் உள்ளிருகக்கூடியதாக வைத்து மூன்று பக்கங்களை பொருத்திக் கொள்ள வேண்டும்.

பின் தைக்கப்பட்ட பையை திருப்பி உள்ளுடனை இட்டு வாய்ப்பக்கத்தை மூடி துன்னாசோம் தைத்துக் கொள்ள வேண்டும்.

குறிப்பு :

உள்ளுடனாக இலவம் பஞ்சு, நைலோன் பஞ்சு, வெட்டுத்துணி போன்றவற்றைப் பயன்படுத்தலாம் எனினும் இலவம் பஞ்சே சிறந்தது.



தலையணை உறை

முன்பக்கம் அகலம் 17, நீளம் 22

பின்பக்கம் அகலம் 17, நீளம் 27


பிறில் அகலம் 2.5 நீளம் 156 (முன்பக்கத் துணியின் சுற்றளவின் 2 மடங்கு)

தைக்கும் முறை

முன்பக்கத் துணியில் விரும்பிய அலங்காரம் செய்துகொள்ளலாம்.


1. எம்றோயிங் (நூல்களைக் கொண்டு அலங்கார உருக்களைத் தைத்துக் கொள்ளல்)

எடுத்துக்காட்டு :



2. அப்ளிக் வேக் (கழிவுத் துணிகளில் அழகான உருக்களை வெட்டி உறையில் வைத்துத் தைத்துக் கொள்ளல்)

எடுத்துக்காட்டு :







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆளுமையாளர்களையும் சமூக ஆர்வலர்களையும் அடையாளம் காட்டி பிரதேச செயற்திட்டங்களையும் அவற்றின் தேவைகளையும் நாடறியச்செய்யும் ஒளிஅரசியின் சமுதாயப்பயணத்தில் இம்மாதம் எம்மோடு இணைபவர் ஹற்றன் குடா ஓயாவைச் சேர்ந்தவரும் சர்வோதயத்தின் பொறுப்பாளருமான திரு.அழகர் செல்வராஜா. அவர் வழங்கிய செவ்வி எம் வாசகர்களுக்காக---------

# வளமான எதிர்காலத்திற்கு உரமாகும் கல்வி

**உங்களைப் பற்றிய அறிமுகம்?**

எனது பெயர் செல்வராஜா. ஹட்டன் நோட்டன் பகுதியில் விமலசுரேந்திர எனும் அழகான பிரதேசத்தில் வசிக்கிறேன். கண்டிப் பிரதேசத்தில் அர்த்தன முஸ்லிம் தமிழ் வித்தியாலயத்தில் தரம்5 வரையும் கற்று 1983ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரம் காரணமாக அங்கிருந்து இடம்பெயர்ந்து நோட்டன் பிரதேசம் வந்து நோட்டன் கணபதி தமிழ் மகாவித்தியாலயத்தில் க.பொ. த சாதாரண தரம் வரை கல்வியைத் தொடர்ந்தேன். உயர்தரம் தொடர முடியாதிருந்த நேரத்தில், எமது பிரதேசத்தில் சர்வோதய வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. அதில் இளைஞர் குழு அங்கத்தினராக இணைத்துக்கொள்ளப்பட்ட நான், இவ்வமைப்புடன் சேர்ந்து பல பொதுச்சேவைகளை தீவிர முயற்சியுடன் செய்ததன் பலனாக இப்பகுதியில் பிரதேச இணைப்பாளராக தேர்ந்தெடுக்கப்பட்டேன். 5 வருடங்களாக சேவையாற்றிக் கொண்டிருக்கும் பொழுது, நிதிப்பற்றாக்குறை காரணமாக, நானே விரும்பி, பதவியிலிருந்து விலகி மந்தபோஷணை சம்பந்தமான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி யிடநவெல ஊயயெனய என்ற நிறுவனத்தில் இணைந்து செயலாற்றினேன். நான்கு மகன்கள், ஒரு மகள். வங்கித் துறையில் ஒருவரும், தனியார்துறையில் ஒருவருமாக தொழில்புரிகின்றார்கள். மகள் என் செயலிழந்து காணப்பட்டன.

**சர்வோதய அமைப்பின் தலைவராக இருக்கும் நீங்கள் கட்டமைப்பு தொடர்பான விரிவான விளக்கம் ஒன்றைத்தருவீர்களா?**

இலங்கையில் 1958 ஆம் ஆண்டு மதிப்பிற்குரிய கலாநிதி A.T ஆரியரத்ன அவர்களால் சுபீட்சமாக ஆரம்பிக்கப்பட்டது. அத்தோடு 1972ஆம் ஆண்டு எமது பிரதேசத்திலும் நடைமுறைப்படுத்தப்பட்டது. வடக்குகிழக்கு உட்பட இலங்கையின் பதினைந்தாயிரம் கிராமங்களில் இன,மத,மொழி பேதமின்றி சகல துறைகளைச் சார்ந்த வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துகிறோம். தற்பொழுது மலையகத்தில் கல்விக்கும்,போஷாக்கு வேலைத்திட்டத்திற்கும் முக்கிய ஏற்படுகள் செய்யப்பட்டுள்ளன. மலையக மாணவர்கள் மத்தியில் கணினி, ஆங்கிலம், சிங்களஅறிவு மந்தகதியில் இருப்பதால் அதனை முன்னேற்றுவதற்காக தெரிவுசெய்யப்பட்ட தோட்டப்பகுதிகளில் எமது வேலைத்திட்டங்களை நடாத்திவருகிறது.

**இலங்கையில் பல வகையான மக்கள் இருக்கின்றார்கள். இவர்களுக்கான விழிப்புணர்வுச் செயற்திட்டங்களில் சர்வோதயம் எந்தவகையான உதவிகளை மக்களுக்கு வழங்குகிறது?**

மக்கள் மத்தியில் புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்காக பல வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறோம், இதில் முதியோர் கழகங்களை தவும் முடிந்தது.

**இனிவருகின்ற காலப்பகுதியில் சர்வோதயம் மூலமாக என்னென்ன வகையான செயற்திட்டங்களை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளீர்கள்?**

மதங்களுக்கிடையில் தற்போது ஏற்பட்டுள்ள இணக்கப்பாட்டின்மைகளை அகற்றி சுமூகமான மனநிலையை ஏற்படுத்துவது, மதத்தலைவர்கள் மத்தியில் புரிந்துணர்வு வேலைத்திட்டங்களை ஏற்படுத்துவது. மக்கள் அரசசேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கான வழிவகைகளை ஏற்படுத்துவது, ஒளிஅரசி மூலமாக வெளியிடப்படும் பரீட்சைத் தொடர் மற்றும் புலமைச்சுடர்,குட்டிச்சுடர் சஞ்சிகைகளை மாணவர்கள் மத்தியில் கொண்டுசெல்லும் ஓர் புதியதிட்டத்தையும் எடுத்துள்ளோம்.

**சமூகசேவைப்பணியில் இருப்பதால் விமர்சனங்கள் கட்டாயம் இருக்கும். இவ்வகையில் உங்களுக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவங்களை கூற முடியுமா?**

சமூகசேவையே நோக்கமாகக் கொண்டு செயற்படுவதால் அதனால் வரும் விமர்சனங்களைப் பொருட்படுத்துவதில்லை. இது குறித்து காந்திமகான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னுடன் இணைந்து IT SHAKTH வேலைத்திட்டத்தில் செயற்படுகின்றார்,

**சர்வோதயஅமைப்பிற்குள் எவ்வாறு வந்தீர்கள்?**

சர்வோதய அமைப்பில், ஏற்கனவே எனக்கு அனுபவமும் பயிற்சியும் இருந்ததனால் நான் கொழும்பில் தொழில் புரிந்த சமயம் மீண்டும் அந்த அமைப்பு என்னை அழைத்தது.. சர்வோதய கல்வி அபிவிருத்திநிலையத்தின் பொறுப்பாளராகவும், அம்பகமுவ சர்வோதய தேசிய தேசோதய அமைப்பின் தலைவராகவும் செயலாற்ற கேட்டுக் கொண்டதற்கிணங்க தற்சமயம் இச்சேவையில் ஈடுபட்டுள்ளேன்.

**சர்வோதய அமைப்பை பொறுப்பேற்கும் போது அப்பகுதிகளில் என்னென்ன குறைபாடுகளைக் கண்டீர்கள்?**

சர்வோதய காரியாலய கட்டிடம் சீரழிந்த நிலையில் காணப்பட்டதோடு, அங்கிருந்த விலை மதிப்புள்ள மின்சாரஉபகரணங்கள், கணினிகள், தையல் இயந்திரங்கள் இவையனைத்தும் அமைத்து அதற்குரிய சலுகைகளை வழங்குதல். பாலர் பாடசாலை ஆரம்பித்து, சகல இன மாணவர்களும் ஆரம்பக்கல்விபெற வசதிகள் செய்துகொடுத்தல் மற்றும் எமது சமூகங்களுக்கிடையில் எமது கலாச்சாரங்களை பிரதிபலிக்கும் முகமாகவும், இனங்களுக்கிடையிலான ஒற்றுமையை ஏற்படுத்துவதற்காகவும் சமயகலாச்சார விழாக்களை நடாத்தி வருகிறோம். இளைஞர் கழகங்களை அமைத்து தொழிநுட்பம் மற்றும் போஷாக்கு சம்பந்தமான வேலைத்திட்டங்களை அமைத்துளோம். தேசிய உணவு முறையை ஊக்குவிப்பதற்காக தேர்ச்சி பெற்ற வைத்திய அதிகாரிகளைக்கொண்டு வைத்திய முகாம்களை நடாத்தி வருவதுடன் பெண்களின் சுயதொழில்களை ஊக்குவிப்பதற்காக தையற்கலை மற்றும் சிற்றுண்டித்தயாரிப்பு போன்ற பயிற்சிகளை வழங்கி வருகின்றோம்.

**நீங்கள் பொறுப்பேற்ற காலத்தில் சர்வோதய அமைப்பின் செயற்பாடுகளுக்கு மக்கள் மத்தியில் ஆதரவு கிடைத்ததா?**

மக்கள் மத்தியில் அமோக ஆதரவு கிடைத்தது. நிதியின்றி அனேக செயற்திட்டங்களை செயல்படுத் கூறியபொன் மொழியொன்றை கூற விரும்புகிறேன். ''கடமையைச் சரியாகச் செய்யவேண்டும் என்று துணிந்துவிட்டால் யாரையாவது பகைத்துக்கொள்ளத் தான் வேண்டும், பகையே இல்லாதவன் என்று பேரெடுத்தால் அவன் ஒரு காரியமும் செய்யாதவன்'' என்றுபொருள்.

**சர்வோதய சமூகசேவை தொடர்பான மகுடவாக்கியம் ஒன்றை ஒளிஅரசி ஊடாக சொல்ல விரும்புகிறீர்களா?**

வளமான எதிர்காலத்திற்கு உரமாகும் கல்வி.

**வேறு ஏதாவது கூறவிரும்புகின்றீர்களா?**

வடக்கு கிழக்கு பிரதேசங்களில் வெற்றிநடை போடும் ஒளி அரசியான வள், மலையகத்திலும் குன்றாத ஒளிவீச எங்களது ஒத்துழைப்பும்,நல்லாசிகளும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண் வாசனை

# பிரபஞ்சத்திற்கே சொந்தமான தீவு




இலங்கையின் வடபகுதியில் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குத் தென்மேற்கில் அமைந்துள்ள ஏழு தீவுகளுள் ஒன்றான நெடுந்தீவை ஒல்லாந்தர் டெல்வ்ற் (Delft) என்று பெயரிட்டு அழைத்தார்கள். இன்றும் ஆங்கிலத்தில் இத்தீவு இப்பெயராலேயே குறிப்பிடப்படுகின்றது. நெடுந்தீவு தலைத் தீவு, பசுத்தீவு, பால்தீவு, அபிசேகத் தீவு, தயிர் தீவு முதலான பெயர்களால் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் அழைக்கப்பட்டு வந்துள்ளது. யாழ் குடாநாட்டில் இருந்து நெடுந்தொலைவில் இருப்பதனால் இத்தீவு நெடுந்தீவு என்று பெயர் பெற்றது என்பர்ங்

1813ம் ஆண்டு நெடுந்தீவுக் கடலில் இருந்து புறப்பட்ட ஹீர்த் டீ போலோ (hearth De Polo) எனும் ஐக்கிய அமெரிக்க இளைஞன் இத் தீவின் அழகையும் வளங்களையும் மனதில் கொண்டு இத்தீவு ஒரு தனி நாட்டுக்கு சொந்தமானதல்ல, இந்த பிரபஞ்சத்திற்கே சொந்தமானது என்கிறான்.

காட்டுக்குதிரைகள் வாழும் ஒரேயொரு இடமாக யாழ்ப்பாணத்தின் தீவுக்கூட்டங்களுள் தலையாய தீவான நெடுந்தீவு விளங்குகின்றது. தீவின் தென்பகுதியெங்கணும் இக் குதிரைகள் பரந்து வாழ்கின்றன. ஒல்லாந்து அரசாங்கத்தின் ஆளுனராக இருந்த ரிஜிக் லொஸ்வேன்கொஹென்ஸ் இந்தத் தீவில் தங்கியிருந்த போது இந்த மிருகங்களை கப்பல்கள் மூலம் இத்தீவுக்கு கொண்டுவந்து இறக்கியிருந்தார்.. அன்றிலிருந்து இத்தீவிலிருந்து இக்குதிரைகளை வெளியே கொண்டு செல்ல முடியாது என்ற ஒரு

சட்டம் நெடுந்தீவில் வழக்கில் உள்ளது. இலங்கையின் வனஜீவராசிகள் திணைக்களம் முதற்கட்ட முனைப்பாக இக்குதிரைகள் பற்றிய ஆய்வினை பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களோடு இணைந்து மேற்கொண்டிருந்தது. அதன்படி நெடுந்தீவில் மொத்தம் 503 குதிரைகள் வாழ்வதாகவும் அவற்றினைப் பாதுகாப்பதற்கான வழிவகைகள் மேற்கொள்ளப்படவிருப்பதாகவும் அறிவித்துள்ளது. ஐரோப்பிய காலனித்துவ காலத்தின் சான்றுகளை முன்வைக்கும் இயற்கை மரபுரிமை எச்சங்களாக நெடுந்தீவின் குதிரைகள் காணப்படுகின்றன. நெடுந்தீவு நிலத்தின் கடந்த காலம் மீதான வாசிப்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற்கும் ,அடையாளத்திற்கும் இக்குதிரைகள் பிரதிநிதிகளாக இருக்கின்றன..

நெடுந்தீவின் மரபுக்கதைகளை ஞாபக மூட்டும் உயிரினங்களாகவும் தங்களுடைய அடையாளமாகவும் மக்கள் இவற்றைப் பார்க்கின்றனர். இங்கே இருக்கும் மூத்தபிர ஜைகள் தங்களுடைய தீவு பற்றிய ஞாபகங்க ளில் குதிரைகள் பற்றிய ஏராளம் கதைகளைப் பகிர்கின்றனர்.

இதன்படி தீவின் தென்பகுதியில் பாரிய நீர்த்தேக்கமொன்றும் அமைக்கப்பட்டு குதி ரைகள் சரணாலயமாக அறிவித்து குதிரைகள் பாதுகாக்கப்படவுள்ளது. போத்துக்கேயர் காலம்தொட்டு ஆங்கிலேயர் காலம் வரை யான அந்நியர் ஆதிக்கத்திற்கு முன்னர் நெடுந் தீவு ஒரு சுதந்திர தனி இராசதானி நாடாகவே விளங்கியது.

வெடியரசன் நெடுந்தீவின் மேற்குப் பகுதியில் கோட்டைக்காடு என்னுமிடத்தில் கோட்டைகட்டி அமைச்சர்கள், படைவீரர்க ளுடன் ஆட்சிபுரிந்துள்ளான். வெடியரசனின் கோட்டை இன்றும் சிதைந்த நிலையில் கல் மேடாக நெடுந்தீவின் வட மேற்கு கரையில் காணப் படுகிறது. நெடுந்தீவு மக்கள் பண்டைய காலத் தில் தென்னிந்தியாவுக்குச் செல்வதற்கு பெரியதுறை என அழைக்கப்பட்ட துறைமுகத்தைப் பயன்ப டுத்தினர். இங்கிருந்து மக்கள் படகுகளில் யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, புங்குடுதீவு ஆகிய இடங்களுக்கும் பயணம் செய்தனர். இது நெடுந்தீவின் மேற்குக்கரையில் அமைந் துள்ளது.



புது வருடத்துக்காவ
அப்பா வருவாரா?

நெடுந்தீவில் பெருக்குமரம் எனப்படும் பாவோபாப் மரம் உள்ளது. இது நூற்றாண் டுகள் பழமையானது எனக் கூறப்படுகிறது. இம்மரத்தில் உள்ள துளை வழியே உள்ளே சென்றால் அங்கே குகை போன்ற அமைப்பு உள்ளது. இங்கு ஒரு குடும்பம் நிற்கக்கூடிய இடவசதி உள்ளது. கிழக்கு ஆபிரிக்காவைச் சேர்ந்த இம்மரத்தை அரேபிய வியாபாரிகள் இங்கு இங்கு கொண்டுவந்தனர்.

தொகுப்பு : நெடுந்தீவு அரவிந்

# பென்சில் ஓவியம்



எல். ஆர். ஈஸ்வரி (பிறப்பு: டிசம்பர் 7, 1939) தமிழ்நாட்டின் பிரபலமான ஒரு திரைப்படப் பின்னணிப் பாடகி. 1958 ஆம் ஆண்டில் இருந்து திரைப்படங்களில் பாடி வரும் இவர் ஆயிரக்கணக்கான பாடல்களை பல மொழிகளில் பாடியுள்ளார்.

இம்மாத
பென்சில் ஓவியம் by YOGA



yoganads@gmail.com
0754419019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற மாத தொடர்ச்சி



என்னையும் கவலை சூழ்ந்துகொண்டது. ''பார்ப்போம் அடுத்த மாதம் சம்பளம் வரட்டும் ஏதாவது செய்வோம்'' என்றார் அப்பா. ஒருவழியாக செடிகளைப் பார்த்து முடித்துவிட்டு பாடசாலைக்கு அணியமாகிச் சென்றேன். காலை உணவை உண்ணும் போதும் அடுத்த வாரம் எங்கள் வீட்டில் விளைந்த காய்கறியில் சமையல் இருக்கும் என்ற எண்ணமே காத்திருப்புக்கான ஆர்வத்தையும், உணவின் சுவையையும் அதிகரித்தது.

மறுநாள் காலையில் எழுந்து சென்ற எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. அம்மாவும், அப்பாவும் கவலை தோய்ந்த முகங்களோடு நின்றிருந்தனர். எனக்கோ அழுகையை அடக்க முடியவில்லை. கண்ணெதிரே என் கனவுத் தோட்டம் சிதைந்துபோய்க் கிடந்தது. எத்தனை கனவுகள், எத்தனை ஆசைகள் எல்லாம் எதிரே நொறுங்கிக் கிடந்தன. பூக்கள், காய்கள், செடிகள் எல்லாம் பிய்க்கப்பட்டிருந்தன. செடி வளர்ப்புக்கான பைகள் கிழிக்கப்பட்டிருந்தன. பூசனிக் கொடி தனியாகக் கிடந்தது.அதில் இருந்த வாடிப்போன பூக்கள் என்

# கானல் நீரும் கலைந்த கனவுகளும்

னைப் பார்த்துக் கண்ணீர் விடுவதைப்போன்று இருந்தது.

குரங்குகளை விரட்டிவிட்டு அதிர்ந்து போய் நின்றிருந்தனர் அம்மாவும் அப்பாவும். என்னதான் அமைதிப்படுத்தியும் என் கண்ணீரைக் கட்டுப்படுத்தும் வழி தெரியாமல் என்னைக் கீழே அழைத்துச் சென்றனர். என் அழுகுரலால் தகவலறிந்த பக்கத்து வீட்டுப் பாட்டியும் என் சார்பாக குரங்குகளைச் சபித்தாள்.

பள்ளிக்கு விடுமுறை எடுத்து வீட்டிலிருந்தபடி அழுது தீர்த்தேன். மனத்தை மாற்றுவதற்கென்று தொலைக்காட்சியை இயக்கினால் உழவர்கள் தற்கொலை பற்றிய செய்தி ஓடிக் கொண்டிருந்தது. ச்சே அவர்களுக்கு எவ்வளவு வேதனையாக இருக்கும், சின்ன இடத்தில் சிறிய பணத்தை செலவு செய்து ஆசை ஆசையாய் வைத்த எனக்கே இப்படி இருக்கும்போது வாழ்வாதாரத்திற்காய் வாழ்க்கைக் கனவுகளோடு பயிர் செய்பவர்கள் எத்தனை இயற்கை இடர்களையும் செயற்கை இடர்களையும் கடந்து வர வேண்டியிருக்கின்றது. அவர்களுக்காகவும் ஒரு முறை அழுதுதீர்க்கத் தோன்றியது.

தோல்விகளில் கலங்காத என்னைச் செடிகள் மேற்கொண்ட பாசம் அழவைத்துவிட்டதே. எல்லாம் இந்தக் குரங்குகளால்தான்.'' குரங்குச் சேட்டை'' என்று சும்மாவா சொன்னார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரிச்சலாக இருந்தது. மீண்டும் மாடிக்குச் சென்று அழிந்து கிடந்த என் தோட்டத்தைப் பார்த்தேன்.பேச்சுக்குரல் கேட்டது, தமிழினி அக்கா அலைபேசியில் உரையாடிக் கொண்டிருந் தாள்.

''......... நான் எத்தனை எதிர்பார்ப்புடன் சே ர்ந்த வேலை, உங்களுக்காக எனக்குப் பிடித்த பலவற்றை விட்டுவிட்டேன். எல்லாவற்றையும் விடச் சொன்னால் எப்படி, உங்களை விட அதிக மான சம்பளம் என்பதற்காக இப்படியா''.

''இப்படி பேசினால் சொல்பேச்சு கேக்காத வளா''

''........................''

''எதற்காக பெற்றவர்களைக் குறை சொல் கின்றீர்கள்''

உரையாடல் தொடர்ந்தது. நான் செடிகளைப் பார்த்தவண்ணம் அமைதியாக இருந்தேன். பின் வீட்டில் வசிக்கும் அம்மா '' ஏம்மா இத்தனை செடிகள் வைக்கும்போதே சிந்தித்திருக்க வேண் டாமா, பந்தலாவது போட்டிருக்கலாமல்லவா. நாம்தான் சரியாகப் பார்த்திருக்க வேண்டும், இனிமேல் கவலைப்பட்டு என்னாகப் போகின்ற து. கவலைப்படாமல் இரு'' என்று இருந்த எரிச் சலை அதிகப்படுத்திவிட்டு நகர்ந்து சென்றாள்.

சிறிது நேரம் கழித்து இரண்டு மாடிக்கும் இடையேயான சிறிய இணைப்பு வழியாக தமி ழினி அக்கா வந்துகொண்டிருந்தாள். ''கவலைப் படாதே இலக்கியா, சில செடிகள் இப்போதும் நன்றாகத்தான் இருக்கின்றது. சரி செய்து விட லாம், நாம் எதிர்பார்ப்பது போல் எல்லாமே நடப்பதில்லை''

''எத்தனை ஆசையாக வைத்த செடிகள் எத்த னையோ கனவு கண்டேன்......அக்கா '' மீண்டும் விம்மலும் அழுகையும் எட்டிப் பார்த்தது.

''நீ எத்தனை ஆசையாக வைத்திருந்தாயென எனக்குத் தெரியும், நானும் பார்த்துக்கொண்டு தானே இருந்தேன். ஆசைப்படுகின்ற எல்லாமே நடக்காது இலக்கியா''

''நான் ஆசைப்பட்டபடிதானக்கா நடந்தது ஆனால் இந்த குரங்குகள் வந்து எல்லாவற் றையும் கெடுத்துவிட்டது''

''எல்லாம் சரியாக நடக்க வேண்டுமென்று பார்த்துப் பார்த்து திட்டமிட்டுதான் எல்லாவற் றையும் செய்வோம் பலன் தருமென நினைக் கின்ற நேரம் எங்கேயோ இருந்து வரும் குரங்குகள் சின்னாபின்னமாக்கிவிட்டும் போய்விடுகின்றது. குரங்கைக் குறை சொல்ல முடியாது என்பதற்காக வளர்த்தவன் பாதுகாப்பாக வளர்க்கவில்லை என் பதைத்தான் பெரிதுபடுத்திப் பார்ப்பார்கள், சொல் லுவார்கள். குரங்கு செய்தது தப்பு என்பது எல்லா ருக்கும் தெரியும் ஆனால் குரங்கினுடைய குணம் இதுதான் இது இப்படித்தான் இருக்கும் அதை மாத்த முடியாது தண்டனை கொடுக்க முடியாது ஆனால் வளர்த்தவன் ஒழுங்காக வளர்க்கவில் லை, பாதுகாப்பாக வைத்திருக்காதது வளர்த்த வனுடைய பிழை என்றுதான் சொல்வார்கள். ஆசைகளோட வளர்த்தவனுக்கும் ஆர்வத்தோட வளர்ந்த மரத்துக்கும் இருக்கின்ற எதிர்பார்ப்பு களும் ஏமாற்றங்களும் இங்கே உள்ளவர்களுக்கு விளங்காது. தவறென்று தெரிந்தும் பின்பாட்டுப் பாடுவதும் சரியென்று தெரிந்தும் அமைதியா இருப்பதுமான கூட்டத்தில்தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்''

அக்கா சொல்லிக்கொண்டே இருந்தார் எனக்கு ஏதோ புரிந்தமாதிரியும் இருந்தது, புரியாதமாதிரியும் இருந்தது. இவள் செடிக ளைப்பற்றிப் பேசுகின்றாளா, தன்னைப்பற்றிப் பேசுகின்றாளா, மனிதர்களைப்பற்றி பேசுகின் றாளா, குரங்கைப்பற்றிப் பேசுகின்றாளா அல்லது பெண்களின் நிலைமை குறித்துப் பேசுகின்றாளா என்பது கொஞ்சம் குழப்பமாகவே இருந்தது. ஆனால் ஒன்று மட்டும் புரிந்தது . எல்லோரு டைய கனவுகளையும்,ஆசைகளையும் குழப்பு வதற்கு அனைத்து இடங்களிலும், பலவிதமான குரங்குகள் இருக்கும் போல என்று நினைத்த படியே விழுந்து கிடந்த மரங்களையும், செடி வளர்ப்புப் பைகளையும், பார்த்தேன்.குரங்குக ளின் தாக்குதலுக்குப் பின்னரும் சில செடிகள் கம்பீரமாக நிற்பதாகவே இப்போது தோன்றியது.

போலிகையூர் ரேகா

## சீன தேசத்தின் குப்பைத்தொட்டியாக சிறிலங்கா தேசம்!

(வெலிமடை ஜஹாங்கீர்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனம் தூய்மை அடைவதற்கு எளிதான வழி என்ன ?

*அனிந்திதை மல்லாவி*

**பறவையான கிளி கூடப் பேசு கிறது. நமக்கு நெருக்கமான சிம் பன்ஸி போன்ற குரங்குகளை பேச வைக்க முடியவில்லையே அம்மு?**

**உண்மையில் குரங்கால் பேச முடியும். ஆனால், அந்தத் திறமையை அது படு ரகசியமாக வைத்துக்கொண்டு இருக்கிறது. வெளியே தெரிந்தால் எல்லா கம்பனிகளிலும்களிலும் தன் னை வேலைக்கு வைத்துக்கொள்வார்கள் என்று குரங்குக்கு ரொம்பப் பயம் உண்டு.**



*மிருணன்*
*நுவரெலியா*

**மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்தவரம். அப்படியாயின் காதலி அமைதெல்லாம் ?**

**ஏன் மனைவியை நீங்கள் காலிப்பதில்லையா, மிருணன்.**

*சித்ரா*
*வெற்றிலைக்கேணி*

**மனம் தூய்மை அடைவதற்கு எளிதான வழி என்ன அம்மு?**

**தானம் தருவது. உங்களுடைய சக்திக்கேற்ப, சில சமயம் உங்கள் சக்திக்கு விஞ்சியும் மனமார தானம் வழங்குவது எந்த எதிர் பார்ப்பும் இல்லாமல், வாங்குபவர் சந்தோஷத்தை மட்டுமே கருதி தானம் வழங்குவது.**

*ரிஷிகேசன் மட்டுவில்*

**அம்மு, மனித வாழ்க்கையின் இலட்சியம் என்ன?**

**மறைமுகமாகச் சொன்னாலும், வெளிப்படையாகச் சொன்னாலும், சுருக்கமாகச் சொன்னாலும், விளக்கமாகச் சொன்னாலும், நேரடியாகச் சொன்னாலும், சுற்றி வளைத்து சொன்னாலும் மனித வாழ்க்கையின் இலட் சியம் ஆத்மஞானம் பெறுவதும், உலகிற்கு நன்மை செய்வதுமே ஆகும்.**

*ஜமுனா கிரான்*

**அம்மு, உங்கள் வீட்டில் மதுரை ஆட்சியா சிதம்பரம் ஆட்சியா?**

**கூட்டாட்சி ஜமுனா.**

குறிப்பு - வாசகர்களே! உங்கள் கேள்விகளை தபால் அட்டையில் எழுதி அனுப்புங்கள்
அல்லது
Oliarazi என்ற முகநூலில் பதிவிடுங்கள். வைபர் : 0779046836, 0714273035



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலிருந்து ஒரு மடல்

## அன்பான அப்பா, அம்மா, ஆசிரியர்கட்கு,

சின்னக்குழந்தை எனது சின்ன மடலிது,

அழகாக எனக்கு உடை அணிவித்து, அழகான பெட்டியில் நேற்றுத்தானே அனுப்பினீர்கள், டெங்கு என்ற உயிர்கொல்லி என் உயிரைக்காவுகொண்டுவிட்டது என்பதனால் நீங்கள் அனைவரும் வேதனையில் இருப்பீர்கள் என்பது எனக்குத்தெரியும். எனக்கும் இங்கு இருக்க பயமாகத்தான் உள்ளது. அம்மா நீங்கள் இல்லாமல் ஒரு நாள் கூட நான் தூங்கியது இல்லையே, அப்பா, உங்களைத்தவிர வேறு யாருடனும் நான் பாடசாலை சென்றதில்லையே, பத்மினி ரீச்சர் உங்கள் அருகில் தானே என்னை அமரவைப்பீர்கள்,

இப்போது யாருமில்லாத ஒரு இடத்தில் நான் மட்டுமே இருக்கிறேன். ஆனால் இங்கு குப்பை கூளங்கள் இல்லை, தேங்காய் சிரட்டைகள், கோம்பைகள் இல்லை, பிளாஸ்ரிக் பாவனை இல்லை, அதனால் நுளம்புகள் இல்லை.

அம்மா எங்கள் வீட்டின் குழாய் நீர் கழிவு, கிடங்கில் நிற்கிறதென்று நான் காட்டியபோது நீங்கள் ஏன் கவனம் எடுக்கவில்லை, அப்பா, தென்னை மரத்தடியில் ஏகப்பட்ட கிளாஸ்ரிக் போத்தல்கள் கிடப்பதை சொன்னபோது நீங்கள் மௌனமாக இருந்துவிட்டீர்கள், ரீச்சர், எங்கள் வகுப்பின் பின் பக்கம் நீர் தேங்கிநிற்பதை கூறியபோது தலையாட்டிவிட்டு இருந்துவிட்டீர்களே, சுகாதார திணைக்களத்தினர் வந்தனர், துப்பரவு செய்யவேண்டும் என்று கூறிச்சென்றனர், உங்கள் அனைவரினதும் அசமந்தப்போக்கினால் தானே என்னை நுளம்பு கடித்தது. அதனால் தானே நான் இப்படி தனிமையில் இருக்கிறேன். நீங்கள் அனைவரும் நன்றாக கவனம் எடுத்திருந்தால் நான் எப்போதும் உங்களோடுதானே இருந்திருப்பேன்.



அப்பா எனக்கு ஊசி போட்டால் கூட நீங்கள் தாங்கமாட்டீர்களே, இப்போது என்னை மண்ணுக்குள் புதைத்துவிட்டு எப்படி இருக்கின்றீர்களோ, அம்மா, அப்பாவிடம் சொல்லி எமது வீட்டிற்கு அருகிலுள்ள கிடங்குகள் எல்லாவற்றையும் மண்போட்டு மூடச்சொல்லுங்கள், இதே போல பாடசாலையிலும் ரியூசனிலும் சொல்லிவிடுங்கள், இல்லாவிட்டால் என்னைப்போன்ற பிஞ்சுகளுக்கும் வளர்ந்தவர்களுக்கும் நீங்களே உங்கள் கைகளால் மண்போட்டு மூடவேண்டி ஏற்பட்டுவிடும். ரீச்சர், அஸ்வினி, தரணி எல்லோரும் சுகமாக உள்ளனரா? இனிமேலாவது அவதானமாக இருங்கள்,

என்னால் அதிகம் பேசமுடியவில்லை, நான் போகிறேன். உங்களைவிட்டு அதிக தூரம் போகிறேன். நீங்கள் எல்லோரும் கவனமாக இருங்கள்.

இப்படிக்கு
உதயராஜன் அஞ்சனா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலத்திற்கும் புலத்திற்குமான சினிமாவின் சங்கமம்

சினிமா என்பது மனதை மகிழ்விப்பது மட்டுமன்றி தரமான சினிமாக்கள் பல மாற்றங்களுக்கு வழி கோலுபவையாகவும் அமைகின்றன. அது தவிர பல்வேறுபட்ட தொழில்வாய்ப்பினை வழங்குவதிலும் சினிமா பாரிய இடத்தினைப் பிடித்துள்ளது. ஈழத்து சினிமா என்பது நாற்பது ஆண்டுகளுக்கு முற்பட்டதெனினும் நாட்டுச்சூழல் மற்றும் எமது முன்னைய தலைவர்களின் சினிமா பற்றிய பிற்போக்கு சிந்தனை என்பவை அதனை வளரவிடாது செய்துள்ளது என்பது நிதர்சனமாகும்.

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் புலம் பெயர்ந்து டென்மார்க்கை வாழ்விடமாகவும் கொண்ட கி.செ. துரை இயக்கத்தில் உருவான உயிர்வரை இனித்தாய் என்னும் முழு நீளத்திரைப்படம் அண்மையில் யாழ்ப்பாணம் ராஜா தியேட்டரில் மூன்று நாட்கள் திரையிடப்பட்டது. திரைப்படக்குழுவினரை சந்தித்து எமது ஒளிஅரசியின் சார்பில் கலந்துரையாடிய போது அவர்கள் வழங்கிய தகவல்களை வாசகர்களுக்காக தொகுத்து வழங்குகின்றோம்.



முகப்பில்




இலங்கையில் இப்படத்தினை கோபால் வெளியீட்டகம் வெளியீடு செய்திருந்தது.



தயாரிப்பு : ரவிசங்கர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**படத்தின் இயக்குனர் எம்மோடு பகிர்ந்தவை :**

நான் கி.செ. துரை. நான் ஒரு பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர். இறுதியாக நான் கற்பித்த பாடசாலை வல்வை மகளிர்கல்லூரி. பின்னர் நாட்டுச்சூழல் காரணமாக டென்மார்க்கிற்கு புலம்பெயர்ந்தேன். அங்கும் டேனிஷ்மொழி ஆசிரியராகவே எனது பணி தொடர்ந்தது. நான் சினிமா என்ற தளத்திற்குள் நுழைந்தது தற்செயலானது அல்ல, தோட்டக்காரி என்ற படத்தை இயக்கியவர் எனது அப்பாவின் நண்பர். அவர் அப்படப்பிடிப்பின் இறுதிக் கட்டத்தினை நிறைவுசெய்வதற்கு பணமில்லாது வீட்டினரின் நகைகளை அடகுவைத்து முடித்தும் படம் வெற்றிபெறாமல் அவர் அழிந்துபோன கதை என் சிறுவயதில் நடந்தது. நான் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அவர் சென்று மறைந்த காட்சி என் மனக்கண்ணில் பதிவானது. அன்றே சினிமா என்பது எனது ஆழ்மனதில் பதிந்துவிட்டது என எண்ணுகிறேன். அதுதவிர எனது தந்தையார் ஒரு சினிமா பைத்தியமாக இருந்தவர். இரண்டாம் உலகமகா யுத்தம் நடந்துகொண்டிருந்த காலப்பகுதியில் தியேட்டர் பூட்டப்பட்டிருந்த போதிலும் ரிக்கெற்றுக்காக வரிசையில் நிற்பாராம். என் இரத்தத்தில் கலந்திருந்த அவர்களின் உணர்வுகளும் எனக்குள்ளே புதைந்திருந்த சினிமா ஆசையுமே தளமிட்டது எனலாம்.

மூத்ததலை முறையினரான நீங்கள் முழுக்க முழுக்க காதல் சார்ந்த திரைப்படமாக இதனை எடுத்ததற்கான காரணம் பற்றி வினவியபோது, காதல் என்பது அனைத்து ஜீவராசிகளுக்கும் பொதுவான ஓர் உணர்வு, அதுவே இன்றைய இளம் தலைமுறையினரை அதிகம் ஆட்கொள்ளும் விடயமாகவும் உள்ளது. எது இலகுவாக மக்களிடம் சென்று சேருமோ அதனை கையில் எடுப்பதே சாமர்த்தியம். அதனாலேயே இவ்வாறானதொரு திரைப்படத்தை எடுத்தேன் என்றவர் குறைந்த பட்ஜெட்டில் ஒரு ரசிகனின் உள்ளத்தை தைக்கக் கூடியதாக இரண்டு பேர் நடிக்கும் காதலையே காண்பிக்கமுடியும். இதுவும் ஒரு காரணம் என்றார்.



''100 ஆண்டுகால சினிமா வரலாற்றை அவர்களின் மனநிலைக்கு ஏற்ப நாம் கூறத் துடிப்பதும் அவர்கள் ஏற்கமறுப்பதும் படத் தயாரிப்பின் போது நாம் எதிர்கொள்ளும் சவாலில் மிகப்பிரதானமானது'' என்றவர்

இன்றைய இளைஞர்களுக்கு ஒரு விடயத்தை சொல்லவிரும்புகிறேன், போராடாமல் தியாகம் செய்யாமல் வெற்றிபெற முடியாது, மற்றவர் வாய்ப்புகளை வழங்குவார் என்று காத்திருக்காதீர்கள், முள்பாதையில் முதல்காலைவைப்பதற்கு நீங்களே தயாராகவேண்டும், வெளிநாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் மோகத்தில் அங்கு வந்து மாட்டிக் கொள்வதைக் காட்டிலும் உங்களுக்கான இலக்கிற்காக இங்கே போராடி உங்களை தகுதிப்படுத்திக்கொண்ட பின்னரே வெளி நாடு வாருங்கள், இத்துறையில் மிளிரும் தமிழ் இளைஞர்களுக்கு எல்லா நாடுக ளிலும் வரவேற்பு உண்டு, ஆனால் நீங்கள் ஒவ்வொருவரும் திறமையாளர்களாய் பரிணமிக்கவேண்டும்.

படத்தயாரிப்பு என்பது சாதாரண விடய மல்ல, அதற்கான கல்வி, செலவு, பயன்ப டுத்தவேண்டிய கமராவின் தரம், என்பவை கருத்தில் கொள்ளப்படவேண்டும்.படத்த யாரிப்பு ஒரு பங்காகவும் விளம்பரப்படுத் தல் இரண்டு பங்காகவுமே உள்ளது. எல்லாவற்றையும் தயாரிப்பில் விட் டுவிட்டால் விளம்பரம் ஏது? விற் பனை ஏது?

தற்போது வாசிப்பு என்பது அதி களவில் குறைந்துவிட்டதை உணர முடிகிறது, வாசிக்காத இனம் வீழ்ச் சியடைந்துவிடும் என்பது நிதர்சனம், தினமும் வாசிப்பிற்கென நேரம் ஒதுக்கிக்கொள்ளுங்கள், ஏட்டுக் கல்வியைத் தாண்டிய வாழ்க்கைப் பாடத்தினை வாசிப்பு உங்களுக்கு வழங்கும், வெற்றிகள் விரைவில் கைகூடும், இங்கு நான் மிகச்சிறந்த இளைஞர்களையே அதிகமாக கண் டுள்ளேன், தியேட்டருக்குள் கைத் தொலைபேசி பாவிப்பது அனேக ருக்கு இடைஞ்சலாக அமையும். அதனைத்தவிர்க்கவேண்டும் என்பதையும் வேண்டுகோளாக முன்வைக்கிறேன் என வும் கூறினார்.

**ஒரு நடிகன் என்பதற்கப்பால் இசை அமைப்பு, படத்தொகுப்பு, திரைப் படத்திற்கான தொழிநுட்ப நுணுக் கங்கள் என்பவற்றை கையாளும் திறன் கொண்டவராகவும் கதை செ ால்லுதலில் ஊடக முனைவர் பட் டத்திற்காக படித்துக்கொண்டிருப் பவருமான நாயகன் வசந் எந்த பந்தாவும் இல்லாது இரசிகர்களோடு இர சிகர்களாக அமர்ந்து திரைப்படத்துறை சார்ந்த விடயங்களை அலசிக் கொண் டிருந்த போது எம்மோடு பகிர்ந்த வை.**

நாங்கள் வெளிநாடுகளில் எவ்வளவு தான் சாதனைகள் புரிந்தாலும் எங்கள் மன நிறைவு என்பது தாயக மக்கள் எமக்கு வழங்கும் அங்கீகாரத்திலேயே தங்கி யுள்ளது, இன்று எனக்கான அங்கீகாரத்தை எனது தாயக உறவுகளோடு அமர்ந்திருந்து அனுபவித்தபோது உண்டான மகிழ்ச் சிக்கு அளவே இல்லை, இவ் அங்கீகார மானது என்னைப்போல புலம்பெயர்ந்து வாழும் ஆயிரக்கணக்கான கலைஞர்க ளுக்கு நிறைவு தரும் விடயமாகும். புலத்தி லும் நிலத்திலும் வாழும் எம்மை இணைக் கும் ஒரு பாலமாகவே இத்திரைப்படத்தை இங்கே திரையிட்டோம். உலகின் பல்வேறு



நாடுகளில் திரையிட்டபோது கிடைக்காத மகிழ்ச்சி இங்கே கிடைத்தது. நமக்கான சினிமாத்துறையை உருவாக்குவதற்கான ஒரு ஆரம்பமே இது.

எனது திரைத்துறை அனுபவம் பற்றி கூறவேண்டுமானால் எனது இரண்டு வய தில் குழந்தையாக நடிப்புத்துறைக்குள் பிரவேசித்துவிட்டேன். நாடக நடிகனாக நுழைந்து இசையமைப்பாளராக உருவெ டுத்து தொழிநுட்ப கலைஞனாகி பயணிக் கும் எனது நடிப்பு பயணத்தில் இதுவரை 6 திரைப்படங்களை நடித்துள்ளேன். எனது முதல் திரைப்படம் பூ. இதுவரை 3 திரைப் படங்களே வெளிவந்துள்ளன. நான் தமிழ் நாட்டு கலைஞர்களிடம் கற்ற நடிப்பு, சினிமா தொழிநுட்பவியல் என்பவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படத்தில் பிரயோகித்துள்ளேன். பல பாடங்களை இப்படம் தந்துள்ளது. இனி வரும் காலங்களில் வெளிவரும் திரைப்பட டங்கள் இன்னும் கூர்மைபெறும் என்பதே எனது எண்ணம்.

இங்கு பல தயாரிப்பாளர்களை சந்தித் துள்ளேன், ஒருவரை ஒருவர் நேரில் பார்க்காமல் எதையும் செய்யமுடியாது. தற்போதைய வருகை அதற்கு அடித்தள மிட்டுள்ளது. முன்னைய காலங்களைப் போலல்லாது தற்போது நாம் வந்து செல் வது இலகுவாகவுள்ளது. இத்துறை சார்ந்த அனைவருடனும் கலந்து பேசி நமக்கான சினிமாத்துறையை உருவாக்கவுள்ளோம், ஐந்தாண்டுக்குள் எங்களுக்கான சினிமாத் துறை பரிணமித்துவிடும். இளைஞர்களே இன்றைய காலம் தொழிநுட்பத்தில் பல வழிகளைத் திறந்துள்ளது, அதன் மூலம் உங்களுக்கான திறன்களை வெளிப்படுத்தி வெற்றியை இலகுவாக அடைந்துகொள்ள லாம் எனவும் கூறினார்.




**வெளிநாட்டில் பிறந்த போதும் தமிழை அச்சளுத்தமாய் உச்சரித்து சென்னைத்தமிழில் இன்முகத்துடனும் மகிழ்ச்சியுடனும் பேசிய இப்படத்தின் நாயகி நர்வினி டேரி எம்முடன் பகிர்ந்த வை.**

எனது அப்பா இழக்கு மாகாணத்தின் கல் முனையைச் சேர்ந்தவர், அம்மா மயிலிட்டி யைச் சேர்ந்தவர். நான் பிறந்தது சென்னை யில், வளர்ந்ததெல்லாம் டென்மார்க்கில். இந்தப்படத்தில் எனது அனுபவங்களைச் சொல்லணும்னா, படப்பிடிப்பு தொடங்கி முடியிற வரைக்கும் ஒரு பாடசாலைக் குள்ள இருந்த அனுபவம் தான் ஏற்பட்டது. பத்தொன்பது வயதில தொடங்கி 22 வயது வரை என்னுடைய இளமை நாட்கள் இந்த படப்பிடிப்பிலயே கழிஞ்சது ஒரு மகிழ் வான அனுபவம். இந்தப் படத்தில நடிச்ச தன் மூலமா எனக்கு நிறைய அனுபவங்கள் கிடைச்சிருக்கு, நானே ஒரு பாட்டு இயக்கி யிருக்கிறேன். ஒளிக்கீற்று நிகழ்வில் அந்தப் பாடலுக்கு சிறந்த பெண் இயக்குநருக்கான விருது கிடைத்துள்ளது.

நான் நாயகியா தெரிவு செய்யப்பட்டது ஒரு அழகான தருணம், குடும்ப விழா ஒன் றிற்காக சென்ற போது தான் இந்தப்படத்தின் நாயகியாக தெரிவானேன். என்னைப் பார்த் ததும் இயக்குனர் சொன்ன முதல் வார்த்தையே நம்ம படத் துக்கான நாயகி கிடைச்சிட்டா என்றது தான். அவர் இயக்கு னரா இருந்தாலும் மூத்த தலை முறையா இருந்தாலும் எங்கள் கருத்துகளுக்கு முன்னுரிமை கொடுப்பார். இளைஞர்களை ஊக்கவிப்பதிலும் உற்சாகம் கொடுப்பதிலும் அவரை யாரா லும் மிஞ்ச முடியாது. ஒரு பல் துறை திறமைசாலியான அவர் எங்களுக்கு ஒரு அப்பாவாகவும் ஒரு ஆசிரி யராகவும் இருந்து வழிநடத்தியுள்ளார்.

இத்திரைப்பட வெளியீட்டிற்காக வருகை தந்தமையும் எங்கள் இரசிகர்க ளோடு அமர்ந்து படம் பார்த்தமையும் எங் கள் மக்களோடு குதூகலித்தமையும் வாழ் வில் என்றுமே மறக்கமுடியாத தருணங்கள் என்றார் புன்னகையுடன்.

நல்லதொரு மதியப் பொழுதில் பசுமை சொரிந்த ஒரு விடுதி வளாகத்தில் எமக்காக நேரம் ஒதுக்கி சிறப்புற விருந்தோம்பல் செய்து வழியனுப்பிய படக்குழுவினருக்கு வாழ்த்துடன் நன்றிகூறி விடைபெற்றோம்.


நேர்காணல் : ஜமிலா

நன்றி : கம்பிகளின் மொழி பிறேம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாத்தியமான தீர்வுதான் என்ன?




I. வினைத்திறன் குறைந்த ஆசிரியர்கள், அரச ஊழியர்கள் ஏறக்குறைய 30% பேர் இருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன என அரசியல்வாதிகள் கூறுகின்றனர். 55 வயதிற்கு மேற்பட்ட அப்படிப்பட்டவர்களுக்கு ஏதாவது சலுகைகளை வழங்கி ஓய்வுபெறச் செய்வதன் மூலம் புதியவர்களுக்கு நியமனம் வழங்கலாம்.

II. பட்டதாரிகளுக்கான சுயதொழில்களுக்கான பயிற்சியும் நிதிவசதியும் வழங்குவதன் மூலம் (கடன்) பிரச்சினையைத் தீர்க்கலாம்.

III. பட்டதாரி ஆசிரிய நியமனம் வழங்குவதற்கு கலைத்துறைப் பட்டத்துக்கான அவர்களின் பட்டங்கள் தடையாக இருக்குமாயின் க.பொ.த. சா/த. கணித, விஞ்ஞான உயர் பெறுபேறுகளை அடிப்படையாக வைத்து அத்துறையில் மேலும் பயிற்சி வழங்கி கணித, விஞ்ஞான ஆசிரியர்களாக உள்வாங்கலாம்.


VI. P.S.I. பாடசாலை அபிவிருத்தித்திட்டம் என்ற பெயரில் முகாமைத்துவம், பாடசாலை மட்டத்துக்கு நகர்த்தப்படுவதால் ஒவ்வொரு பாடசாலையிலும் முகாமைத்துவ உதவியாளர்களின் தேவை ஏற்பட்டுள்ளது. அந்தப் பதவிகளுக்கான நியமனங்களை வழங்கலாம்.

V. எதிர்காலத்தில் பட்டங்களை வழங்கும் போது தொழில் வழங்குவதற்கு முடியாத நெறிகளைத் தவிர்த்து தொழில்வாய்ப்புகளை வழங்குவதற்கு ஏற்ற தொழில் பயிற்சியுடன் கூடிய பாடநெறிகளை அறிமுகம் செய்தல்.

VI. பாடசாலைகளில் பயிலும் தரம் 9,10,11 மாணவர்களுக்கு காத்திரமான முறையில் தொழில் வழிகாட்டல் கருத்தரங்குகளை ஏற்பாடு செய்து நடத்துவதன் மூலம் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய இவ்வகையான பிரச்சினைகளைத் தவிர்த்தல்.

எஸ். அருளானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


புது வருடத்துக்காவது அப்பா வருவாரா?

பாரீஸ் நகரில், ரயில் நிலையம் அருகில் ஒருமுறை ஒரு பயங்கர வெடிகுண்டு சம்பவம் நடந்தது. தாக்குதல் நடத்திய குற்றவாளிகள் அனைவரும் தப்பினர். ஆனால் அவர்களுடன், இந்த செயலுக்கு மிகவும் உறுதுணையாக இருந்த ஒரு பயிற்சி நாய் மட்டும் போலீசார் வசம் சிக்கிகொண்டது.

அந்த நாயை வைத்துக் கொண்டு போலீசாரால் துப்புத்துலக்கமுடியவில்லை.காரணம்,அதுஎந்த முறையில்,எந்த மொழியில் பயிற்சி கொடுக்கப்பட்டது என்ற விபரம் அங்கிருந்த யாருக்கும் தெரியவில்லை.

உதாரணமாக யானைக்கு சமஸ்கிருத மொழி விளங்கும் என்று பலரும் சொல்வார். அதைப்போல், ஹிந்தி பேசுபவர் வீட்டில் வளரும் நாய், பைட்டோ,பைட்டோ என்றால் உட்கார்ந்து கொள்ளும்,,

எப்படியாவது இந்த நாயை வைத்தே குற்றவாளிகளின் இருப்பிடத்தை கண்டறிந்து விட எல்லோரும் முயற்சி செய்து ஒரு வழியாக, ஒரு பன்மொழிக் கலைஞரை அழைத்தனர். அவருக்கு 60 மொழிகள் வரை அத்துப்படி. அவர் ஒரு புரொபசரும் கூட .

அவரும் வந்து, விதவிதமாக மொழிகளை பேசி, முயற்சி செய்தும் பலன் இல்லை. அந்த நாய்க்கு ஒன்றும் புரியவில்லை.

கடைசியாக பழபெரும் மொழிகளில் ஒன்றான ஹிப்ரு மொழியில், அவர் பயிற்சியை துவக்கியதும், நாய்க்கு புரிய ஆரம்பித்தது. உடன் அதை வைத்து குற்றவாளிகளின் இருப்பிடம் கண்டுபிடித்து, உடனடியாக கைது செய்தது பாரீஸ் போலீஸ்.

அந்த புரொபசருக்கு பாராட்டுக்கள் குவிந்தன. ஏகப்பட்ட விருதுகளை அள்ளிதர முடிவு செய்து பெரிய விருந்து ஒன்றையும் ஏற்பாடு செய்தனர்.

விருந்தில் அவரிடம், உங்களால் பாரீஸ் நகரம் பெருமை அடைந்தது. ''உங்களுக்கு என்ன வேண்டும் கேளுங்கள் வழங்கப்படும்'' என்றனர்.

# பன்மொழி கலைஞர்



பணம் வேண்டுமா? விலை உயர்ந்த கார்கள் வேண்டுமா? மாளிகை வேண்டுமா? அரசாங்க பணிகள் வேண்டுமா? என்று கேட்டனர்.

அதற்கு அவர் , எனக்கு உதவியாக இருந்த அந்த நாயை மட்டும் தயவு செய்து வழங்கிவிடுங்கள் என்றார்.

அதைக்கேட்டு அங்கிருந்த அனைவருக்கும் ஆச்சரியம் ... அந்த நாயை வைத்து நீங்கள் என்ன செய்ய முடியும்? என்று அதிகாரி கேட்டார்.

அதற்கு பன்மொழி கலைஞர் சொன்னது......


இந்த நாயை என் வீட்டிற்குக் கொண்டு சென்று என் மனைவி முன் நிறுத்த வேண்டும். ஏனென்றால், நான் கஷ்டப்பட்டு பல மொழிகள் படிக்க முயலும் போது அவள் கோபப்பட்டு சொல்வாள் ....

எந்த நாய் கேட்கப் போகுதுன்னு.... இதையெல்லாம் படிக்கிறீங்கன்னு...,, அதற்காக நான் இதைக் கொண்டு போகணும் என்று சொன்னவுடன் ...

விருந்து அரங்கம் சிரிப்பொலியில் நிறைந்தது.

நன்றி கோகுலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கண்ணனின் மீரா

கண்ணனை கணவனாக எண்ணி வாழ்ந்து திருவரங்கத்தில் கண்ணனோடு இரண்டறக் கலந்த ஆண்டாளைப் போல கண்ணன் மடி சேர்ந்தவள் தான் மீரா. அவளது பாடல்கள் மொழிபெயர்க்கப்பட்டு ஆண்டுகள் பலநூறு கடந்துவிட்டபோதும் காற்றினில் தவளும் கீத மாய் இன்றும் ஒலிப்பவை.

இந்தியாவில் ராஜஸ்தான் என்ற இடத்தில் பாலி மாவட்டத்தில் ஜோத்பூர் குக்கி அரசனான ரத்தன் சிங் வீரகுமாரி தம்பதிகளின் ஒரே மகளாக அவதரித்தவள் தான் மீராபாய். அவள் குழந்தைப்பருவத்தில் இருந்த போது அவளது இல்லம் வந்த ஒரு துறவி கிரிதர கோபாலன் சிலையை பரிசாக வழங்கினார். சில நாட்களில் வீதியிலே சென்ற திருமணவைபவம் ஒன்றை கண்ணுற்ற மீரா ஊர்வலம் சென்ற மணாளனைப்பற்றி கேட்க, அவர் தான் அப்பெண்ணின் மணாளன் எனக்கூறிய தாயாரிடம் அப்படியாயின் என்னுடைய மணாளன் எங்கே? என்று கேட்ட மீராவின் வினாவிற்கு இவர் தான் உன் மணாளன் என தாயார் வேடிக்கையாய் கிரிதரகோபாலன் சிலையைக்காட்ட அன்னை கூறியதைக்கேட்ட மீரா அதையே தன் சிந்தையாய் கொண்டு வாழ்ந்தாள். உண்மை உணர்வுடன் காதல்வயப்பட்டு அவ் எண்ணத்தை தன் உள்ளத்தோடு ஒன்றினாள். மீரா சிறு வயதிலேயே தன் தாயை இழந்துவிட்டதால் தன் பாட்டனாருடனே வாழ்ந்தாள்.

அச்சிலை மீதிருந்த காதல் காலப்போக்கில் கிருஷ்ணர் மீது ஆண்டாள் கொண்ட காதலைப்போல மாறிட கண்ணனை தன் மணாளனாக வரித்துக்கொண்டாள். அவளுக்கு திருமண வயது வந்தபோது அவளுக்கு திருமணம் செய்ய முற்பட தனக்கு கண்ணனுடன் எப்போதோ திருமணம் நடந்துவிட்டதாக அவள் கூற அதனை ஏற்க மறுத்த வீட்டினர் அவளுக்கு வலுக்கட்டாயமாக சித்தோர்தல் அரசின் முடிக்குரிய இளவரசனான போஜ்ராஜனை திருமணம் செய்து வைத்தனர். கணவனின் குடும்பத்தினர் தமது குலதெய்வமான துஜை பவானி என்ற நாமம் கொண்ட துர்க்கையை வழிபட இவள் மட்டும் கண்ணனை வழிபட்டதால் வீட்டில் அவளது வழிபாடு தடைசெய்யப்பட்டது.

மீராவின் கணவனான போஜ்ராஜன் அவளை அதிகம் நேசித்ததாலும் அவள் மீது அளவற்ற காதல் கொண்டிருந்ததாலும் அவள் தனிமையில் கிரிதர கோபாலனை வழிபடவும் மனமுருகி பாடல்கள் பாடி துதிக்கவும் அனுமதியளித்தான். பின்னர் நடந்த ஒரு யுத்தத்தில் மீராவின் கணவன் இறந்துவிட அவளது மைத்துனனான விகரம்சிங் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டான்.

மீரா கண்ணன் மீது கொண்டிருந்த அளவற்ற பக்தி காரணமாக சாதுக்களோடும் சமணர்களோடும் தன்னை மறந்து ஆடுவதும் பாடுவதுமாக இருந்தவேளையில் அவளது பக்திச்செய்கையானது தமக்கு இழுக்கென கருதிய அரசன் அவனைக்கொல்ல பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடவைகள் முயற்சித்தான்.

அவனது அத்தனை முயற்சிகளும் தோல்வியே கண்டன. அரச குடும்பத்தின் தொல்லைகள் தாங்கமுடியாத மீரா குரு ரவிதாசருக்கு சீடரானாள். அதன் பின்னர் இந்தியாவின் பல இடங்களுக்கும் விஜயம் செய்த அவள் கண்ணன் வாழ்ந்த பிருந்தா பனத்தை வந்தடைந்து தன்னையும் கோபி யர்களில் ஒருவராக உணர்ந்து வடஇந்தியா முழுவதும் யாத்திரை சென்று கண்ணன் புகழை பாடல்கள் மூலம் வட்டார மொழி யில் பரப்பினாள்.

**எந்தன் உடலை விளக்காக்கி**
**இடுதிரியாக்கி இதயத்தை**
**உன்பால் உள்ள காதலையே**
**எண்ணை ஆக ஏற்றிடுவேன்**
**இரவும்பகலும் எரியட்டும்**
**அருள்மிகு அடியார் கூடிடும் உன்**
**அழகியசந்நிதி முன்னிலையில்**
**உன்னைப்பிரிந்து ஒருக்கணமும்**
**இருக்கமாட்டேன் இனிஐயா**
**என்னைஉனதாய் ஏற்றுக்கொள்**
**என்னை உனைப்போல் ஆக்கிவிடு**

பிறப்பு - இறப்பு என்பவற்றில் இருந்து விடுபட்டு பேரின்ப நிலையை அடைய கிருஷ்ணபக்தியின் அவசியத்தை இனிமை யான பாடல்கள் வாயிலாக எடுத்தியம்பி குஜ ராத்தின் துவாரகையை வந்தடைந்து அங்கு கோவில் கொண்டுள்ள துவாரகீசர் முன்பாக மெய்யுருகிப் பாடியபடியே அனைவரும் காணும் வண்ணம் இறைவனோடு இரண்ட றக்கலந்து மாயமானாள் கண்ணனை மனதார காதலித்த மீராபாய்.


தமிழரசி



# ஒளிஅரசியின் ஆலோசனைக்குழு

01. திரு.எஸ். அருள்ராமலிங்கம் - பொது வைத்தியர் (கொழும்பு)
02. திருமதி செல்வமலர் சுந்தரேசன் - ஓய்வுபெற்ற அதிபர் (பருத்தித்துறை)
03. திருமதி மைமூனா அஹமட் - முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் (சாய்ந்தமருது)
04. திரு. செ.செல்வராஜா - ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் (யாழ்ப்பாணம்)
05. திருமதி தேவராணி நவரட்ணம் - அதிபர் (துன்னாலை)
06. திருமதி கோகிலா மகேந்திரன் - பிரபல எழுத்தாளர் (தெல்லிப்பளை)
07. திருமதி செல்வநாயகி கோணேஸ்வரலிங்கம் - மேல்நிலைத் தாதி (வவுனியா)
08. திரு. ச.லலீசன் - பிரதி அதிபர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை (கோப்பாய்)
09. திரு. செ. மகேஸ் - ஓய்வுபெற்ற உதவிக்கல்விப் பணிப்பாளர் (யாழ்ப்பாணம்)
10. திருமதி றொஷற்மெலானி தவநாயகம் - வங்கி முகாமையாளர் (அச்சுவேலி)
11. திருமதி புஸ்பமலர் சிவலிங்கம் - ஓய்வுபெற்ற பிரதேசசபை செயலாளர் (வலிகாமம்)
12. திரு.கு. சரவணபவானந்தன் - ஓய்வுநிலை கோட்டக்கல்விப் பணிப்பாளர் (யாழ்ப்பாணம்)
13. திரு.எஸ் அருளானந்தம் - ஓய்வுபெற்ற அதிபர் (மட்டக்களப்பு)
14. திரு.ஏ.ஜெயக்குமார் - ஓய்வுபெற்ற அதிபர் (நவாலி)
15. திருமதி கலாபூசணம் நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் (கொழும்பு)
16. திரு. சி. நற்குணலிங்கம்- ஓய்வுநிலை கோட்டக்கல்விப் பணிப்பாளர் (வடமராட்சி)
17.திருமதி சூர்யாசிவரூபன் - வட்டுக்கோட்டை இணைப்பாளர் (யாழ்ப்பாணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தம்மண்ண செட்டியார்

## பாகம் 1

# மூன்று மனங்கள்!

நமக்குள்ளே உள்மனம், வெளிமனம் என இரண்டு மனங்கள் மட்டும் இல்லை. உள் மனம் - வெளிமனம் - ஆழ்மனம் என்ற மூன்று மனங்கள் இருக்கின்றன என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

நமது சிரசில் உள்ள மூளைதான் நமது மன தின் பீடமாகும். மூளையானது ஜீவன் நிற்கும் ஸ்தானமாகும். இது யோசனைகள், எண்ணங் களை உண்டுபண்ணும் இயந்திரம் போல செயற்பட்டுக்கொண்டிருக்கிறது. நமது சரீரத் தில் உள்ள ஒவ்வொரு அவயவமும் நரம்பு களால் மூளையுடன் இணைக்கப்பட்டிருக்கின் றன என்பதையும் தெரிந்துகொள்ளுங்கள்.

இவ்விதமாகச் சரீரத்திலுள்ள ஒவ்வொரு உறுப்பையும் மூளையோடு சம்பந்தப்பட்டி ருக்கும் சிறிய, பெரிய நுண்ணிய தன்மைக ளைக்கொண்ட நரம்பு மண்டலத்தின் மூலமாக அவ்வவ்வுறுப்புகளுக்கு ஆக்ஞை செலுத்தி நடத்திவரும் தன்மை மனதுக்கு உண்டு.

நமது மூளையை சோதனைசெய்து பார்த் தால் அதில் மூன்று பகுதிகள் இருப்பது தெரி யவரும். இந்த மூன்று பகுதிகளுமே மிகவும் முக்கியமான பகுதிகளாகும்.

1) முன் மூளை - (Cerebrum)

2) பின் மூளை - (Cerebellum)

3) அடி மூளை - (Medulla Oblongata)

என மூன்று பகுதிகளாக மூளை அமைந் துள்ளது.

இவைகளில் முன் மூளையே எல்லாவற் றிலும் பெரியதாகும். இதிலிருந்து புறப்படும் நரம்புக் கற்றைகள் பஞ்சேந்திரியங்களான மெய் - வாய் - கண் - மூக்கு - செவி ஆகி யவற்றை தமது கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு இயங்கிவருகின்றன. நாம் விழித் திருக்கும்போதும் சாதாரணமான பணிகள் செய்யும்போதும் இந்த மூளையின் மூலமாகவே சகல யோசனைகளும் செயல்களும் செயற்படுத்தப்படுகின் றன. இதன் சக்தியை மற்ற மூளைகளோடு ஒப் பிட்டுப்பார்த்தால் இது வெகு சொற்பம் என்றே சொல்லாம். இது உலகிலுள்ள ஒவ்வொரு விடயத்தையும் பகுத்தறிவுடன் ஆராய்ந்து நிதானித்து முடிவுகளை இரண்டாவது மூளை யாகிய பின் மூளையில் அடக்கிவைக்கிறது.

நாம் ஒரு பொருளைப் பார்க்கும்போதும் மற்றவர்களோடு பேசும்போதும் முன் மூளை யில் அதிகார பீடத்தில் இருக்கும் 'புறமனதை 'த்தான் உபயோகிக்கின்றோம்.

புத்தகங்கள் - கடிதங்கள் - செய்தித்தாள் களை வாசிக்கும்போதும் இந்தப் புற மனமாகிய வெளிமனம்தான் வேலை செய்கிறது.

நாம் தூங்கும்போதும், கனவு காணும் போதும் நமது புறமனம் அடங்கிவிட அதன் ஜீவசக்தி பின்பக்கம் கீழே இறங்கி பின் மூளைக் குச் செல்கிறது. இதைத்தான் நாம் 'உள்மனம்' என்று சொல்கின்றோம்.

இனி நாம் இந்த உள்மனதின் பல ஆச்சரிய மான சக்திகளையும், தன்மைகளையும் தெரிந் துகொள்வோம்.

நாம் உறக்கத்தில் இருக்கும்போதும், கனவு காணும்போதும், மனோ ராஜ்யம் என்ற கற் பனை உலகில் சஞ்சரிக்கும்போதும், யோக நித்திரையில் 'தூங்காமல் தூங்கும் நிலையில்' இருக்கும்போதும், யோக தியானம் செய்யும் போதும், இன்னும் அநேக காரியங்களைச் செய்யும்போதும் நமது பின் மூளையின் பிரதான அதிகாரியான உள்மனமே பிரத்யட்ச மான கிரியைகளை - அதாவது, செயல்களைச் செய்கிறது.

இந்த ஆற்றல்மிக்க உள்மனதுக்கு நாம் கண்ணை மூடிக்கொண்டிருக்கும்போதுகூட ஒன்றைப் பார்க்கும் திறமையும், காதுகளை மூடியிருக்கும்போதும் காதுகளால் கேட்காத நிலையில் இருக்கும்போதும் கேட்டறியும் தன் மையும் இருக்கிறது. ஆயிரக்கணக்கான மைல் களுக்கு அப்பால் நடக்கும் விடயங்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கே உள்ள மனிதர்கள், சூழ்நிலைகள், மற்ற எல்லா விவரங்களையும் கூட தெளிவாகக் கண்டறியும் சக்திகளும் இதற்கு இருக்கிறது. அநேக யோகிகளும், ஞானிகளும், சித்த புருஷர்களும், மகான்களும் தங்களத விருப்பப்படி வெளிமனதின் கிரியைகளை நிறுத்திவிட்டு தங்களது உள்மனதின் ஆற்றல்களை எழுப்பிச் செயற்பட வைத்து தங்களுக்குத் தேவையான காரியங்களை நடத்திவைக்கும் சக்தியை அடைந்துள்ளவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் நடத்திவைத்த அற்புதங்கள் பலவற்றை பின்பு பார்ப்போம்.

இவ்விதமாக நமது முன் மூளையின் செயற்பாடுகளை நிறுத்திவைக்கும் வல்லமையுடையவர்கள் பிறருக்கு உண்டாகும் நோய்களின் தன்மைகளையும், அவர்களின் துன்பங்கள் - கஷ்டநஷ்டங்களையும் உணர்ந்து எதுவித மான மருந்துகளோ ஔஷதங்களோ கொடுக்காமலேயே நிவர்த்திசெய்யும் அற்புதமான ஆற்றல்களை அடைந்தவர்களாக ஆகிறார்கள்.

இந்தச் செய்கைகளை அவர்கள் யோக நித்திரையிலிருந்து செயற்பட வைக்கிறார்கள். இந்த நிலையைத்தான் தூங்காமல் தூங்கி சுகம் பெறும் நிலை என்று சொல்கிறார்கள்.

நமது ஐந்து புலன்களான மெய் (உணர்வு) - வாய் - கண் - மூக்கு - செவி இவைகளினால் உண்டாகும் அறிவுகள், செய்கைகள் அடங்கி நமது சீரமானது நித்திரைத்தன்மை அடைந்தபோதிலும் நமது உள்மனதைக்கொண்டு அதைச் செயற்பட வைத்து விழிப்பு நிலையிலிருந்து கிரியைகளை ஆணையிட்டுச் செயற்படுத்தலாம்.

பயிற்சிக் குறைவினாலும், அறியாமையினாலும் நமது உள்மனதின் செயற்பாடுகளை அலட்சியம் செய்துவிடுவதால் அது வரவர மழுங்கிச் செயலிழந்தும் போகலாம். அதனால் உள்மனதை அடிக்கடி தட்டியெழுப்பி வேலை வாங்குவோமேயானால் நம்மாலும் உலகத்தில் அற்புதச் செயல்களைச் செய்துகாட்ட முடியும். இந்தத் திறமைகளைப் பெற்ற சித்தர்களாக நாமும் ஆகலாம்.

உள்மனதுக்கு பகுத்தறியும் தன்மை இல்லை. ஒரு பொருளை மற்றதுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் தன்மை அதற்குக் கிடையாது. உள் மனதுக்கு நல்லது கெட்டது என்ற பேதம் எதுவும் இல்லை. நாம் எதை விரும்புகிறோமோ அதைக் கொடுக்கிறது. எதை மனதில் எண்ணி வேண்டுகிறோமோ அதையே கொடுக்கிறது. உள்மனமானது ஒரு வளமான பூமி. அதில் என்ன விதை விதைத்தாலும் நன்கு செழித்து வளரும். அந்த விதையைத் தெரிந்தெடுப்பது நாம்தான். வேறு எவரும் இல்லை என்பதை உணரவும். எதை விதைக்கிறோமோ அதைத்தானே நாம் அறுவடை செய்யமுடியும்?

இத்தகைய அற்புதமான உள்மனதை - அதன் ஆற்றல்களை நாம் தன்யோசனைக் கட்டளைகளால் (Auto suggestions) வெகு எளிதில் கைவசப்படுத்திக்கொள்ளலாம்.

நமது உள்மனதானது சீரத்திலுள்ள சகல உறுப்புகளையும் ஒரு ஒழுங்குடன் நடைபெறச் செய்து காப்பாற்றி வருகிறபடியால் நமது சீரத்தின் எந்தப் பாகத்திலும் ஏதாவது பிரச்சினைகள், குறைகள் ஏற்பட்டால் நமது உள்மனதுக்கு யோசனைக் குறிப்பு வார்த்தைகளைச் (Suggestions) சொல்லி சகலவிதமான பிரச்சினைகளையும் நிவர்த்தி செய்துகொள்ளலாம். மற்றவர்களுக்கு உண்டாகியிருக்கும் நோய்களைக் குணப்படுத்தும் ஹிப்னாடிஸ்ட்டுகள் என்னும் மனோவசிய சிகிச்சை அளிப்பவர்கள் மற்றும் காந்தசக்தியால் குணப்படுத்துபவர்கள் செய்வது என்னவென்றால், இவர்கள் நோயாளியின் வெளிமனதை அது வேலை செய்யாதபடி ஆழ் நிலைத் தூக்கத்தில் - அதாவது, செயற்கைத் தூக்கத்தில் தூங்கவைத்துவிட்டு உள்மனதை தட்டியெழுப்பி விடுவதுதான்.


அதன் பின்பு யோசனைக் குறிப்புகளை - வசனங்களை - 'நோய் நீங்கி சுகமாகிவிட்டது, நோய் நீங்கி சுகமாகிவிட்டது' என்று வற்புறுத்தி உறுதியுடன் சொல்லும்போது நோயாளியின் உள்மனமானது உடனே அந்த வசனங்களை எந்தத் தடையுமின்றி ஏற்றுக்கொள்கிறது.

உள்மனதானது எந்த விஷயத்தைப் பூரணமாக நம்பிவிடுகிறதோ அதன் பலன் நோயாளியின் சீரத்தில் தெரியும்.

உதாரணமாக நோயாளியின் உள்மனம் தலைவலி இருக்கிறது என்று நம்பினால் அவருக்குத் தலைவலி இருக்கும். தலைவலி இல்லை என்று சொன்னால் அவருக்குத் தலைவலி நீங்கிவிடும். வலி இருக்காது. மற்ற வியாதிகளும் இம்முறையிலேயே சரிசெய்யப்பட்டுவிடும்.

முக்கியமாக மூளையையும், நரம்பையும் சம்பந்தப்படுத்திய சகலவிதமான வியாதிகளையும் பயம் - சித்தப்பிரமை - அஜீரணம் - வாதம் - கைகால் வலி - அசதி - தூக்கமின்மை - தலைவலி - மறதி - பேடித்தனம் முதலிய வியாதிகளை மனோவசியத்தால் குணமாக்க முடியும்.

**இரகசியங்கள் நீளும்**



புது வருடத்துக்காவது அப்பா வருவாரா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இம்மாத ஒளிஅரசியின் நட்சத்திர இல்லத்தரசி**
**பிரபல முஸ்லிம் பெண் நாவலாசிரியையான வெலிவிட்ட ஏ.சீ. ஜரீனா முஸ்தபா**



இலங்கையின் பிரபல முஸ்லிம் பெண் நாவலாசிரியைகளில் இவரும் குறிப்பிடத் தக்கவர். சிங்கள மொழி மூலம் கல்வி கற்றவர். தனது ஆளுமையினால் சுயமாகவே தமிழை கற்று இலக்கியம் படைப்பவர். மின்னாமல் முழங்காமல் வருகின்ற மழை போல இவர் இதுவரை பத்து நூல்களை வெளியிட்டுள்ளார். நிறைகுடம் தளும்பாது என்பார்கள். ஆம் தளும்பாத நிறை குடமாக இலக்கியத்தில் தடம் பதித்துள்ள பிரபல முஸ்லிம் பெண் நாவலாசிரியையான வெலிவிட்ட ஏ.சீ. ஜரீனா முஸ்தபாவே இம்மாத ஒளிஅரசியின் நட்சத்திர இல்லத்தரசியாக ஜொலிக்கிறார்.

அவர் தரும் நேர்காணல் இதோ:

# ஆணின் துணையிருந்தாலே பெண்களால் எதையும் சாதிக்க முடியும்




எம்.வை.எம்.அப்துல் கரீம், பாத்திமுத்து சுஹரா தம்பதிகளின் மகளாக ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டையில் பிறந்தேன். தற்சமயம் கடுவலை வெலிவிட்டவை வாழ்விடமாகக் கொண்டுள்ளேன். தும்மலசூரிய ஆரியகாமத்தில் ஏ.எம்.முஹம்மது முஸ்தபாவை திருமணம் முடித்தேன். எனக்கு இரண்டு மகள்மாரும் இரு மகன்மாரும் உள்ளனர். இவர்கள் மூலம் எமக்கு நான்கு பேரப்பிள்ளைகளும் உளர்.

வெலிவிட்ட சென் மேரீஸ் தேசிய பாடசாலையில் சிங்கள மொழி மூலம் கல்வி கற்றேன். வெலிவிட்ட ஷ மத்ரசதுல் ஜன்னா என்ற அஹதியா தர்ம பாடசாலையின் அதிபராக செயல்படுகிறேன்.

**எழுத்துத்துறையில் உங்களுக்கு எவ்வாறு ஆர்வம் ஏற்பட்டது?**

எனது தாயார் ஆன்மிகத்தில் தீவிர ஈடுபாடு உடையவர். கல்வி அறிவற்ற அவர் வாசித்த சன்மார்க்க நூல்களே ஒரு நூலகத்துக்கு போதுமானதாக இருக்கும். சிறு வயதில் தாயார் எமக்கு சோறு ஊட்டும் போதும் உறங்க வைக்கும் போதும் வரலாற்றுக் கதைகளை கூறுவார். நமது முன்னோடிகளின் படிப்பினைகளை எல்லாம் எடுத்துச் சொல்லி வாழ்வில் அவற்றை கடைபிடிக்குமாறும் எமக்கு உபதேசம் செய்வார். எனவே எனது தாயார் மூலமே எனக்கு வாசிப்பு பயிற்சி வந்தது தாயாரைப்போன்று நானும் எனது தங்கைமாருக்கும் தோழிகளுக்கும் கதை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்ல வேண்டும் என்ற ஆர்வத்தில் ஒவ்வொரு நூலாய் வாங்கிப் படித்தேன் அதில் கிடைக்கின்ற படிப்பினைகளை சமூகத்துக்குச் சொல்ல ஆசைப்பட்டேன். அது குறித்து நிறையவே எழுதினேன். எனினும் அவைகளை ஊடகங்களுக்கு அனுப்ப எனக்கு துணிவு வரவில்லை. தமிழ் மொழியை கற்காததினால் வந்த தயக்கம் அது.

ஒரு சமயம் பெண்கள் பாடசாலையில் கல்வி கற்ற எனது சகோதரி ஒருவருக்காக அவசரமாக சிறுகதை ஒன்று எழுத நேரிட்டது. அந்த சிறுகதையை வாசித்த அப்பாடசாலையின் தமிழ் ஆசிரியை என்னை அழைத்திருந்தார். நானும் தயங்கிய படியே அங்கு சென்றேன். ஆனால் அங்கே அந்த ஆசிரியை கூறிய வார்த்தைகள் என்னை மெய்சிலிர்க்கச் செய்தன. இது தமிழ் படிக்காத ஒருவரால் எழுதப்பட்டதாக தெரியவில்லை. எழுத்துலக அனுபவம் உள்ள ஒருவரால் எழுதிய கதையாகவே நான் கருதுகிறேன். பணத்தால் படிப்பால் திறமைகளை வாங்க முடியாது. உங்களிடம் அது நிறைந்துள்ளது. நீங்கள் அதனை வெளிப்படுத்துங்கள் என்றார். அன்று அந்த ஆசிரியர் தந்த உற்சாகத்தை என்றும் என்னால் மறக்க முடியாது. 1982-83-84 ஆம் ஆண்டுகளில் தினபதி இஸ்லாமிய பூங்கா பகுதிக்கும் மாதர் மஜ்லிஸ் நிகழ்ச்சிக்கும் ஆக்கங்களை எழுதி வந்தேன். 85ம் ஆன்டு முதல் இலக்கியம் படைக்க ஆரம்பித்தேன். இலக்கியம் என்பது வெறும் கற்பனைகளோடு சஞ்சரிப்பதில் எனக்கு உடன்பாடு இல்லை. வெறும் கற்பனைகளினால் மட்டும், நல்ல படைப்புகளை, சமூகம் சார்ந்த நல்ல படிப்பினைகளை தரமுடியும் என்பதிலும் எனக்கு நம்பிக்கை இல்லை. அதுமட்டுமன்றி எழுதுவதற்காக காலத்தோடு போராடவேண்டியுள்ளது. சில சமயங்களில் நாம் தேடிப் போகும் ஓய்வுகள் நம்மைக் கண்டு வெருண்டோடிப் போய் விடுகிறது. இரவு நேரங்களில் சின்ன சின்ன ஓய்வுகளையும் தொலைத்து விட்டு அல்லது தியாகம் செய்து விட்டுத்தான் எழுத வேண்டியுள்ளது. அப்படி ஒரு காலப் போராட்டத்தில் உதிக்கும் எழுத்துகளானவை நம் சந்ததிகளுக்கும் சமுதாயத்திற்கும் எவ்வித நற்பயனும் இல்லாமலாக்கிவிடக் கூடாது என்பதில் அதிக கவனம் செலுத்துகிறேன். ஆகவேதான் உண்மைகளை கருக்களாகக் கொண்டு கதைகளை எழுதுகிறேன். அதிலேயே படிப்பினைகளைத் தரமுடியும்.

**நீங்கள் இது வரை எழுதிய நூல்கள் எத்தனை?**

நான் இது வரை பத்து நூல்களை எழுதியுள்ளேன்.அவற்றுள் இதுவரை எட்டு நூல்கள் வெளிவந்துள்ளன. இன்னும் இரண்டு நூல்கள் இம்மாதம் (ஏப்ரல் மாதம்) 24ஆம் திகதி வெளியீடு செய்யப்படவுள்ளன. கொழும்பு அல்-ஹிதாயா மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில் அமைச்சர் ரிசாட் பதியுத்தீன் தலைமையில் இந்த வெளியீட்டு நிகழ்வு நடைபெறவுள்ளது. நான் எழுதிய முதலாவது நூல் ஷஒரு அபலையின் டயறிஎன்ற நாவலாகும். இரண்டாவது நாவல் ஒரு இராட்லணீயின் கதையாகும். இந்திய பிரபல பன்னூலாசிரியரான ஹிமானா செய்யதின் மல்லாரி பதிப்பகமும் பெண்கள் மாத இதழான நர்கிஸ் சஞ்சிகையும் இணைந்து நடத்திய சர்வதேச நாவல் போட்டியில் சிறப்புப் பரிசைப் பெற்றது. 37ஆம் நம்பர் வீடு, அவளுக்குத் தெரியாத இரகசியம்ஆகியன நாவல்களாகும். யதார்த்தங்கள் மீண்டும் ஒரு வசந்தம், இரு தீபங்கள் (சிறுகதை தொகுதிகள்) பொக்கிம் (கவிதைத் தொகுப்பு) ரோஜாக் கூட்டம் (சிறுவர் கதைகள்) சமூகமே பதில் சொல் (உளவியல் சார்ந்த அனுபவக்கட்டுரைகள்) இவை உட்பட மேலும் பிரசுரத்துக்காக பல நூல்களை எழுதிக்கொண்டு தான் இருக்கிறேன்.நான் மரணிப்பதற்கு முன்னர் அவையும் நூலுரு பெற வேண்டும் என்பதே எனது நித்திய பிரார்த்தனையாகும்.

**நீங்கள் எழுதிய முதலாவது நூலை வெளியிடும் போது உங்களுக்கு ஏற்பட்ட உணர்வு எப்படி இருந்தது?**

நான் முதலாவது எழுதியது ஒரு நாவல் தான். ஒரு அபலையின் டயறிஎன்பது அந்த நாவலின் பெயர். இந்த நாவல் மித்திரன் வார மலர் பத்திரிகையில் தொடர்கதையாக பிரசுரமானது. மிகவும் பிரபல்யமடைந்த இக்கதையை வாசிக்கும் வாசகர்கள் அதை ஒரு நூலாக வெளியிடும்படி என்னை கேட்டுக் கொண்டனர். அதனாலேயே அதனை நூலுருப் பெறச் செய்தேன். நூலாக வெளிவந்ததும் வாசகர்களிடையே அது பெரும் வரவேற்பைப் பெற்றது. பல்லாயிரம் வாசகர்களைப் பெற்றுத் தந்த நாவல் அது. எனவே தான் அதனை நான்கு முறை மறு பதிப்புச் செய்தோம். ஐந்தாவது முறையாகவும். ஒரு அபலையின் டயறிமறு பிரசுரம் தற்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. உண்மையில் இப்படி ஒரு வெற்றியை நான் கனவிலும் நினைக்கவில்லை. எல்லா புகழும் இறைவனுக்கே.

**நாவல் துறையில் உங்களுக்கு நாட்டம் ஏற்படக் காரணம் என்ன?**

எனது எழுத்துக்களும் கருத்துக்களும் இச் சமூகத்துக்கு நற்பலனை தரவேண்டும் என எனதுள்ளம் தீர்மானித்த பிறகு அதை சிறுகதைகள் கட்டுரைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் மாத்திரம் உள்ளடக்கம் செய்வது சாத்தியப்படவில்லை. ஒவ்வொரு சம்பவத்திலும் வெவ்வேறான படிப்பினைகளை கொடுப்பதாயின் அவற்றுக்கு விளக்கம் தேவைப்படுகிறது. அந்த விளக்கத்தைக் கொடுக்க நாவல் தான் சிறந்த வழி என எனக்குத் தோன்றியது. எனவே தான் வாழ்வியல் சார்ந்த அனுபவப்பதிவுகளை உள்வாங்கி கற்பனைகள் எனும் வர்ணம் தீட்டி நான் எழுதிய ஒவ்வொரு நாவல்களும் மகத்தான வெற்றியை கண்டவை என்பதில் மன நிறைவு கொள்கிறேன்.எனது நாவல்களுக்குக் கிடைத்த வரவேற்பும் வெற்றியும் தான் என்னை இன்னும் நிறைய நாவல்களை எழுத தூண்டுகோலானது.

**ஏனைய எழுத்தாளர்களின் நூல்களையும் நீங்கள் வாசிப்பதுண்டா?**

ஆமாம்! முடிந்த வரை வாசிப்பதுண்டு. மிகவும் திறமையான பல படைப்பாளிகள் நம் நாட்டில் உள்ளனர். சில படைப்பாளிகளின் இலக்கியங்கள் எமக்கு வியப்பை ஏற்படுத்தவதும்முண்டு. இது ஒரு புறம் மகிழ்ச்சி என்றாலும் மறுபுறம் சில இலக்கியவாதிகளிடையே இணக்கமின்மை கவலையை தருகின்றது. இலக்கியவாதிகள் என்போர் சமூக வாரிசுகளாகும். எனவே ஒருவருக்கொருவர் பேதங்களை மறந்து தமது தகுதி குறித்து உணர்ந்தாலே இணக்கங்கள் தானாய் மலர்ந்து விடும்.

**ஒரு நூல் பிரசுரம் என்பது ஒரு பிரசவத்துக்கு ஒப்பானது என்கிறார்களே.இது பற்றி?**

பிரசவ காலம் என்பது பத்து மாதங்கள் மாத்திரமே. ஆனால் என்னை பொருத்த வரை நூல் பிரசுரம் என்பது சிலவேளை பத்து மாதங்களையும் தாண்டி விடுகின்றன. இவ்வாறே ஒவ்வொரு உயிர்களுக்கும் மரணம் உண்டு. ஆனால் நூல்களுக்கு மரணம் கிடையாது. உலகம் அழியும் வரை எங்காவது ஒரு மூலையில் எமது நூல்கள் உயிர் வாழ்ந்துக் கொண்டிருக்கும் நாம் பிரசவிக்கும் சந்ததிகளை விட எமது நூல்களுக்கு ஆயுள் அதிகம்.

**முகநூலில் சதா உலா வரும் நீங்கள் இந்த முக நூல் பாவனையைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

உடனுக்குடன் புதுப்புதுச் செய்திகளை அறியத்தருவதோடு நமது ஆக்கங்களையும் சுடச்சுட கொண்டு சேர்க்கும் அதி வேக ஊடகமாகவே நான் இதனை கருதுகிறேன். நன்மைகளை நன்மைகளாக பயன்படுத்துபவர்களுக்கே அதில் நன்மை உண்டு. எதுவானாலும் ஒரு கட்டுப்பாடு தேவை. கட்டுப்பாட்டை மீறிய இந்த முகநூல் பாவனையால் தமது வாழ்க்கையை தொலைத்தவர்களுமுண்டு.

**இன்றைய இல்லத்தரசிகளுக்கு நீங்கள் கூற விரும்புவதென்ன?**

அக்கால பெண்கள் சமையலறையிலும் பிள்ளை வளர்ப்பிலும் மட்டுமே தமது பங்களிப்பை செய்தனர். ஆனால் இன்றைய பெண்களின் நிலை முற்றிலும் மாறுபட்டது. குடும்பக் கடமைகளை செய்துக் கொண்டே பல சாதனைகளையும் படைக்கிறார்கள். அதற்கு ஆண்களின் பங்களிப்பு பாராட்டத் தக்கது. பெண்கள் இச்சமுதாயத்தின் கண்கள் என்பது உண்மை தான். ஆயினும் ஆண்கள் இச்சமுதாயத்தின் தூண்கள் என்பது அதைவிட உண்மை. தந்தையாய் தனயனாய் கணவனாய் ஒவ்வொரு ஆணும் துணையிருந்தாலே பெண்களால் எதையும் சாதிக்க முடியும் என்பதே எனது திடமான நம்பிக்கையாகும். ஆண் துணை என்பது பெண்களின் பாதுகாப்பு கவசம் என்பதையும் பெண்கள் மறந்து விடக் கூடாது.

**இன்றைய இலக்கியவாதிகள் பற்றி உங்கள் கருத்தென்ன?**

இலக்கியவாதிகள் நல்லவர்கள் தான் தூரத்தில் இருக்கும் வரை மிக மிக நல்லவர்களாகவே தெரிகிறார்கள். நெருங்கிப்பார்த்தால் சிலரிடம் ஈகோவும் மாயையை காண முடிகிறது. அதனால் அவர்களது ஆக்கங்களை வாசிக்கும் போது ஏற்படும் மதிப்பும் மரியாதையும் சிதறிப்போய்விடுகின்றது. நமது எழுத்துக்களில் பிறக்கின்ற ஒவ்வொரு கருத்துக்கும் நம் வாழ்வியல் நடைமுறையிலிருந்து பிறக்க வேண்டும் என்பதே எனது கருத்து. இலக்கியவாதிகள் என்போர் சாதி மத பேதங்களை கடந்து எழுத்துக்களால் ஈர்க்கப்பட்ட ஒரே குடும்பத்தை போன்றவர்களாவர்.இவர்கள் தமது ஈகோவை களைந்து விட்டு ஒற்றுமையாக இணைய வேண்டும் என்பது இந்த சகோதரியின் ஆசை மட்டுமல்ல ஒளி அரசி மூலம் நான் விடுக்கும் அன்பான வேண்டுகோளுமாகும்.

முஸ்லிம் பெண் நாவலாசிரியையான ஜரீனா முஸ்தபாவின் இந்த அன்பான வேண்டுகோளுடன் நாமும் அவருக்கு நன்றி கூறி, ஒளி அரசியின் நட்சத்திர இல்லத்தரசியாக மட்டுமன்றி நாவல் துறையிலும் நட்சத்திரமாக ஜொலிக்க வாழ்த்துரைத்து விடை பெற்றோம்.

நேர்காணல்:-
கலாபூசணம் நூருல் அயின்
நஜ்முல் ஹுசைன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(69 ஆம் பக்க ஆங்கிலக்கதைக்கான கருத்து)

# இரண்டு குடங்கள்

| | | | |
|---|---|---|---|
| Cyclonic season- | புயல் காலம் | kindness - | அன்பு |
| Flood - | வெள்ளம் | bank - | கரை |
| drowned - | மூழ்குதல் | swim - | நீந்துதல் |
| copper - | உலோகம் | appearance - | தோற்றம் |

புயல் காற்றும் மழையும் காரணமாக எல்லா இடமும் வெள்ளமாக இருந்தது. பல வீடுகளும் வெள்ளத்தில் மூழ்கி இருந்தது. ஒரு வீட்டில் இருந்த ஒரு உலோக குடமும் ஒரு பிளாஸ்டிக் குடமும் வெள்ளத்தில் அடி பட்டு ஒரு நதியில் வீசப்பட்டது.

உலோக குடம் பிளாஸ்டிக் குடத்தை அழைத்து'' நண்பா, நீ பிளாஷ்டிக்கால் செய்யப்பட்டுள்ளாய், நீ பலமற்றவன் .தயவு செய்து என் அருகில் வா ,நன் உன்னை காப்பாற்றுவேன்'' என்றது.

பிளாஸ்டிக் குடம்'' உன்னுடைய அன்புக்கு நன்றி நண்பா ,எனக்கு சுயமாக நீந்த தெரியும், நான் கரைக்கு நீந்தி செல்வேன் '' என கூறி நீந்த தொடங்கியது.

உலோக குடமும் நீந்த முயற்சி செய்தது, ஆனால் நீர் உட்புகுந்து விட்டதால் நீரில் முழ்கியது. பிளாஸ்டிக் குடம் நீந்தி கரைசேர்ந்தது.

**போதனை : தோற்றத்தை வைத்து பலத்தை முடிவு செய்ய கூடாது.**

### பொது அறிவு விடைகள்

01. கிண்ணியா
02. சோமாலியா
03. ஹரிஸ் 13 ஆகும்
04. கலாநிதி ஹர்ஷா டி சில்வா
05. அதுல் கேஷாப்
06. 2017 பெப்ரவரி 03 இலிருந்து
07. இந்தோனேசியா
08. ரீட்டா ஐசாக் நாடியா
09. அமெரிக்கா
10. சிறிமெவன்பொடிநிலமே (இவர் தற்போது குருநாகல் வலயக் கல்விப்பணிப் பாளராக கடமையாற்றுகின்றார்)
11. நீதிபதி பிரியசாத்த டெப்
12. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆவார்
13. சித்திரவதை, தரக்குறைவான நடத்தைக் குட்படுத்த ப்படுதல், தண்டனை அளிக் கப்படுதல் ஆகியவற்றிலிருந்து பாதுகாப் பதை உறுதிப்படுத்தல்
14. எலுமிச்சைப் பழம்.
15. தினேஷ் குணவர்த்தனா

**உங்கள் புத்தி கூர்மையானதா?**

★ 36 பேர் ★ உங்களது பெயர்

### மொழிப் புலமைப்புதிர்

01. பண்ணிசை 02. கற்சிலை 03. நூலறிவு 04.மதுரகானம் 05. விடிவெள்ளி

### நுண்ணறிவு விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. 2 | 6. 4 | 11. 5 | 16. சோகம் - தாகம் |
| 2. 3 | 7. 3 | 12. 1 | 17. மானம் - தானம் |
| 3. 3 | 8. 5 | 13. 5 | 18. நேசம் - நாசம் |
| 4. 4 | 9. 5 | 14. 2 | 19. நஞ்சு - பஞ்சு |
| 5. 1 | 10. 5 | 15.வறுமை- பொறுமை | 20. எனது - தனம் |

**வித்தியாசத்தின் விடைகள்**

காகத்தின் கால், மீன் வால், பெரியவர் மீசை, வீட்டின் வாசல், சுவரில் செங்கல், நாய் வால், மரம், போஸ்டர் படத்தில் கண்ணாடி

**பலூன் தொகுதி விடைகள்**

ராஜ கோபுரம், கரிகால் சோழன், மாணிக்கவாசகர் திருச்செந்தூர், மணிமண்டபம்

**கண்டு பிடி!**

| | | | | |
|---|---|---|---|---|
| விதி | வாதி | திவாஸ் | தந்திரம் | விரல் |
| விதம் | வில் | சிவில் | தவி | வாரம் |
| விவாதம் | விசில் | வால் | தவில் | சிரம் |
| வாதம் | வாசி | தரம் | வாந்தி | ரசி |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்மையும் உண்மையும்

பெண்கள் வீட்டின் கண்கள்
சேமிப்பதில் தேன் வண்டுகள்
பெண்என்றால் பேயும் இரங்கும் அவள்
இல்லையென்றால் இல்லறமும் உறங்கும்.
கவிபாடினால் அவள் அரங்கம் பெண்
கலை அம்சம் நிறைந்த சுரங்கம்.
பொறுப்பதனால் பூமாதேவி
பொங்கி எழுந்தால் சுனாமி
இல்லறத்தில் வரம் கொடுக்கும் சாமி
நம் எல்லோருக்கும் பெண் தானே மாமி
கண்கண்ட தெய்வமாம் கணவன்
வேறு பெண்கொண்டு வந்தால்
தண்டனை கொடுப்பதில் அவள் ஆமி.
கோபப்பட்டால் சிங்கம்
அவளை கைநீட்டி அடித்தால்
ஆண்களுக்கே அசிங்கம் இதனால்
இருவருக்கும் இடையில் வரும் பங்கம்
கடைசியில் பாதிக்கப்படுவதென்னவோ
பிள்ளைகள் தானே எங்கும்.
கற்பை காப்பதில் நெருப்பு.
வேறுயாரும் தொட்டால்
கழற்றிக் காட்டுவாள் செருப்பு.
கிச்சினுக்கு அவள்தான் பொறுப்பு
நீ அவளிடம் காட்டினால் வெறுப்பு
கறிக்குள் அவள் அள்ளிப் போட்டால், உப்பு
உண்டு பாருங்கள் தொடர்ந்து
உங்களுக்கு வருமே மாரடைப்பு

நவரசங்கள் நிறைந்த பார்வை அதனால்
தன் நாயகனுக்கு போடுவாள் போர்வை.
யுகயுகமாய் வந்தது இந்தப் பெண்மை
மலருக்கும் ஒப்பிடுவது பெண்ணை
ஏனென்றால் அவளின் தன்மை மென்மை
கலை மானிடம் பெற்றாளோ கண்ணை
காந்தம் போல் இழுக்கும் தன்மை.
உலகத்தின் முதல் பெண் பிரதமர் சிறிமா
உள்ளத்தில் அன்பு சுரக்க
சேவை செய்தவர் அன்னை தெரசா.
பெண்ணைப் போற்றுவோம்,
பெண்மையை மதிப்போம்.



கனகசபை லோகநாதன்

இம்மாத கவிஞர் அறிமுகப் பகுதியை அலங்கரிப்பவர் மட்டகளப்பு மாமாங்கத்தை சொந்த இடமாகவும் கொழும்பு 06 ஐ வசிப்பிடமாகவும் கொண்ட ஜனரஞ்சக கவிஞர் லோகநாதன். கவிஞர்களின் குவிவிடமான அமிர்தகழியின் இன்னொரு பொக்கிசமே இவராவார். இவர் ஒரு ஆட்டோ சாரதியாக தொழில் புரிந்துகொண்டு கவிபுலமையில் வல்லவராக இருப்பது இவரது கலைத் திறமைக்கு மகுடம் சூட்டுகிறது. இவர் அண்மையில் வகவ அரங்கில் பாடிய கவிதை எல்லோர் மனங்களையும் கொள்ளை கொண்டது குறிப்பிடத்தக்கது இக்கவி உங்களுக்காக.

ஜனதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கறுப்பாக இருக்கும் பெண்களுக்கான விசேட அழகுக்குறிப்பு..

இந்த உலகில் அழகாக இருக்க வேண்டும் என்று நினைக்காதவர்கள் எவரும் இருக்க முடியாது. அவ்வாறு அழகாக இருக்க வேண்டும் என்பதற்காக அழகு நிலையங்களுக்குச் சென்று அழகுபடுத்திக் கொள்கின்றனர். பெரும்பாலும் அழகு நிலையங்களுக்குச் சென்று அழகுபடுத்துவதில் முதல் காரணமாக இருப்பது, கறுப்பாக இருக்கிறோம் என்பதே. இவ்வாறு கறுப்பாக இருப்பதற்கு முதல் காரணம் உடலில் இருக்கும் நிறமி செல்களான மெலனின் அளவு அதிகமாக இருப்பது. அவ்வாறு அதிக நிறமிசெல்கள் உடலில் இருந்தால் அந்த இடமானது கருப்பாக இருக்கும். சிலர் திடீரென்று கறுப்பாக மாறுவார்கள், அதற்கு அவர்களது உடலில் உள்ள நிரமிச் செல்கள் அதிக அளவு மெலனினை சுரப்பதே காரணம்.

அதுமட்டுமல்லாமல் இத்தகைய செல்களின் சுரப்புத் தன்மையை குறைவுபடுத்த பல கெமிக்கல் கலந்த அழகு சாதனப் பொருட்கள் இருந்தாலும், வீட்டில் இருந்தே சில இயற்கையான பொருட்களை பயன்படுத்தினால் சருமமானது அழகோடு இருப்பதுடன், மெலனின் அளவையும் கட்டுப்படுத்தலாம் என்று அழகியல் நிபுணர்கள் கூறுகின்றனர்.

★ பாதாம், பால் மற்றும் தேன் போன்றவை சருமத்திற்கு ஏற்ற சிறந்த பொருள். ஆகவே 3,4 பாதாம் பேஸ்ட், 1/2 டேபிள் ஸ்பூன் பால் மற்றும் 1 டேபிள் ஸ்பூன் தேன் சேர்த்து நன்கு கலந்து கொள்ளவும். பின் அந்த பேஸ்டை முகத்திற்கு தடவி, 30 நிமிடம் ஊற வைத்து பிறகு கழுவவும். இதனை தொடர்ந்து செய்தால் முகத்தில் இருக்கும் கருமை மறையும்.

★ 2 / 3 டேபிள் ஸ்பூன் பால் மற்றும் 1 டேபிள் ஸ்பூன் தேன் சேர்த்து நன்கு கலந்து, முகத்தில் தடவி ஊற வைத்து குளிர்ந்த நீரில் அலசி வந்தால், முகத்தில் இருக்கும் கரும் புள்ளிகள் போவதோடு, முகமும் பளிச் சென்று இருக்கும்.

★ சந்தன பவுடர் சரும பராமரிப்பிற்கு ஏற்ற பொருள். அதனை தண்ணீரில் குழைத்து, கருமை அதிகமாக இருக்கும் இடத்தில் தடவ வேண்டும். வறண்ட சருமம் உள்ளவர்கள், அதோடு பால் மற்றும் சிறிது தேனை சேர்த்து கலந்து தடவி, 10 / 15 நிமிடம் ஊற வைத்து கழுவவேண்டு. இதனை நாள்தோறும் செய்து வந்தால், நாளடைவில் நிறமி செல்களான மெலனின் அளவு குறைந்துவிடும்.

★ கோக்கோ வெண்ணெய் ஒரு நல்ல மாஸ்சுரைசர் மற்றும் ஆன்டிஆக்ஸிடன்ட் நிறைந்த பொருள். அது விரைவில் மெலனின் அளவை சரிசெய்யும். மேலும் எந்த இடம் அதிகமான அளவு கறுப்பாக உள்ளதோ, அந்த இடத்தில் தடவி, 10 நிமிடம் ஊற வைத்து கழுவி வந்தால் நல்ல பலன் கிடைக்கும். அதனை செய்தால் உடலில் இரத்த ஓட்டத்தின் அளவு அதிகரிக்கும்.

மேலும் இது செல்கள் பாதிப்படையாமல் காத்துக் கொள்ளும். இந்த முறை உடலுக்கு விரைவில் நல்ல நிறத்தைக் கொடுக்கும். மேற்கூறியவாறெல்லாம் செய்தால் உடலில் அதிகமாக இருக்கும் மெலனின் அளவு குறைவதோடு, முகமும் அழகாக பொலிவோடு இருக்கும்.

நன்றி இணையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆளற்ற வீட்டிலிருந்து அழுகுரல்

04

இயலாதவனாய் சோபா செற்றியில் அமர்ந்தான். அவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அவனது முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிந்தது.மூக்கிலிருந்து வடியும் இரத்தம் தொடர்ந்து கொண்டேயிருந்தது. அவனது சேர்ட் முழுவதும் நனைந்து விட்டது. இரத்த வாடை அவனுக்கு மீளவும் தலைச்சுற்றை ஏற்படுத்தியது. சோபா செற்றியில் தலையை சாய்த்தவனாக அமர்ந்திருந்தான். அவன் காலில் ஏதோ ஒன்று தட்டுப்பட்டது. அது முனகல் சத்தத்தை வெளிப்படுத்தியது. அவனுக்கு வீடே சுற்றுவது போல இருந்தது. முனகல் சத்தம் மட்டும் காதில் கேட்ட வண்ணமிருந்தது.

இத் துயரங்களுக்கு மத்தியில் நின்று போன கரண்ட் மீண்டும் அதி கூடிய வேகத்தில் வந்ததால் எரிந்து கொண்டிருந்த மின்குமிழ்கள் படீர் படீர் என வெடித்துச் சிதறியது. அதனால் திடுக்குற்ற அவனால் எழுந்து அந்த சுவிச்சை ஓவ் பண்ண முடியவில்லை. அதிகரித்த கரண்டினால் பல்ப்புக்கள் மட்டுமல்ல சுற்றிக்கொண்டிருந்த மின்விசிறியும் புகைக்க ஆரம்பித்தது. எரிந்த வாடை அவன் மூக்கின் சுவாசத்திற்கு வந்தது. அது எங்கிருந்து வருகிறது என்று அறிய முடியவில்லை. இருப்பினும் அது வேறு ஒன்றுமில்லை. சுற்றிக்கொண்டிருந்த மின் விசிறியின் மோட்டரே எரிந்து மணத்தது. பாவம் ஒன்றன் பின் ஒன்றாக அவன் வாழ்வில் எத்தனை இழப்புக்களைதான்சந்திப்பது. பைத்தியமாக சுற்றிக்கொண்டிருக்கும் தங்கராசுவைப் போல் ஆகிவிடுவேனோ என மீண்டும் பயம் கொண்டான். பயப்பிடாதே உனக்கு எதுவும் நடக்காது என தேற்றுவதற்கு யார் தான் இருக்கிறார்கள் அவனுக்கு.

ஹோலில் உள்ள அனைத்து பல்ப்புகளும் வெடிக்க மூலையில் இருந்த ஒரு பல்ப் மட்டும் லேசாக மின்னிக்கொண்டிருந்தது. இருட்டு வீட்டிலே குறுட்டு வெளிச்சமாக இருந்தாலும் ஓரளவுக்கு வீட்டின் கோலில் உள்ள அனைத்தும் தெரிந்தது.

அதற்கு எதிர்ப்புறத்தே கறுப்பாக ஏதோ ஒன்று நிற்பதைக் கண்டு கொண்டான். அது என்னவாக இருக்கும். தனது கண்களை நன்றாக துடைத்தபடி பார்த்தான். ஒரு பெண் பின்பறமாக நிற்பதைப் போல் இருந்தது. சோபாவில் அமர்ந்திருந்த அவனுக்கு அந்த உருவம் தெரிந்து கொண்டேயிருந்தது. தலை விரி கோலமாக நிற்பதும் சேலை உடுத்தியிருப்பது போலவும் அது காற்றிலே பறப்பது போலவும் இருந்தது. அவ்வப்போது அந்த உருவம் ஆடுவது போலவும் இருந்தது. அது சிகரெட் புகைப்பது போல புகை மேலெழும்பிக் கொண்டிருந்தது. ஆனால் புகை ஓய்வின்றி வந்து கொண்டிருந்தது. இவனுக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தியது.

இதை ஒருக்கா பார்த்துவிட வேண்டியது தான் சமாளித்தவாறு எழுந்தான்.எழுந்து பார்க்கும் போது அவ்வுருவத்தைக் காண முடியவில்லை. அதற்குள் எங்கே போனது சுற்றும் முற்றும் பார்த்தான். ஒன்றையும் காணவில்லை. ஆனால் அவன் இன்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுடைய காலடியை பார்க்கவில்லை. மீளவும் சோபாவில் அமர்ந்து பார்த்தான். உருவம் தெரிந்தது. மீளவும் எழுந்து பார்த்தான். தெரியவில்லை. இருக்கும் போது தெரிகிறது எழுந்து நிற்கும் போது தெரியவில்லை. எரிந்த வாடை வரும் பக்கம் நோக்கித் திரும்பினான். என்ன எரிந்து மணக்கிறது. கண்டுபிடித்து விட்டான். தனது வீட்டில் இருந்த ஸ்ரான்ட் பான் சுவிச் போடப்பட்டிருந்தமையால் அதிகரித்து வந்த கரண்டினால் அது எரிந்து புகைவர ஆரம்பித்தது. அதன் மணமே அவனுக்கு முன்பு மூக்கைப் பிளந்தது. அதனை அணைத்து விட்டு பானை தூக்கி வேறு இடத்தில் வைத்துவிட்டான்.

மின்னும் ஒரு பல்ப்பின் துண்டு அவன் காலை பதம் பார்த்தது. அது அவன் கால்களில் ஏறிக்கொண்டது. ஆ. என அலறியபடி மெல்ல வந்து சோபாவில் அமர்ந்து கொண்டான். குத்திக்கொண்டிருந்த பல்ப்பின் துண்டுகளை காலில் இருந்து எடுத்தான். இப்போது காலிலும் காயம் ஏற்பட்டுவிட்டது. அந்த உருவம் நிற்கிறதா எனப் பார்த்தான் அப்போது அந்த உருவத்தை காணவில்லை. முன்பு இருந்த உருவம் எங்கே? நான் எழுந்து போன போது எங்காவது ஓடிவிட்டதா? சுற்றும் முற்றும் பார்த்தான். மறுபடியும் வேறு ஒரு இடத்தில் அவ் உருவம் தெரிந்தது. ஆனால் அது இப்போது புகைப்பிடிக்கவில்லை. உருவத்தில் மாற்றம் மட்டும் ஏற்பட்டிருந்தது. இப்போது தலைமயிரை காணவில்லை. ஆனால் கர்ப்பிணிகளை போல் வயிறு மட்டும் பெரிதாக காணப்பட்டது. இது என்னவாக இருக்கும். இண்டைக்கு முடிவு காண வேணும் உறுதியாக இருந்தான். கரண்ட் அப்போது சீர்நிலைக்கு வந்துவிட்டது. மின்னிய பல்ப் வெளிச்சத்தைக் கொடுக்க கோல் முழுதும் ஓரளவு தெளிவாகத் தெரிந்தது. இப்போது அந்த உருவம் தெரிகிறதா? இல்லையே வெளிச்சத்தைக் கண்டதும் எங்கோ மறைந்து விட்டது போலும். தலைச்சுற்றுக்கு மத்தியில் யோசிக்க ஆரம்பித்தான்.அப்போது தான் அந்த உருவம் என்னவென்று பிடிபட்டது. வேறு ஒன்றும் இல்லை. மின்னும் வெளிச்சத்தில் பெண் போல தெரிந்தது அவன் வீட்டில் புகைந்து கொண்டிருந்த ஸ்ரான் பான் அதை எடுத்து வேறு இடத்தில் வைக்கும் போது வடிவம் மாறித்தென்பட்டது. மர்மத்தை கண்டு பிடித்ததும் அவன் மனம் சாந்தி அடைந்தது. கொஞ்சம் நிம்மதி. மீளவும் அனுங்கல் சத்தம். காலில் குளிர்வது போல ஓர் உணர்வு இப்போது வெளிச்சம் இருக்குத்தானே. குனிந்து பார்த்தவன் அதிர்ந்து போனான். அவன் கண்களில் இருந்து கண்ணீர் சொரிய ஆரம்பித்தது. நான் இப்போ அநாதை இல்லை என சொல்லி அழுதுகொண்டிருந்தான். அப்படி என்ன நடந்தது? ஏன் அழுகின்றான்? இவன் வடிக்கும் கண்ணீர் ஆனந்தக் கண்ணீரா? அல்லது துக்கத்தினால் வரும் கண்ணீரா?

நான் இனி அநாதை இல்லை, என அரற்றிக் கொண்டு வெளியே ஆஸ்பத்திரிக்குப் போக எழுந்தான். அவன் கண்ட விடயம் அவன் மனதுக்கு சந்தோசத்தை ஏற்படுத்தியது. இழந்து விட்ட ஏதோ ஒன்றைப் பெற்றுவிட்டான். ஆனாலும் மூக்கிலிருந்து ரத்தம் வடிவது நிற்கவில்லை. பாதத்தையும் சீராக நிலத்தில் வைக்க முடியவில்லை. நொண்டியவாறு கதவை அடைந்தான். சிரித்தபடியே கதவைப் பூட்டியவன் மீள கதவைத் திறந்து நீயும் வாறியா? வரப்போறியா? என கேட்டான் பின் கதவை பூட்டிவிட்டு காரை நோக்கி நடந்தான். தலை சுற்றுகிறது தான் ஆனாலும் பெரிதாக தெரியவில்லை அவனுக்கு..


அப்படி யாரை வெளியே வரும்படி அழைத்திருப்பான்.? உள்ளே என்ன தான் இருந்தது? யாரை நீயும் வாரியா? என மகிழ்வுடன் அழைத்தான்? அவன் முகம் பூரிக்க காரணம் யாது? மறு இதழில் பார்ப் போம்.

**தொடரும்** வட முனையிலிருந்து அபூர்வன்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




விடைகள் 63 ஆம் பக்கத்தில்



இரண்டு படத்திற்கும் இடையேயுள்ள 8 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை மூலம் ஆங்கிலம் கற்போம்

# THE TWO POTS



It was a cyclonic season .There was flood everywhere. Many houses drowned in the flood. There was a copper pot and a plastic pot in a house .Both these were washed away in the flood to a river.

The copper pot called the plastic pot and said ," My friend ,you are made of plastic .you are so weak. Please ,come near me .I'll save you."

The plastic pot replied ."Thank you for your kindness ,my friend .But ,.let me swim to the bank by myself". The plastic pot began to swim towards the bank of the river .

As the plastic pot tried to swim. water got filled into the pot and the copper pot drowned. But plastic Pot reached the bank.

**WEAKNESS IS NOT IN APPEARANCE.**

தமிழ் மொழிபெயர்ப்பு - 63 ஆம் பக்கத்தில்

---

# கண்டு பிடியுங்கள்!

அருகே கொடுக்கப்பட்டுள்ள எழுத்துக்களிலிருந்து குறைந்தது 20 வார்த்தைகளை கண்டுபிடியுங்கள்




விடைகள் 63 ஆம் பக்கத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்ட மாற்றங்களுக்காகத் துணிவோம் என்னும் தொனிப்பொருளில் அமைந்த மகளிர் தின விழா அண்மையில் வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வின் ஒரு பகுதியாக ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கான யாப்பு சீர்திருத்த கோரிக்கைக்கான கையெழுத்து வேட்டையும் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. காலத்தின் தேவையை நிறுவியுள்ள நிகழ்வின் ஏற்பாட்டு குழுவினருக்கு எமது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.



கடந்த பெப்ரவரி மாதம் ஒளிஅரசியின் குழுமத்தலைவரின் நிதிப்பங்களிப்புடன் இயங்கும் சரவணபவன் அறக்கட்டளை நிலையத்தின் ஒன்பதாவது அணிக்கான கைத்திறன் பயிற்சி வகுப்புகள் வட்டுக்கோட்டையில் ஆரம்பிக்கப்பட்டது. அதில் பங்குபற்றும் பயனாளிகள்.

கடனுக்கான வட்டி என்பது மக்களை விழுங்கும் இன்றைய சூழலில் மாளிகைக்காடு ஜூம்மா பள்ளிவாசல் நிர்வாகத்தினர் வட்டியின் பக்கமிருந்து மக்களை மீட்கும் செயற்பாடாக சாய்ந்தமருது மக்தப் அத்- தகாபுல் என்னும் வட்டியில்லா வங்கிச்சேவையை அங்குரார்ப்பணம் செய்துள்ளனர். பாதுகாப்பு மற்றும் இஸ்லாமிய அடிப்படையில் அமைந்த இவ்வங்கிச்சேவைக்கு ஒத்துழைப்பு வழங்கிய பள்ளிவாசல் நிருவாக சபை, சாய்ந்தமருது மாளிகைக்காடு உலமாசபை, பைத்துஸ்-ஸக்காத், வர்த்தக சங்கம், வர்த்தகர்கள் மற்றும் தனவந்தர்கள் அனைவருக்கும் எமது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SPECIALIZED IN WEDDING CARDS




## Available Places

**Kilinochchi**
Velan Printers / Siva Pathippagam

**Vavuniya**
Kalaimagal Printers / Vanni Quick Printers

**Batticaloa**
Aathavan Printers / New Keen Printers
United Book Shop

**Yatiyantota**
Swarna Print

**Matale**
VJ Printers

**Thalawakala**
Geetha Press / Harani Printers
Umaiyal Printers

**Trincomalee**
Sun Printers / New Uthayan Printers

**Paruththithurai**
Jeevan Printers

**Kaludawalai**
Maaruthi Printers

**Nuwara Eliya**
Nuwara Eliya Printers
Apeksha Offset Printers
Laxmi Printers

**Puttalam**
Serendip Printers

**Kandy**
Vino Printers

## Wedding Cards : Print & Sale

## CTP & Colour Separation

**United Creation**

51A, Negombo Road, Peliyagoda.
Tel : 0112 938 083, 0115 767 309
Mobile : 0777 347 452
Email : unitprintek@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org